marxist.tncpim.org 999 477 6471

நவம்பர் 2018, விலை ரூ.15.00

மார்க்சிஸ்ட்

தத்துவார்த்த மாத இதழ்

2018 ஜனவரி முதல் ஒலி இதழாகவும் வெளியாகிறது



இந்தியாவில் அறிவியலும் சமூகமும் தத்துவமும்

தனித்துவம் மிக்க நவம்பர் புரட்சி

கியூபாவின் புதிய அரசியலைப்புச் சட்டம்

மார்க்சிஸ்ட் தத்துவார்த்த மாத இதழ்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழாக்கம் - *மின்னூல் வெளியீடு :*

FreeTamilEbooks.com

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/marxist_-monthly_journal_november2018

மின்னூலாக்கம் - அ. அருந்தமிழ்யாழினி - aruntamilyazhiniaravindan@gmail.com

This Book was produced using LaTeX + Pandoc

பொருளடக்கம்

1. இந்தியாவில் அறிவியலும், சமூகமும், தத்துவமும் 5
2. இந்திய தத்துவ மரபு – உண்மை வரலாறு 18
3. "தி யங் கார்ல் மார்க்ஸ்" – மானுட விடுதலைக் கதாநாயகர்களின் இளமைக் கால போராட்டம் 28
4. உழைக்கும் வர்க்கமும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகமும் 33
5. தனித்துவம் மிக்க நவம்பர் புரட்சி 48
6. கியூபாவிற்கான புதிய அரசியலமைப்பு சட்டம் 57

1. இந்தியாவில் அறிவியலும், சமூகமும், தத்துவமும் ...

இந்தியாவில் சமூகமும், அறிவியலும், தத்துவமும் என்பதை ஒரு தொடர்ச்சியாகவே நான் பார்ப்பேன். இந்த தொடர்ச்சி சில சமயங்களில் தடைப்படலாம். ஆனால் தொடர்ச்சி இருந்து கொண்டிருக்கும். அந்த தொடர்ச்சியானது, இந்திய மக்கள் தாங்களே வளர்ந்து வருகிறார்கள் என்பதேயாகும். நாம் 1994 ஆம் ஆண்டிற்கு வரவேண்டும். 21 ஆம் நூற்றாண்டுக்கான பார்வையை வசப்படுத்தி செயல்படவேண்டும் என்கிறேன்.

இ.எம்.எஸ். நம்பூதிரிபாட்

தமிழில் இரா.சிந்தன்

(தேவி பிரசாத் சட்டோபாத்யாயா நினைவு கருத்தரங்கில் தோழர் இ.எம்.எஸ். முன்வைத்த ஆய்வுரை)

(ஆங்கில மார்க்சிஸ்ட் ஜனவரி – மார்ச் 1995 இதழில் வெளியானது.)

மறைந்த தேவி பிரசாத் சட்டோபாத்யாயா நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விழாவில் இணைந்து கொண்டிருப்பது, எனக்கு பெருமிதமும், பெருமகிழ்வும் தருகிறது.

தேவி பிரசாத் ஒரு முன்னோடி – இந்திய தத்துவ சிக்கல்களுக்கு (தீர்வு காண்பதில்) மார்க்சிய சித்தாந்தத்தை பொருத்துவதில் அவர் ஒரு முன்னோடி என்று குறிப்பிடுவேன். அவருக்கும் முன்னதாக, மார்க்சிய சித்தாந்தத்தின் இன்னொரு முன்னோடி இருந்தார். அவர்தான் டி.டி.கோசாம்பி. கோசாம்பியும்,தேவி பிரசாத்தும் தத்துவச் சிந்தனையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ரொமிலா தாப்பர், ஆர்.எஸ். சர்மா மற்றும் பலர் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

நான் மேற்கண்ட துறைகள் எவற்றிலும் நான் வல்லுநர் என்று கூறிவிட முடியாது. நானொரு அரசியல் செயல்பாட்டாளன். இந்திய பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் செயல்பாட்டாளனாக இருக்கிற காரணத்தால், தத்துவம், அரசியல் பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், அழகியல் உள்ளிட்ட அனைத்து

துறைகளையும் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. மேற்கண்ட பாடப் பொருள்களை உள்வாங்கி நிறைய கற்றுக்கொண்டேன். அந்த வகையில் சில கண்ணோட்டங்களை எடுத்துரைக்கிறேன்.

இந்தியாவில் தத்துவமும், அறிவியலும் குறித்து உரையாடுவதற்கான இந்தக் கருத்தரங்கின் தலைப்பிற்குள் மட்டும் நின்று நான் பேசப் போவதில்லை. பண்டைக் காலத்திலிருந்து ஜூலை 10, 1994 வரையிலான காலத்தில் இந்தியாவில் தத்துவமும், அறிவியலும், சமூகமும் குறித்ததாக என் பேச்சினை அமைத்திருக்கிறேன்.

எனது உரையின் நோக்கம் இதுதான். ஏன் அப்படி? ஏனென்றால், நான் ஒரு கல்வியாளன் அல்ல; அரசியல் செயல்பாட்டாளன். பன்னெடுங் காலமாய், தத்துவவாதிகள் இப்பேரண்டத்தை பல வழிகளில் விளக்கியுள்ளனர். செய்ய வேண்டியது என்னவெனில், அதனை மாற்றியமைப்பதுதான் என்ற மார்க்சிய முன்மொழிவை ஏற்றுக்கொண்டுள்ள ஒருவன்.

மிகப்பெரும் பங்களிப்புகளை நமக்குக் கொடுத்து உயர்ந்து நிற்கும் சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ். ஆனால் அவர் நடைமுறையில் புரட்சிகர செயல்பாட்டாளராகவும் இருந்தார். அவர் தனது தத்துவ எழுத்துகளின் வழியே உலகைப் புரிந்துகொள்ளவும், தனது நடவடிக்கைகளின் வழியே அதனை மாற்றியமைக்கவும் முயன்று கொண்டிருந்தார்.

கார்ல் மார்க்சின் தத்துவ எழுத்துகளின் தரத்தோடு என்னை ஒப்பிட்டுக் கொள்ளவில்லை. தத்துவம் குறித்த எனது புரிதல் நேரிடையானதல்ல. நானே சொந்தமாக மேற்கொண்ட தத்துவப் பாடம் ஏதுமில்லை. இந்திய தத்துவம் பற்றி பேசும்போது, நான் கோசாம்பி, தேவி பிரசாத் உள்ளிட்டவர்களிடம் நிறைய கற்றுக் கொண்டேன். மார்க்சிய கல்வியாளர்களான கோசாம்பி, ரொமிலா தாப்பர், ஆர்.எஸ். சர்மா மற்றும் பலரிடமிருந்து இந்திய வரலாற்றையும். இந்தியக் கல்வியாளர்கள் பலரிடமிருந்து, அரசியல் பொருளாதாரத்தையும் கற்றுக் கொண்டேன்.

ஆனால், பெரும்பாலும் எனது கல்வி, செயல்பாடுகளின் வழியாகத்தான் நடந்தது. அந்த செயல்பாடுகள் எனக்கு ‘இந்தியாவின் நிகழ்காலமும் எதிர்காலமும் என்ன?’ என்ற கேள்வியை என் முன் எழுப்பின. அந்தக் கேள்வி உங்களுக்கும்

எழ வேண்டும். இப்போதைய நிகழ்கால அரசியலுக்குள் நான் செல்லவில்லை, ஒருமுறை பண்டித நேரு எழுப்பிய கேள்வியை இங்கே திண்ணமாக எழுப்பலாம். "இந்தியா எங்கே இருக்கிறது, எங்கே செல்கிறது"

பழமையை மீட்டமைத்தல்:

இந்தக் கேள்விகளை அவர் 1930களின் தொடக்கத்தில் எழுப்பினார். இந்தக் கேள்வியை 1994 ஆம் ஆண்டில் நான் மீண்டும் கேட்கும்போது, எனக்கு முன்னே எழும் பலதரப்பட்ட பார்வைகள் எழுகின்றன. அவற்றில் ஒன்றாக பழமைக்குத் திரும்புவதும் இடம் பெற்றிருக்கிறது.

பழமைக்குத் திரும்புவது என்றால், உபநிடதங்களின் இந்தியா; வேதங்களின் இந்தியா; அதுதான் மெய்யான இந்தியா என்பதாகும். அதனைத் தொடர்ந்து முஸ்லிம் இந்தியா, கிறித்துவ (ஆங்கிலேய) இந்தியா, மார்க்சிய இந்தியா ஆகியவையும் வருகின்றன.

இவையெல்லாமே அன்னிய சித்தாந்தங்கள்; இந்து வாழ்க்கை வழிமுறை மட்டுமே இந்தியாவுடையது என்ற கருத்தாக்கமானது ஒரு சித்தாந்தம் என்ற நிலையில் மட்டும் நின்று மறைந்து விடவில்லை, அது நடைமுறையிலும் பொருத்தப்படுகிறது. மகாத்மா காந்தியை படுகொலை செய்த நடைமுறையில் அதனை நாம் கண்டுணர்ந்தோம், அண்மையில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதில் கண்டோம். மதுராவிலும் வாரணாசியிலும் மேலும் 3 ஆயிரம் இடங்களிலும் அமைந்துள்ள மசூதிகளை இடித்து நொறுக்குவோம் என்ற அச்சுறுத்தல்களிலும் அதனை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தமட்டில் அது இந்திய விரோத சித்தாந்தமாகும். மேற்கண்ட கருத்தை கைக்கொண்டுள்ளவர்கள் தாங்கள் இந்திய சித்தாந்தத்தை கைக்கொண்டிருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் அது இந்திய விரோத தத்துவம் என்ற வாதத்தை நான் வைக்கிறேன்.

ஏன் அவ்வாறு சொல்கிறேன்? பலவகைப்பட்ட சமூகங்களின் கலப்பாகவும், கலாச்சாரங்களும் இந்தியாவில் உள்ளன. இந்த நாடு பல மதச் சமூகங்களை ஒருங்கே கொண்டுள்ளது. இந்து சமூகத்தில் பல சாதிகள் உள்ளனர். பழங்குடிகள், மொழி, பண்பாட்டுக் குழுக்கள் இங்கே உள்ளனர். இந்த மண், வேற்றுமையில் ஐக்கியம்

கொண்ட மண்ணாகும். இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் பீடத்தில் ஏற்றி, இதுதான் இந்தியா என்று சொல்வது இந்திய விரோதமே என்பேன். செயலூக்கம் மிக்க இடதுசாரி அரசியல்வாதியாக 60 ஆண்டு அரசியல் வாழ்க்கையில் நான் கண்டடைந்த புரிதல் இதுதான். எனது மேற்கண்ட புரிதலில் இருந்துதான் இந்திய தத்துவம் எதிர்கொண்டுவரும் சிக்கலையும் பார்க்கிறேன்.

நான் அதனை மேற்கொள்ளும்போது, (எனக்குள்) தேவிபிரசாத் எழுப்பிய கேள்வியை எழுப்பிக் கொள்கிறேன். இந்தியாவில் பொருள்முதல்வாத பாரம்பரியம் இருந்துவந்ததா? தேவிபிரசாத் தனது புகழ்பெற்ற உலகாயதம் என்ற புத்தகத்தை எழுதுகிறவரை நம்மிடம் நிலவிவந்த கருத்துப்பதிவு இதுதான். ஐரோப்பியக் கண்டம் எப்போதும் ‘பொருள்முதல்வாதக்’ கண்ணோட்டத்திலேயே இருந்து வந்தது. இந்தியா எப்போதும் ‘கருத்துமுதல்வாதக்’ கண்ணோட்டம் கொண்டதாக இருந்துவந்தது என்றுதான் பன்னாட்டு, இந்நாட்டு அறிஞர்கள் என அனைவருமே கருதினார்கள்; கூறிவந்தார்கள். இந்தக் கருத்தாக்கத்தை தேவிபிரசாத்தின் ஒற்றைப் படைப்பான உலகாயதம் சுக்குநூறாக்கியது.

சுமார், 40 ஆண்டுகளுக்கு முன் அந்தப் புத்தகத்தை வாசித்தபோது எனது சிந்தனையில் வெளிச்சம் பரவியது. இந்தியாவுக்கும் பொருள்முதல்வாத வரலாறு உண்டு. கிரீஸ், ரோம் போன்ற பிற ஐரோப்பிய நாகரீகங்களைப் போலவே இந்தியாவின் பண்டைச் சமூகத்திலும் கருத்துமுதல் வாதத்திற்கும், பொருள்முதல்வாதத்திற்கும் இடையிலான போராட்டம் காணப்பட்டது. உலகாயதம் மட்டுமல்ல; தேவிபிரசாத்தின் மற்ற பல படைப்புகளும் இந்தச் சாரத்தை உறுதிப்படுத்துகின்றன. “இந்திய தத்துவத்தில் அழிந்து போனவையும், நிலைத்திருப்பவையும்” என்ற புத்தகம் லோகாயதம் என்ற புத்தகத்தின் விரிவாக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட பதிப்பாகும். அது பண்டை இந்தியாவில் பொருள்முதல்வாதம் மற்றும் அவற்றின் வர்க்க வேர்களைக் குறித்து விரிவாக விவரிக்கிறது.

மாறுபடும் உலகக் கண்ணோட்டங்கள்:

பொருள்முதல்வாதம் எங்கிருந்துஎழுகிறது? கருத்துமுதல்வாதம் எங்கிருந்துஎழுகிறது? அவைகளுக்கு இடையிலான போராட்டம் எங்கே

நடக்கிறது? பண்டைக்கால மற்றும் இடைக்கால இந்தியாவில் பொருள்முதல்வாதம் எவ்வாறு வீழ்த்தப்பட்டது? இவற்றைக் கண்டறிய விரும்பும் எவரும், வர்க்கப் போராட்டங்களை நோக்கி நகர வேண்டும்.

இயற்கையோடு உழைத்துவந்த மக்கள்தான், இயற்கையின் பல்வேறுபட்ட போக்குகளையும் நெருங்கிப் புரிந்து கொண்டார்கள். அவர்கள்தான் பொருள்முதல் வாதத்தைப் படைத்தார்கள் என தேவிபிரசாத் குறிப்பிடுகிறார். அவர்களின் உலகக் கண்ணோட்டமானது பொருள்முதல்வாத நோக்கில் அமைந்தது.

மறுபக்கம், பண்டை கிரேக்கத்தில் அடிமைகளை உடைமையாகக் கொண்டிருந்த சிறுபான்மை எண்ணிக்கையினர் இருந்தார்கள். இந்தியாவில் அவர்கள் இருபிறப்பாளர்களாக அறியப்பட்டனர். (துவைதர்கள் என அழைக்கப்பட்ட வர்ணங்கள் பூணூல் அணியும் சடங்கு மேற்கொண்டு, அதன் மூலம் இரண்டாவது பிறப்பெடுக்கின்றனர் என்ற நம்பிக்கையில் இருந்து இந்தப் பெயர் வருகிறது)பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசியர்கள்தான் அந்த இருபிறப்பாளர்கள். அவர்களே சுரண்டும் வர்க்கங்களாக அமைந்திருந்தனர். அவர்களுக்கு இயற்கையின் நிகழ்வுப் போக்குகளுடன் உயிரோட்டமான தொடர்பு எதுவும் இல்லை. எனவே அவர்களுடைய உலகக் கண்ணோட்டம் ஊகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதிலிருந்துதான் கருத்துமுதல் வாத தத்துவப் போக்கு எழுந்தது.

சாமானிய மனிதனைப் பொறுத்தமட்டில், அவர்கள் கரத்தால் உழைப்பவர்கள் மட்டுமல்ல; கருத்தாலும் உழைக்கிறார்கள், இயற்கையோடு நெருக்கமாகப் பிணைந்துள்ளனர். எனவே அவர்கள்தான் பொருள்முதல்வாதத்தை உருவாக்கி வளர்த்தெடுக்கிறார்கள். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன.

பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமாபுரியில் உடைமையாளர்களும், அடிமைகளும் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டதைப் போலவே, இந்தியாவில் இருபிறப்பாளர்களும், சூத்திரர்களும் மோதினார்கள். இருபிறப்பாளர்களும் தங்களுக்குள் மோதிக் கொண்டார்கள். தொடக்க காலத்தில் சத்திரியர்கள் ஆதிக்கம் செலுத்தினர். அதைத் தொடர்ந்து பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்கு வந்தார்கள். சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துவோராக, இருபிறப்பாளர்களில் எவரேனும் ஒருவர்

இருந்து வந்தார்.

இந்த இருபிறப்பாளர்களின் ஆதிக்கமே, பொருள்முதல் வாதத்தின் வீழ்ச்சிக்கும், கருத்துமுதல் வாதத்தின் முகிழ்ப்புக்கும் காரணமாக அமைந்தது. இருபிறப்பாளர்களின் ஆதிக்கத்தின் காரணமாகவே, அதனை எதிர்த்த போராட்டத்தின் வெளிப்பாடாகவே பொருள்முதல்வாதத்தின் எழுச்சியும் நிகழ்ந்தது. தேவிபிரசாத் எழுதிய இரண்டு முக்கிய புத்தகங்களான உலகாயதம் மற்றும் "இந்திய தத்துவத்தில் அழிந்து போனவையும், நிலைத்திருப்பவையும்" ஆகிய இரண்டிலும் இது தெளிவாக விளக்கப்பட்டது. "பண்டைய இந்தியாவில் அறிவியலும், சமூகமும்" போன்ற படைப்புகளில் அது மேலும் விரிவாக அலசப்பட்டது.

பண்டைய கிரேக்கத்தைப் போலவே, பண்டைய இந்தியாவிலும் கருத்துமுதல் வாதத்திற்கும் பொருள்முதல் வாதத்திற்கும் இடையிலான போராட்டம் இருந்து வந்தது. ஆனால் இரண்டு நாடுகளிலும் வரலாற்றின் போக்குகள் வேறுபட்டன. கிரேக்கத்தில் இரண்டு வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டமும், இரண்டு தத்துவங்களுக்கு இடையிலான போராட்டங்களும், பழைய அடிமைச் சமூகத்தை மாற்றி நிலவுடைமைச் சமூகத்தையும், நிலவுடைமைச் சமூகத்தை அகற்றி அந்த இடத்தில் முதலாளித்துவ சமூகத்தையும் நிலைகொள்ளச் செய்தன. வேறு சொற்களில் குறிப்பிட்டால், உடைமையாளர்களை எதிர்த்த அடிமைகளின் கலகத்தை தொடர்ந்து, நிலவுடைமை அமைப்புக்கு எதிரான கலகங்கள் ஐரோப்பாவின் பண்புக்கூறுகளாக அமைந்தன.

இந்தியாவிலோ, மேற்கண்ட கலகங்களும் புரட்சிகளும் நடந்தேறவில்லை. இருபிறப்பாளர்களுக்கும், சூத்திரர்களுக்கும் இடையிலான போராட்டத்தில் உடைமை வர்க்கங்களுக்கும், உழைக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலான முதல் போராட்டத்திலேயே, சூத்திரர்கள் வீழ்த்தப்பட்டனர்.

உழைக்கும் மக்கள், சுரண்டும் வர்க்கங்களால் வீழ்த்தப்பட்டனர். உழைக்கும் மக்களின் இந்தத் தோல்வியையும், உடைமை வர்க்கங்களின் வெற்றியையும் தொடர்ந்து, பொருள்முதல் வாதத்தின் நிலைத்திருத்தலும் வீழ்ச்சிக்கு ஆளானது. கருத்துமுதல்வாதம் ஆதிக்க இடத்தைப் பிடித்தது. இதற்கு என்ன சாட்சி?

உடைமை வர்க்கங்களுக்கும், உழைக்கும் வர்க்கங்களுக்கும் இடையில் ஆயுதமேந்திய போராட்டங்களுக்கும், உழைக்கும் வர்க்கத்தின் தோல்விக்கும் சாட்சிகள் ஏதுமில்லை. ஆனால் இரண்டு வர்க்கங்களுக்கும் இடையிலான தத்துவார்த்த போராட்டங்களுக்கு சாட்சியம் இருக்கிறது. இந்தியா முழுவதும் பரவி நிலவிய புத்தமும், சமணமும்தான் அந்த சாட்சிகள். புத்தமும், சமணமும் இருபிறப்பாளர்களின் ஆதிக்கத்திற்கு எதிரான சூத்திரர்களின் கலகங்களின் வெளிப்பாடுகளேயாகும். சில காலத்திற்கு பார்ப்பனியத்திற்கு மேலாக புத்தம் நிலவுவதாக தோன்றியது. ஆனால் அது வீழ்த்தப்பட்டது. புத்தம், சீனா உள்ளிட்ட பல நாடுகளுக்குப் பரவியுள்ளது, ஆனால் அது பிறப்பெடுத்த சொந்த நாட்டில் வீழ்த்தப்பட்டது.

ஏனெனில், தேவிபிரசாத் சுட்டிக் காட்டியதைப் போல, புனித அதிகாரத்தையும், அரச அதிகாரத்தையும், உடைமை வர்க்கங்கள், அதாவது இருபிறப்பாளர்கள், தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர். அதாவது சத்திரியர்களும், பார்ப்பனர்களும் இணைந்து தத்துவார்த்த நிலையில் புத்தத்தினையும், பொருள்முதல்வாதத்தின் இதர வடிவங்களையும் தாக்கி அழித்திட முடிந்தது. புத்தமும், சமணமும் மட்டுமல்ல, சாங்கியம், சார்வாகம் ஆகியவையும் பொருள்முதல் வாதத்தின் தத்துவ வடிவங்களாகவும், உழைக்கும் மக்களின் சித்தாந்தங்களாகவும், தத்துவங்களாகவும் இருந்தன. அவை வீழ்த்தப்பட்டன; அகற்றப்பட்டன. பொருள்முதல்வாத படைப்புகளும் கூட இப்போது நமக்கு கிடைக்கவில்லை.

எதிரிகளின் படைப்புகளின் வழியே பொருள்முதல்வாதம்:

சார்வாகம் அல்லது பொருள்முதல் வாத தத்துவங்களின் பிற முறைகளைக் குறித்து அறிய வேண்டுமென்றால், அவற்றை எதிரிகளின் எழுத்துகளின் வழியாகவே அறிந்து கொள்ள முடிகிறது என்பதுதான் உண்மை. உதாரணமாக, லோகாயதத்தின் பல பகுதிகளையும், பொருள்முதல்வாத எழுத்துகள் பலவற்றையும் சங்கரர் தனது எழுத்துகளில் மேற்கோள் காட்டுகின்றார். எதற்காக? அவற்றை தாக்குவதற்காக. பூர்வ பக்சா என அழைக்கப்படுவது எது?, சங்கரர் பொருள்முதல் வாதிகளின் ஏராளமான எழுத்துகளில் இருந்து மேற்கோள்களை பயன்படுத்தியுள்ளார். ஆனால் அந்த (பொருள்முதல் வாதிகளின் சொந்த) படைப்புகள் நமக்கு கிடைக்கவில்லை.

அவசியம் என சங்கரர் கருதிய பகுதிகள் மேற்கோள்களாக பயன்படுத்தப்பட்டன, பின்னர் அவை அழிக்கப்பட்டன. சித்தாந்த பக்சா என்பது பூர்வ பக்சாவுக்கு பிறகு வந்ததாகும். பூர்வ பக்சா முதலில் (மேற்கோளாக) தரப்பட்டு பின் (வாதங்களால்) தகர்க்கப்படுகிறது. அந்த தகர்ப்புதான் சித்தாந்த பக்சா என அழைக்கப்படுகிறது. பூர்வ பக்சா தரப்பட்டதற்கான காரணமே, சித்தாந்த பக்சாவை நிலைநாட்டுவதற்காகத்தான். இவ்வகையில்தான், லோகாயத வாதிகளின் பல எழுத்துகளும், சார்வாகர்கள் மற்றும் பலரின் படைப்புகளும் நமக்கு கிடைக்கின்றன.

புத்த செவ்வியல் படைப்புகள், பிற நாடுகளில் கிடைக்க வேண்டும். திபெத் நாட்டில் புத்த எழுத்துகளின் பெரும் தொகுப்புகள் இருப்பதாக கூறுகின்றனர். யாரும் அவை குறித்து ஆய்வு மேற்கொள்ளவில்லை. தத்துவ நிலை மட்டுமல்ல; சமூக வழக்கங்களின் நிலைமையும் அதுதான். புத்தம் ஒரு பெரிய இயக்கமாக இருந்தது. புத்தம் நாடு முழுவதும் பரவியிருந்தது. ஆனால் அது தத்துவப் போராட்டத்தில் அது பல கருத்துமுதல் வாத தத்துவவாதிகளால் வீழ்த்தப்பட்டது, அவர்களில் உச்சத்தில் இருந்தவர் சங்கரர். அவர் புத்தத்தை வீழ்த்தியதுடன், பண்டைய இந்தியாவில் பொருள்முதல்வாதத்தின் இருப்பானது ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

பண்டைய இந்திய அறிவியல் குறித்த வரலாற்றறிஞர் பி.சி. ராய், இவ்வாறு குறிப்பிடுகிறார்: ‘சங்கரர், புத்தத்தை எதிர்த்து பெற்ற வெற்றியானது இந்தியாவில் அறிவுத் தேக்கத்தின் தொடக்கமாக அமைந்தது. அதுவரை பொருள்முதல்வாதத்திற்கும், கருத்துமுதல் வாதத்திற்கும் தீவிரமாக நடந்து வந்த போராட்டம், புத்தத்திற்கு எதிரான கருத்து முதல்வாதத்தின் வெற்றியோடு முடிவுக்கு வந்தது. இந்த தகர்ப்பு, சொந்த சிந்தனைகள் அனைத்துக்கும் முடிவைக் கொண்டு வந்தது. கருத்துகளின் போராட்டத்தை முடித்து வைத்தது. அதனால்தான் கி.பி. 8-9 நூற்றாண்டுகளின் காலகட்டத்தில், இந்திய சமூகம், இந்திய அறிவியல், இந்திய கலைகள், இந்திய இலக்கியம் என அனைத்தும் தேக்க நிலைக்கு செல்லத் தொடங்கின.

இலக்கியத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால். காளிதாசர் மற்றும் இதர சிறப்புவாய்ந்த எழுத்தாளர்களின் செவ்வியல் சமஸ்கிருத படைப்புகளைப் போல அல்லாமல், இலக்கியம் ஒரே வகைப்பட்டதாகி (so formalized) அதன் உயிரோட்டத்தை

இழந்தது. கருத்துமுதல்வாதத்தின் கைகளில் புத்தம் அடைந்த வீழ்ச்சியானது சங்கரரின் தத்துவத்தை செழுமைப்படுத்தியது என்பதன் பொருள் இந்த நாட்டின் அறிவுச் சூழல் தேக்கமடைந்தது என்பதேயாகும்.

பொருள்முதல்வாதத்தை வீழ்த்தி கருத்துமுதல்வாதம் அடைந்த வெற்றியின் காரணமாக, அறிவுச் சூழலில் ஏற்பட்ட இந்த தேக்கத்தை அடுத்து, மக்களிடையேயும் ஆளும் வர்க்கங்களுக்கிடையேயும் குழு மோதல்கள் எழுந்தன. அவை அதிக வலுவோடு நடைபெற்றன. இந்தியாவைக் குறித்ததான கட்டுரையில் மார்க்ஸ் குறிப்பிட்டதைப் போல, ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கும் எதிராக இருந்தனர், அப்படியான சூழலிலேயே ஆங்கிலேயர்கள் நுழைந்தனர். மார்க்ஸ் குறிப்பிட்டதைப் போல, சமூகத்தில் நிலவிய அறிவுத் தேக்கம், நாட்டில் சமூக-அரசியல் சிதைவுக்கு வழிவகுத்தது, அது அன்னிய ஆட்சிக்கு வழிவகுத்தது.

அன்னிய ஆட்சிக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. மார்க்ஸ் சொன்னதைப் போல அவற்றிற்கும் இரண்டு பாத்திரங்கள் இருந்தன. முதலாவது அழிவுப்பணி. பழையதை அழித்தல். சாதிச் சமூகத்தை அழித்தல். பெரிய அளவில் அதை அவர்கள் செய்தார்கள் [That they did to a large extent]. மேலும், அவர்களுக்கு ஆக்கப்பூர்வமான வேலைகளும் இருந்தன, அதாவது புதிய சமூகத்தைக் கட்டமைத்தல். அந்தப் பாத்திரத்தை அவர்கள் ஆற்றவில்லை. அதைத்தான் மார்க்ஸ், புதிய ஒன்றைப் பெறாமலேயே பழைய உலகத்தை இந்தியர்கள் இழந்தது பெரும் சோகம் என்று குறிப்பிட்டார்.

நாம் புதிய ஒன்றைப் பெறாதபோதும், புதிய சமூகத்திற்கான விதைகள் விதைக்கப்பட்டன. நவீன ஜனநாயக இயக்கங்கள், விடுதலை இயக்கங்கள் ஆகியவையே அந்த விதைகள் ஆகும். விடுதலை இயக்கத்தின் வழியே புதிய தத்துவ கண்ணோட்டங்களும், ஏராளமான அரசியல் செயல்பாடுகளும் பிறப்பெடுத்தன. வங்கத்திலிருந்து ராம் மோகன் ராயும், மகாராஷ்டிராவில் பூலேவும், கேரளத்தில் ஸ்ரீ நாராயண குருவும் மேலும் பலரும் புதிய சிந்தனையாளர்களாக முன்வந்தனர், அவர்கள் மக்களிடையே புதிய சிந்தனைகளைத் தூவினார்கள்.

இதிலிருந்துதான் இந்திய அரசியல் பொருளாதாரம் எழுந்தது. 1860 களின் தொடக்கத்தில், தாதாபாய் நவ்ரோஜி. ரானடே உள்ளிட்ட ஏராளமான

சிந்தனாவாதிகள் எழுந்தனர். அவர்கள் இந்திய அரசியல் பொருளாதாரத்தின் முன்னோடிகளாக அமைந்தனர். அவர்கள்தான் நவீன ஜனநாயக அரசியல் இயக்கத்தின் முன்னோடிகளும் ஆவர். ஆங்கிலேய ஆட்சி நிறுவப்பட்டு விட்ட காலத்தில், இந்திய மண்ணில் புதிய சமூகத்திற்கான விதைகள் தூவப்பட்டதாக மார்க்ஸ் குறிப்பிட்டுக் கூறியதன் வெளிப்பாடுகளாக இவைகளைக் காணலாம். இதன் காரணமாகவே நவீன இயக்கங்கள் உருவாகி வளர்ந்தன.

கோபால கிருஷ்ண கோகலே, திலகர், காந்தி உள்ளிட்ட புதிய சமூக-பொருளாதார மற்றும் அரசியல் தத்துவவாதிகள், இதிலிருந்தே உருவாகினர். புதிய தத்துவ கண்ணோட்டங்களின் தொடக்கமாக அவர்கள் அமைந்தார்கள், பண்டைய இந்தியாவின் தத்துவங்களை நவீன காலத்திற்கு முன்னெடுத்து வந்தார்கள். உதாரணமாக, அவர்களில் தனித்து தெரியும் சிந்தனையாளரான விவேகானந்தர், பார்வைக்கு ஒரு சாமியாராக இருந்தாலும், அரசியல் புரட்சியாளராவார். அவர் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்களின் காலம் முடிந்தது என்றார். இப்போது சூத்திரர்களின் காலம் தொடங்கியுள்ளது. சூத்திரர்களின் காலம் என்பதை நவீன மார்க்சிய வார்த்தையில் குறிப்பிட்டால் பாட்டாளி வர்க்க ஆட்சியே. சுவாமி விவேகானந்தருக்கு இந்த எண்ணம் இருந்ததா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் ஏதோ புதியதாக வரப்போகிறது என அவரால் கணிக்க முடிந்தது. அந்த புதியது, சூத்திரர்களின் எழுச்சியே. இந்தப் பார்வையில்தான் பூலே, ஸ்ரீ நாராயண குரு ஆகியோர் தங்களது வீரியம் மிக்க சமூக-பண்பாட்டு இயக்கங்களைக் கட்டமைத்தனர். இருந்தாலும், அரசியல் விடுதலை இயக்கத்தோடு அவர்களுக்கு உயிரோட்டமான தொடர்பு இருக்கவில்லை. திலகரும், காந்தியும் மேலும் பலரோடு இணைந்து ஒரு புதிய தத்துவ நோக்கை வளர்த்தெடுத்தனர். அது புதிய சமுதாயத்தை உருவாக்குவது பற்றிய மக்கள் விருப்பங்களுக்கு வடிவம் கொடுத்தது. அந்த விருப்பங்கள் பட்டினிப் பட்டாளத்துடைய (தரித்திர நாராயணர்கள்) விருப்பங்களேயாகும்.

நவீன அரசியல் சக்தி:

1920களின் தொடக்கத்தில் இந்திய மக்கள் அரசியல் சக்தியாக உருவெடுத்தனர். பம்பாய் தொழிலாளி வர்க்கம் அரசியல் பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு

முன்னதாகவே, ஒரு புதிய சமூகம் உருவாகி வளர்ந்து வந்தது. மேற்சொன்ன வேலை நிறுத்தத்தை, ஒரு புதிய இந்தியாவினுடைய, இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் காலம் பிறப்பெடுத்திருப்பதாக குறிப்பிட்டு விதந்தோதினார் லெனின். இந்திய விடுதலைக்கான முந்தைய இயக்கங்களில் மற்ற வர்க்கங்கள், மக்களின் பிற பகுதியினர் பங்கெடுத்தார்கள். லோகமான்ய திலகர் கைது செய்யப்பட்டதை ஒட்டி, பம்பாய் தொழிலாளி வர்க்கம் மேற்கொண்ட போராட்டமானது இந்திய தொழிலாளி வர்க்கத்தை விடுதலை இயக்கத்திற்குள் இழுத்து வந்தது.

அந்தக் காலத்தில், அந்தப் போராட்டமானது பம்பாய் என்ற ஒரு நகரத்திற்குள்ளேதான் நடந்தது. லோகமான்ய திலகரின் கைதும், சிறையடைப்பும் என்ற ஒரு பிரச்சனையைச் சுற்றியதாகவே அந்தப் போராட்டம் எழுந்தது. ஆனால்,அடுத்த பத்தாண்டுகளில், இந்திய உழைக்கும் வர்க்கமானது, நாடு தழுவிய தனது முதல் அமைப்பை சாத்தியமாக்கியது. அனைத்திந்திய தொழிலாளர் காங்கிரஸ் உடன் இணைந்து நாட்டின் பல பகுதிகளில் கம்யூனிஸ்ட் குழுக்களும் உருவெடுத்தன. பம்பாயில் டாங்கே, கல்கத்தாவில் முசாபர்அஹமது, மெட்ராசில் சிங்காரவேலர் ஆகியோர் கம்யூனிசத்தின் இந்திய முன்னோடிகளாக அமைந்தனர். இந்த முன்னோடிகள், அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசுடன் இணைந்து, கம்யூனிஸ்ட் குழுக்களை ஒருங்கிணைத்தனர். விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதியாகவே இது நடந்ததென்றாலும், பாட்டாளி வர்க்கமும், நடுத்தர வர்க்கமும், இன்னமும் முதலாளித்துவ தலைமையின் கீழாகத்தான் செயல்பட்டு வந்தது என்ற போதிலும், ஒரு வர்க்கமாக தானே, தனது கோரிக்கைகளுக்காக முன்னெழுந்து வந்தன.

அந்தக் கணம் முதலே, ஒரு புதிய தத்துவம் வளரத் தொடங்கியது. அந்தத் தத்துவம்தான் எங்கள் தலைமுறையின் முன்னத்தி ஏர்கள் பெரும் பங்கெடுத்து வளர்த்ததும், நாங்கள் பின்னர் இணைந்து கொண்டதுமான தத்துவமாகும். கடந்த 60 ஆண்டுகளில் எனது தலைமுறை, நடைமுறைப் பணிகளில் மட்டும் பங்களிப்பைச் செய்திடவில்லை. மார்க்சிய தத்துவம், அரசியல் பொருளாதாரம், சமூகவியல், அரசியல் அறிவியல், அழகியல் என பலவற்றிலும் பங்களிப்பைச் செய்தது என்பதை இங்கே பெருமிதத்துடன் குறிப்பிடுவேன். மாறிவரும் உலகம் குறித்ததான மார்க்சிய கருதுகோளினை புரிந்து கொள்வதுடன், நடைமுறையிலும் பயன்படுத்துவது

இவ்வாறுதான் சாத்தியமாகும். இப்படித்தான் நாம் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

எனவே, இந்தியாவில் சமூகமும், அறிவியலும், தத்துவமும் என்பதை ஒரு தொடர்ச்சியாகவே நான் பார்ப்பேன். இந்த தொடர்ச்சி சில சமயங்களில் தடைப்படலாம். ஆனால் தொடர்ச்சி இருந்து கொண்டிருக்கும். அந்த தொடர்ச்சியானது, இந்திய மக்கள் தாங்களே வளர்ந்து வருகிறார்கள் என்பதேயாகும். நாம் 1994 ஆம் ஆண்டிற்கு வரவேண்டும். 21 ஆம் நூற்றாண்டுக்கான பார்வையை வசப்படுத்தி செயல்படவேண்டும் என்கிறேன்.

இந்திய மக்கள் அனைத்து வகைகளிலும் மேம்பட்டுள்ளதாகக் காண்கிறோம். அவர்கள் தங்களின் சொந்த தத்துவத்தை வளர்த்தெடுத்துள்ளனர். அந்த தத்துவமானது இந்து தத்துவம் அல்ல. இந்து தத்துவமும் அதில் உள்ளடங்கிய பகுதி. முஸ்லிம் தத்துவ நோக்கும், கிறித்துவ தத்துவ நோக்கும், மார்க்சிய தத்துவ நோக்கும் அதில் உள்ளடங்கியுள்ளது. இந்தியத் தத்துவம் எனக் குறிப்பிடுவதில் இவை எல்லாமே பகுதிகளாகும். இந்துத்துவ கூட்டத்தாரின் பார்வைக்கு எதிராக நாங்கள் தொடர்ந்து முன்னிறுத்தி வரும் பார்வை இதுவே. இந்துத்துவ வாதிகளுக்கு இந்து தத்துவமும், வேத தத்துவமுமே இந்திய தத்துவமாகும். அவர்கள் வேதகால கணிதத்தையும் தொடங்கி விட்டனர். அனைத்தையுமே வேதகாலத்திற்கு பின்நோக்கி இழுத்துச் செல்ல வேண்டுமென பார்க்கிறார்கள்.

நிச்சயமாக நாம் வேதகால பண்பாட்டை மதிக்கிறோம். வேத கலாச்சாரம் குறித்து பெருமைப்படும் அதே சமயத்தில், அந்த கலாச்சாரத்திற்கு சில கண்டிப்பான வரம்புகள் இருந்தன என்பதையும் கவனத்தில் கொள்ளத் தவறவில்லை. பண்டைக் காலத்தில் ஐரோப்பாவை ஒத்த நிலையிலும், அதனை முந்திக்கொண்டும் இருந்த இந்தியாவானது, நவீன காலத்தில் பின்தங்கியதற்கு அதுதான் காரணமாகும்.

வேதகால கலாச்சாரத்தின் வரம்புகளில் ஒன்று குறித்து எனது சொந்த அனுபவத்திலிருந்தே குறிப்பிட முடியும். சிறுவனாக இருந்தபோது, 6 ஆண்டுகளை ரிக் வேதம் கற்பதற்காக செலவிட வேண்டியிருந்தது. கற்றேன் என்று சொல்வது சரியான சொல்லாக இருக்காது. அந்தப் பொருளில் எதுவும் நடக்கவில்லை. ஒவ்வொரு வார்த்தையையும் திருப்பிச் சொல்வதற்கு பழகினேன். அப்படித்தான் அந்த ஆறு ஆண்டுகளும் மனப்பாடம் செய்து ரிக் வேத மந்திரங்களை திரும்பச்

சொன்னேன். அவை என் வாழ்நாளில் வீணாக்கப்பட்ட ஆண்டுகள். நிச்சயம் நொறுக்கப்பட வேண்டிய வேதகால பண்பாட்டுப் பகுதிகளில் இவையும் அடங்கும்.

நமது பண்டைய பண்பாட்டுக் களஞ்சியத்தின் ஒரு அங்கமாக ரிக் வேதம் உள்ளது உண்மைதான். ஆனால் நான் அதை கற்கவில்லை. மனப்பாடம் செய்யும்போது என்ன பொருள் புரிந்துவிடும்?, அதிலிருந்து என்ன அறிந்து கொண்டிருக்க முடியும்?, சமீபத்தில்தான் எனது நண்பர் மலையாளத்தில் குறிப்புகளுடன் 8 பாகங்களாக அச்சிடப்பட்ட ரிக் வேதத்தை கொடுத்தார். அந்தக் களஞ்சியத்தை நாம் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக கண்டு மகிழ்கிறோம். அதே சமயம், வேத எழுத்துகள், மாற்றக்கூடாத சமய மரபின் பகுதிகளாக்கப்பட்டதையும் மறுக்க முடியாது. (இவ்வகையில்) வேதகால எழுத்துகள் மனிதர்களின் சிந்தனையை மேம்படுத்த பயன்படுத்தப்படவில்லை. மாறாக, அவர்களை அடிமைப்படுத்த பயன்படுகின்றன. இந்த மரபு நொறுக்கப்பட வேண்டும். இந்த மரபை உடைத்தால்தான் நம்மால் மார்க்சிய தத்துவ நோக்கையும், புதிய அரசியல் பொருளாதாரத்தையும் இன்ன பிறவற்றையும் வளர்த்தெடுக்க முடியும்.

தனது படைப்புகளின் வழியே தேவி பிரசாத் நமக்கு கொடுத்துச் சென்றுள்ள செய்தி இதுதான். இதன் காரணமாகவே மார்க்சிஸ்ட்களுக்கு மட்டுமல்லாது, நம் கலாச்சாரத்தைக் குறித்து ஆழ்ந்து படிக்க விரும்பும் அனைவருக்குமே அவருடைய பணி ஒரு சொத்தாக அமைந்திருக்கிறது. எனவேதான் நான் இந்த கருத்தரங்கில் ஒருவனாக இடம் பெற்றிருப்பதை பெருமிதமாகவும், பெரு மகிழ்ச்சியாகவும் கருதுகிறேன். அவரது பணிகளை கற்றுத்தேர்ந்து அதில் பயனடைய நான் முயற்சித்துள்ளேன், அவர் தன் வாழ்க்கையில் அவற்றை எப்படி இந்திய சமூகத்தை மாற்றியமைக்கும் நோக்கில் பயன்படுத்தினாரோ, அதே வகையில் நானும் பயன்படுத்த வேண்டும் என்று முயற்சிக்கிறேன். மேலும் அனைத்து பிற்போக்குச் சிந்தனைகளையும், காலம் கடந்துவிட்ட ‘இந்துத்துவா’ என்று அழைக்கப்படும் கலாச்சாரத்தையும் தாக்கி வீழ்த்த பயன்படுத்திக் கொள்கிறேன். நான் சொல்ல விரும்பியதன் சாரம் இதுதான்.

2. இந்திய தத்துவ மரபு – உண்மை வரலாறு

'இந்தியாவில் நாத்திகம் இருந்ததில்லை; ஆன்மீகமே இந்திய தத்துவம்' என்று பேசினால் பெரும்பாலான இந்திய தத்துவ ஆசான்களை புறந்தள்ள வேண்டியிருக்கும் என்று தேவி பிரசாத் எச்சரிக்கிறார்.

என். குணசேகரன்

"இந்திய தத்துவ மரபின் சில கூறுகளின் அடியொற்றிப் போகிற ஓர் இந்தியர் இறுதியில் வந்து சேருமிடம் மார்க்சியமாகத்தான் இருக்க முடியும்" என்று எழுதினார் இந்திய தத்துவ ஆசிரியர் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா. சுரண்டலற்ற சமூகம் அமைகிற ஒரு நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் ஆளும் வர்க்கங்கள் எப்போதுமே எச்சரிக்கையாக இருந்து வந்துள்ளனர். இந்திய தத்துவத்தை தங்களது தேவைகளுக்கு ஏற்றவாறு விளக்குவது, போதிப்பது என அவர்கள் உருமாற்றி வந்துள்ளனர்.

சோசலிசத்திற்கான இந்திய முயற்சி என்பது இந்திய தத்துவ மரபில் நிகழும் போராட்டத்துடன் இணைந்தது என தேவிபிரசாத் கருதினார். உண்மையான முற்போக்கு தத்துவ மரபினை மீட்டெடுக்க தனது வாழ்நாளையே அவர் அர்ப்பணித்தார்.

தத்துவத்தில் முற்போக்கு உழைக்கும் வர்க்க மரபுக்கும், ஆளும் வர்க்க பிற்போக்கு மரபுக்கும் நடந்து வரும் போராட்டத்தின் உண்மையான பொருள் என்ன? இந்திய தத்துவ மரபிலும் வர்க்கப் போராட்டம் தொடருகிறது என்பதுதான். ஒரு சமூகத்தில் தத்துவ சிந்தனைகள் எப்போதுமே குறிப்பிட்ட வர்க்கங்கள், சமுக குழுக்களின் சிந்தனைகளாகவே இருந்து வந்துள்ளன. சோசலிச இலட்சியத்தை எட்ட தனது கருத்தியலை தத்துவத் தளத்தில் உழைக்கும் வர்க்க இயக்கம் முன்னெடுக்க வேண்டும்.

முதலாளித்துவ முறை, குறிப்பாக அதன் நவீன தாராளமய கட்டத்தில், வறுமை, ஏற்றத்தாழ்வினை அதிகரிக்கச் செய்துள்ளது. அவை ஏற்படுத்தும் வாழ்வாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களிடையே அவநம்பிக்கையும், விரக்தியும்

இயல்பாக ஏற்படுகிறது. இதிலிருந்து மீள ஒரு புகலிடமாக மதநம்பிக்கை மக்களுக்கு கைகொடுக்கிறது.

பிற்போக்காளர்களும், வகுப்புவாதிகளும் இதனைப் பயன்படுத்திக் கொள்ள முனைகின்றனர். அதற்கேற்றவாறு, கருத்தியல் தளத்தில் அவர்கள் செயல்படுகின்றனர். அவர்களது உத்திகளில் ஒன்றாக, இந்திய தத்துவம் ஆன்மிகத் தத்துவமே என்ற பிரச்சாரம் அமைந்துள்ளது. கடந்த காலத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாகடர் இராதாகிருஷ்ணன் போன்றோர் முன்னெடுத்த இந்தக் கருத்து இன்றளவும் நீடித்துவருகிறது. ஆன்மிகமும், ஆன்மிக மறுப்பும் கொண்ட பன்முக தன்மை கொண்டதாக இந்திய தத்துவம் இருந்து வந்துள்ளது. இந்த உண்மை நிலைநாட்டப்பட வேண்டும்.

தத்துவப் போராட்டத்தின் அடிப்படை

தத்துவங்கள் பேசும் அடிப்படை பிரச்னை எது? உலகம், இயற்கை, பிரபஞ்சம் ஆகியவற்றால் சூழப்பட்டு மனித வாழ்க்கை இயங்கி வருகிறது. பொருட்களால ஆன உலகிற்கும் சிந்தனைக்குமான தொடர்பினை தத்துவம் விவாதிக்கிறது. ஆன்மா, அல்லது கடவுள்தான் உலகிற்கு அடிப்படை என்பது கருத்துமுதல்வாதம். இந்தத் தத்துவக் கண்ணோட்டம் கொண்டவர்கள் கருத்துமுதல்வாதிகள்.

உலகம், பிரபஞ்சம், இயற்கை அனைத்தும் பொருட்களால் ஆனது; அனைத்துக்கும் பொருளே அடிப்படை; பொருளே முதன்மையானது; பொருளிலிருந்தே சிந்தனை பிறக்கிறது என்பது பொருள்முதல்வாதம். இந்த தத்துவக் கண்ணோட்டம் கொண்டவர்கள் பொருள்முதல்வாதிகள். இந்த இரண்டு முகாம்களுக்கான போராட்டம் வர்க்கங்களாக சமூகம் பிளவுண்ட காலத்திலிருந்தே நடந்து வருகிறது.

கருத்துமுதல்வாதம் அனைத்துப் படைப்புக்களுக்கும், வாழ்க்கை நிகழ்வுகளுக்கும் கடவுள்தான் அடிப்படை என்கிறது. சுரண்டப்படும் பெரும்பான்மை மக்களை மத நம்பிக்கை என்ற வட்டத்தில் வைத்து ஆளும் வர்க்கங்களின் சுரண்டலை மறைக்க அது கேடயமாகப் பயன்படுகிறது. எனவே கருத்துமுதல்வாதம் ஆளும், உடைமை வர்க்கங்களின் தத்துவக் கண்ணோட்டமாக

செயல்படுகிறது.

மாறாக, பொருள்முதல்வாதம் உலக, சமூக வாழ்க்கையை எதார்த்த இயக்கத்தில் காண்கிறது. பொருளின் வளர்ச்சி, சமூகத்தின் வளர்ச்சியை மூடநம்பிக்கை சார்ந்து அல்லாமல் அறிவியல் கண்கொண்டு காண முற்படுகிறது. மாற்றம் ஏற்பட அது வழிவகுப்பதால் பொருள்முதல்வாதம் உழைக்கும், அடிமைப்பட்ட வர்க்கங்களின் தத்துவக் கண்ணோட்டமாக விளங்குகிறது.

இந்த இரண்டுக்குமான போராட்டம் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து தத்துவ வரலாறுகளிலும் நிகழ்ந்துள்ளது. இந்தியத் தத்துவமும் அதற்கு விதிவிலக்கல்ல.

இந்திய தத்துவத்தின் தொடக்கம்

இந்திய தத்துவ வரலாறு வேதங்கள் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்துதான் துவங்குகிறது என்ற ஒரு கருத்து ஆழமாக விதைக்கப்பட்டுள்ளது. கி.மு 1500 காலங்களில் உருவான ரிக் வேத காலம்தான் இந்திய தத்துவ சிந்தனையின் தொடக்கமாக பேசப்படுகிறது. அதிலும் இன்றைய இந்துத்துவ பிரச்சாரத்தில் இது மிகவும் தூக்கலாகப் பேசப்படுகிறது. ஆனால் தத்துவ வரலாறு வேதங்களுக்கும் முந்தைய காலத்திலிருந்து துவங்குகிறது.

உண்மையில் சிந்து சமவெளி நாகரிக காலமாக அறியப்படுகின்ற கி.மு. 2300 – ஆண்டுகளிலிருந்து தத்துவங்களின் வேர்களைக் காண முடியும். சமூக வாழ்க்கை ஓட்டத்துடன் தத்துவ சிந்தனைகள் தோன்றுகின்றன. வேளாண்மையும், நகர நாகரிகமும் வளர்ந்த காலம் அது. அந்தச் சூழலில் உலகம் மற்றும் இயற்கை பற்றிய சிந்தனைகள் தோன்றாமல் அந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. இது பற்றிய விவரங்கள் ஆராய வேண்டியுள்ளது. எனினும் பொதுவாக தத்துவத் தோற்றம் என்பது கி.மு.3000-2000 ஆண்டுகளிடையிலான காலகட்டம் எனக் கருதப்படுகிறது. இது இந்திய தத்துவத்திற்கும் பொருந்தும். வேதங்களே இந்திய தத்துவத்தின் தொடக்கம் என்பது சரியான கருத்து அல்ல.

அதே போன்று தென்னிந்தியாவிலும் தொன்மையான தத்துவக் கருத்துக்கள் தோன்றியுள்ளன. கி.மு 500-வாக்கில் தமிழக சமூக நிலைமைகள் தத்துவக்

கருத்துக்கள் வளர்வதற்கான சூழலை ஏற்படுத்தியிருந்தன. தமிழகத்தில் கீழடி அகழ்வாய்வு வெளிப்படுத்துகிற தற்போதைய தகவல்கள் இதனை உறுதிப்படுத்தி வருகின்றன.

இவை, மார்க்சிய ஆய்வாளர் தேவ பேரின்பன் குறிப்பிட்ட ஒரு கருத்துக்கு வலு சேர்க்கின்றன."2500 ஆண்டுகளுக்கு மேலான தத்துவ வரலாற்றைக் கொண்டதே தமிழ்ச் சமூகம். இது கிரேக்க, சீன, இந்திய செவ்வியல் மரபின் அங்ககப் பகுதியே (organic unit)ஆகும்" (தேவபேரின்பன்). எனவே ஆரிய வருகையை ஒட்டி வளர்ந்த வேத சிந்தனைகள்தான் இந்திய தத்துவங்களின் தோற்றம் என்பது கட்டுக்கதை.

ஆரிய வருகைக்குப் பிறகு இனக்குழு சமுதாயம் உருப்பெற்ற காலங்களில், குறிப்பாக கி.மு 1500 லிருந்து கி.மு 500 காலங்களில் வேதங்கள் படைக்கப்பட்டன. இதற்குப் பிறகுதான் பிராமண மதம் என்று அறியப்படும் பிராமண கருத்தியல் உருவானது. தொடக்க கால வேதப் பாடல்களில் முழுமையான கடவுள் பார்வை உருவாகவில்லை. உலகம்,பிரபஞ்ச இருப்பு பற்றிய கேள்விகளை அந்த பாடலாசிரியர்கள் எழுப்புகின்றனர்." சூரியன் எந்தப் பொருளாலும் தாங்கிப் பிடிக்காமல் இருக்கும்போது எது எப்படி கீழே விழாமல் இருக்கிறது? "எங்கிருந்து காற்று வருகிறது? எங்கு போய் அது மறைகிறது?" இது போன்ற கேள்விகளுக்கு பதில் தேடும் பாடல்களாக உள்ளன.

ஏகம் என்ற ஒன்று எப்போதும் இருந்து வருகிறது; எதிலிருந்தும் அது பிறப்பதில்லை போன்ற கருத்துக்கள் அதில் வருகின்றன. எனவே இந்த சிந்தனை ஆதி நிலை பொருள்முதல்வாதம் (proto -materialism) எனக் கருதலாம். வேதங்களை முன்வைத்து இந்திய தத்துவம் ஆன்மீகமே எனப் பேசப்படுகிறது. ஆனால் தொடக்க கால இனக்குழு சமூகத்திற்கே உரிய பொருளிலிருந்துதான் பொருள் தோன்றியது என்ற சிந்தனை ஓட்டங்கள் பழைய வேதங்களில் இருந்துள்ளன. பின்னாளில் அவை நான்கு வேதங்களாக உருப்பெற்று நால் வர்ணங்களும் மனு சட்டமும் கொண்ட கடவுள் தத்துவமாக மாறியது என்பது உண்மையே. ஆனால் இந்த நிலை உருவான முரண்பாடான வளர்ச்சியை மறைக்க கூடாது.

தொன்மையான தத்துவம் பொருள்முதல்வாதம்

வேதங்கள் உருப்பெற்ற ஆயிரம் வருடங்களும் சமூக வளர்ச்சியில் வர்க்க வேறுபாடுகள் கூர்மையடைந்து வந்துள்ளன. வேளாண்மை, வணிகம் வளர்ந்தன. உற்பத்தியின் உபரியை அபகரிக்கும் ஆளும் வர்க்கங்களும், அவை ஆதிக்கம் செலுத்தும் மன்னராட்சியும் நிலைபெற்றது. சமூகத்தில் நால்வருண சாதிமுறை வலுவாக வேரூன்றியது. இந்நிலையில் தத்துவத் துறையில் வேதங்களைத் தழுவி உருவான உபநிடதங்களும், பின்னர் வேதாந்தமும் செல்வாக்கு செலுத்தின.

இந்த வரலாற்றில் கூட தத்துவ சிந்தனை ஆன்மிகம் போற்றும் ஒரே பிரிவாக மட்டும் இருக்கவில்லை. இந்தியா ஆன்மிக நாடு என்று முத்திரை குத்துவதற்கு இந்தக் காலக்கட்டத்தை பிரதானமாக எடுத்துக் காட்டுகின்றனர். உபநிடதங்கள் தத்துவத்தில் முக்கிய இடம்பெற்று, நால் வருண சாதிய அமைப்பு நிலைத்த காலங்களையே இந்தியாவின் பொறகாலம் என சங்கப் பரிவாரம் இன்றளவும் பிரச்சாரம் செய்து வருகிறது.

உண்மை என்னவெனில் இந்தக் காலங்களில் கூட பொருள்முதல்வாதமும், கடவுள் மறுப்பு நாத்திகமும் இந்திய சிந்தனையில் இயங்கி வந்தன. இதனை தேவி பிரசாத் சட்டோபாத்யாயா இவ்வாறு குறிப்பிடுகிறார்: “இந்திய வரலாற்றில் பொருள்முதல்வாத தத்துவமும் கூட மிகத் தொன்மையான காலத்திலிருந்து வழக்கில் இருந்து வந்துள்ளதனை அறிய முடியும்; உபநிடதம் எவ்வாறு பழைமையானதோ அதற்கு குறையாமல் தொன்மையானத் தத்துவம் பொருள்முதல்வாதம்; சுமார் கி.மு. 6 அல்லது 7 நூற்றாண்டு பழமையானது என அதன் காலத்தைக் கணிக்க முடியும் “எனவே ஆன்மிக, கருத்துமுதல்வாத பாரம்பரியம் மட்டுமே இந்திய. தத்துவப் பாரம்பரியம் என்று கூறுவது ஒரு வரலாற்றுப் புரட்டு.

சுத்தமான ஆன்மிக தத்துவம் என்று விளக்கப்படுகிற உபநிடதங்களில் கூட பொருள்முதல்வாதம் பேசப்படுகிறது. எடுத்துக்காட்டாக உத்தாலகர் என்ற முனிவர் பெயரால் அறியப்படுவது சாண்டோக்கிய உபநிடதம். உத்தாலகர் பொருள்முதல்வாத சிந்தனைகளை வெளிப்படுத்தினார் என்பதை தேவி பிரசாத் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார்.

இந்திய தத்துவத்தில் கருத்து முதல்வாதம், மற்றும் கடவுள் கொள்கைகளை

வலியுறுத்தியவர்களின் தத்துவம் யாருக்குப் பயன்பட்டது? அன்று அரசியல் அதிகாரத்தில் இருந்த மன்னர்கள், பிராமணர்கள், நிலவுடைமையாளர்கள், வணிகர்கள் உள்ளடங்கிய ஆளும் வர்க்கம் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திடவும் சமூக உற்பத்தியின் உபரியை அவர்கள் அபகரித்துக் கொள்ளவும், மறுபுறம் சூத்திரர்கள் எனப்படும் மக்களை அடிமைத்தனத்தில் வைத்திருக்கவும்தான் அந்தத் தத்துவம் பயன்பட்டது. ஆதிக்க வர்க்கங்களின் கருவியாக கருத்து முதல்வாதமும் ஆன்மிகமும் செயல்பட்டன.

சமூகத்தில் நிலவிய வர்க்கப் பகைமை தத்துவத்தில் ஆன்மிகத்திற்கும், நாத்திகத்திற்கும், கருத்துமுதல்வாதத்திற்கும் பொருள்முதல் வாதத்திற்குமான போராட்டமாக நடந்துவந்துள்ளது. ஆளும் வர்க்கத்தின் கருவியாக கருத்து முதல்வாத தத்துவங்கள் இருந்ததால் பொருள்முதல்வாத தத்துவங்கள் வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டன.

இந்தப் போராட்டம் தொன்மைக் காலத்திலும் மத்திய காலத்திலும் தொடர்ந்தது. சமூகத்தில் நிலப்பிரபுத்துவ வர்க்கமுறையும், ஒடுக்குமுறை அடிப்படையிலான மனுவின் சாதிய முறையும் வலுப்பெற்ற மத்திய காலத்தில் பெண்ணடிமைத்தனம், மதம் சார்ந்த மூட நம்பிக்கைகள், சடங்குகள் உள்ளிட்ட அனைத்து பழமை, பிற்போக்கு கருத்துக்களும் இந்திய தத்துவத்தில் ஏற்றப்பட்டன.

இந்திய தத்துவத்தின் பிரிவுகள்

இந்திய தத்துவ ஆசிரியர்கள் இந்திய தத்துவம் இரண்டு பிரிவுகள் கொண்டதாக வகைப்படுத்துகின்றனர். இந்திய தத்துவ முறைகள் ஒன்பது என வரையறுக்கப்படுகிறது. இவற்றுள், வேதங்களின் அதிகார மேலாண்மையை ஏற்றுக் கொண்டவை ஆறு என வகைப்படுத்தப்படுகிறது. அவை வருமாறு: 1. வேதாந்தம் 2. சாங்கியம் 3. மீமாம்சம் 4. நியாயம் 5. வைசேசிகம் 6. யோகம்.

வேதங்களை ஏற்றுக் கொள்ளாதவை மூன்று என சொல்லப்படுகிறது. அவை:1. பௌத்தம் 2. சமணம் 3. சாருவாகம் அல்லது லோகாயத வாதம் (பொருள்முதல்வாதம்)

ஆனால் வேதங்களின் அதிகாரம் எனும்போது அனைத்துக்கும் மூலாதாரம்

கடவுள் அல்லது பிரமம் என்ற கருத்தை ஏற்றுக்கொண்ட தத்துவங்கள் என்றுதான் பொருள்படும்.ஆனால் வேத அதிகாரத்தை ஏற்றுக்கொண்டதாக கருதப்படும் ஆறு தத்துவங்களும் உண்மையில் கடவுளை ஏற்கும் முழுமையான ஆத்திகம் பேசும் தத்துவங்களா? இல்லை என ஆணித்தரமாக, ஆதாரப்பூர்வமாக மறுக்கிறார் தேவி பிரசாத்.

"இந்தியாவின் மரபு எனக் கறாராக வரையறுக்கப் படக்கூடிய தத்துவத்தை விருப்பு வெறுப்பின்றி ஆராய்கிறபோது கடவுளுக்கு அங்கே இடம் தேடுவது வேண்டாத வேலையே என்பது தெளிவாகும். இந்தியாவின் தத்துவங்களில் இரண்டே இரண்டை மட்டுமே ஆத்திகம் சார்ந்தவை என மிகுந்த தயக்கத்துடன் கூறலாம்; நன்கு அறியப்பட்ட பிற அனைத்தும் நாத்திக உள்ளடக்கத்தைக் கொண்டவையே?" என்பது தேவி பிரசாத் நிறுவியுள்ள உண்மை.

இந்த உண்மைக்கு மாறாக இந்திய தத்துவங்களை வேதங்களை மையப்படுத்தி வகைபடுத்தி விளக்குவது உண்மையில் உள்நோக்கம் கொண்ட செயல். சரியாக வகைப்படுத்த வேண்டுமென்றால் இந்திய தத்துவக் கருத்துக்கள் கருத்துமுதல்வாதம் பொருள்முதல்வாதம் என்ற இரண்டு பிரிவுகளில்தான் வகைப்படுத்த முடியும்.

வேதாந்தம் என்ற தத்துவ சிந்தனையை ஓரளவிற்கு ஆத்திகப் பிரிவில் சேர்க்கலாம் என்கிறார் தேவி பிரசாத். நியாயம், வைசேசிகம் இரண்டிலும் தொடக்க காலத்தில் பொருள்முதல்வாத சிந்தனைக் கீற்றுக்கள் இருந்துள்ளன. வைசேடிகம் அணுவே மூலாதாரம் என பேசுகிறது. ஆனால் பிற்காலத்தில் அவை கருத்துமுதல்வாத, ஆத்திகக் கருத்துக்கள் உள்ளடங்கியதாக உருமாறின. எனவே பிற்கால நியாயம், வைசேசிகம் இரண்டும் ஆத்திகம் சார்ந்தவையாக உள்ளன.

இதற்கு மாறாக நாத்திக கண்ணோட்டங்களை பேசுகிற தத்துவங்களாக பௌத்தம், சமணம், மீமாம்சம், சாங்கியம், லோகாயதம் அல்லது சாருவாகம் ஆகியவை அமைந்துள்ளன. எனவே, 'இந்தியாவில் நாத்திகம் இருந்ததில்லை; ஆன்மீகமே இந்திய தத்துவம்' என்று பேசினால் பெரும்பாலான இந்திய தத்துவ ஆசான்களை புறந்தள்ள வேண்டியிருக்கும் என்று தேவி பிரசாத் எச்சரிக்கிறார்.

தமிழகத்தில் பொருள்முதல்வாதம்

தமிழக தத்துவ வரலாறும் சீரிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டங்களைக் கொண்டதாக வளர்ச்சி பெற்றது. தமிழர் வளர்த்த தத்துவ வரலாற்றின் 2500 ஆண்டுகளில் 1500 ஆண்டுகள் பொருள்முதல்வாதமே மேலோங்கியிருந்தது என்பது மார்க்சிய அறிஞர் தேவ பேரின்பனின் வரலாற்று ஆய்வு முடிவு.

"இறைக் கொள்கையும் இறையியல் தத்துவமும், கி.பி.9,10-ம் நூற்றாண்டுக்குப் பிறகு 1000 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்தது. இந்த ஆயிரம் ஆண்டுகளில்தான் வைதீக சமக்கிருதமும், பிராமணியமும், 1500 ஆண்டுகளாகத் தமிழர் வளர்த்த தத்துவத்தை அழித்தது. பொருள்முதல்வாதமும், அறிவியலும் பின்னடைவைக் கண்டது...." என்று தனது "தமிழர் வளர்த்த தத்துவங்கள்" என்ற நூலின் முன்னுரையில் தேவ பேரின்பன் குறிப்பிடுகிறார்.

எனவே தமிழகத்திலும் நிலவிய வர்க்கப் பகைமையின் வெளியீடாக தத்துவத் தளத்தில் போராட்டம் நடந்துள்ளது.

காலனியாதிக்க சூழலில் தத்துவப் போக்குகள் புதிய வடிவம் பெற்றன.காலனிய ஒடுக்குமுறை ஆட்சி மேற்கத்திய கல்வி வழியாக காலனியத் தேவைகளுக்கு ஏற்றவாறு, நவீனத்தை புகுத்த முயற்சித்தது. அதன் பிறகு, தனது நலனுக்கு ஏற்ற வகையில் பழைய நிலப்பிரபுத்துவ தத்துவங்களை உயிர்ப்பிக்க முயற்சித்தது. இதற்கு பல வெளிநாட்டு ஆய்வாளர்கள் துணையாக நின்றனர்.

எதிர் சக்திகளாக தோன்றிய காலனிய எதிர்ப்பு சக்திகள் பழமையை உயர்வாகப் போற்றும் உத்தியை பின்பற்றத் துவங்கினர். அதே நேரத்தில் நவீன சூழலில்,பல முற்போக்கு இயக்கங்களும் சமூக சீர்திருத்த இயக்கங்களும், பொருள்முதல்வாதக் கண்ணோட்டங்களையும், நாத்திக கருத்துக்களையும் முன்னிறுத்தினர். வளர்ந்து வந்த மார்க்சிய இயக்கம் இயக்கவியல் பொருள்முதல்வாத தத்துவத் தடத்தில் பயணிக்கத் தொடங்கியது. மார்க்சிய மேதை சிங்காரவேலர் போன்றோர் விடுதலைப் போராட்டம், சுரண்டல் எதிர்ப்பு, தொழிலாளி வர்க்க இயக்கம், சமூக சீர்திருத்தம் ஆகிய நடைமுறைகளுடன் இணைந்து தத்துவத் தளத்திலும் தீவிரமாக செயல்பட்டனர். இந்த வரலாறு தத்துவ செயல்பாட்டிற்கு இன்றும் நமக்கு

வழிகாட்டுகிறது.

தத்துவ தளத்தில் கடமைகள்

தற்போதைய முதலாளித்துவ முறையின் கீழ் பழைய நிலப்பிரபுத்துவ கலாச்சார கூறுகளும் குடி கொண்டுள்ள நிலையில், இந்திய தத்துவ முறைகளின் மிகவும் பிற்போக்கான அம்சங்கள் அனைத்தும் உயிர்பெற்றுள்ளன. பழைய பிற்போக்கான கருத்து முதல்வாதத்தின் இன்றைய வடிவமாக 'இந்துத்துவா' தத்துவ தளத்தில் செயல்படுகிறது. எனவே நவீன காலத்திலும் பொருள்முதல்வாதத்திற்கும் கருத்துமுதல்வாதத்திற்குமான போராட்டம் தொடருகிறது. இன்றும் அதிகார மேலாதிக்கத்தில் உள்ள முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் கருவியாக கருத்துமுதல்வாதம் செயல்படுகிறது. கூடவே இந்துத்துவா என்கிற அரசியல் அதிகார வெறி கொண்ட பார்வையும் இணைந்துள்ளது.

இந்நிலையில் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தை பலப்படுத்தி வளர்த்தெடுக்கும் கடமை உழைக்கும் வர்க்கங்களின் முன்னால் உள்ளது. பாட்டாளி வர்க்கம் அதிகார மேலாண்மை பெற வேண்டுமென்றால் தத்துவ தளத்தில் இந்தப் போராட்டம் முக்கியமானது.

இதற்கு இந்திய பாரம்பரியம் ஆன்மிக கருத்துமுதல்வாத பாரம்பரியம் கொண்டது மட்டுமல்ல; பொருள்முதல்வாத நிலைப்பாடுகளும் தீவிரமாக போராடி வந்துள்ளன என்ற உண்மையை மக்கள் சிந்தனையில் பதிய வைத்திட வேண்டும்.

பழைய பொருள்முதல்வாதம் அறிவியலை அரவணைக்க முயற்சித்தது என்பதனை தேவி பிரசாத் சட்டோபாத்யாயா தனது நூல்களில் விரிவாக விளக்கியுள்ளார். ஆனால் அறிவியல் வளர்ச்சி காணாத நிலையில் பொருள்முதல்வாத கண்ணோட்டத்தினால், உலகம், பிரபஞ்சம், இயற்கையின் இயக்கத்திற்கான காரணங்களை விளக்க இயவில்லை. இன்று அறிவியல் வளர்ந்துள்ள சூழலில் தொன்மையான நமது பொருள்முதல்வாதிகள் விட்ட பணியை நவீன காலத்தில் வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது.

நவீன கால பொருள்முதல்வாத தத்துவமாக கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ்

வளர்த்தெடுத்த இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் அமைந்துள்ளது. எனவே இந்திய தத்துவ வரலாற்றின் அடுத்த வளர்ச்சிக் கட்டம் மார்க்சியம்தான். அதுவே நீண்டகாலமாக இந்திய சமூகம் இயங்கிவரும் சுரண்டல், ஒடுக்குமுறைகளைத் தகர்த்தெறிந்து, சமத்துவ அடிப்படை கொண்ட இந்திய சோசலிசத்திற்கு இட்டுச் செல்லும்.

உதவிய நூல்கள்

தமிழர் வளர்த்த தத்துவங்கள் – தேவ பேரின்பன்.

Indian Philosophy -A popular introduction – தேவி பிரசாத் சட்டோபாத்யாயா

இந்திய நாத்திகம் – தேவி பிரசாத் சட்டோபாத்யாயா

Indian philosophy in modern times – V. Brodov (சோவியத் நூல்)

3. “தி யங் கார்ல் மார்க்ஸ்” – மானுட விடுதலைக் கதாநாயகர்களின் இளமைக் கால போராட்டம்

மார்க்ஸுக்கு வயது 26. ஏங்கெல்சுக்கு 24 வயது. ஐரோப்பாவின் இருவேறு நகரங்களில் வாழ்ந்துவந்த தீவிரமான இரு இளைஞர்கள் தங்கள் கம்யூனிசக் கனவை நோக்கி நகர்கிறார்கள். இந்த இருவரும் பாரிசில் அர்னால்டு ரூஜின் அலுவலகத்தில் சந்திக்கும் நிலையேற்படுகிறது.

ஆர்.சுதிர்

இதுவரை புகைப்படங்களிலும், பத்திரிக்கைகளிலும், நாம் பார்த்தும் பயன்படுத்தியும் வந்திருக்கிற, போராட்டங்களின் தத்துவ ஆசான்களாக வடித்துப் பார்த்துள்ள அந்த மாமேதைகள் மார்க்ஸ்–ஏங்கெல்ஸ் ஆகியோரை உண்மை உருவமாக நம் முன்னே நிறுத்தியிருக்கிறது ‘ராவுல் பெக்’ இயக்கிய “தி யங் கார்ல் மார்க்ஸ்” திரைப்படம்.

கி.பி. 1800களின் மத்திய காலத்தில் படம் தொடங்குகிறது. மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் வாழ்க்கையின் 6 ஆண்டுகளை (1843-1848) இத்திரைப்படம் நமக்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

“தி யங் கார்ல் மார்க்ஸ்” திரைப்படம் கார்ல் மார்க்சின் தனிப்பட்ட வாழ்வு அல்ல. அக்காலகட்டத்தின் ஒரு துளி. ஒரு மாபெரும் புரட்சிகர வாழ்வில் எவ்வாறு ஆண்களும், பெண்களும் இணைவதால் மட்டுமே அது முழுமையடைகிறது என்பதை படம் சொல்கிறது.

இன்றைய தலைமுறை இளைஞர்களுக்கு மார்க்சை அறிமுகப்படுத்துவதும், அவரது இளமை நாட்களில் என்ன நடந்தது என்பதைச் சொல்வதும்தான் திரைப்படத்தின் நோக்கம். “இந்த திரைப்படத்தில் மனிதர்களாக மார்க்ஸ், ஏங்கெல்ஸ், அவர்களின் துணைவியர் மற்றும் சமகாலத்தவரின் மனங்களுக்குள் நான் சென்று பார்த்தேன்” என்கிறார் ராவுல் பெக்.

“உலகின் பற்பல காட்சிகள் மார்க்சை பல்வேறு விதங்களில் முன்வைக்கின்றன.

வேறுபட்ட பார்வைகளுடன் அவரது வரலாறு பலரால் எழுதப்பட்டுள்ளது. அதில் நிறைய முரண்பாடுகளும் இருக்கின்றன. இந்தப் படத்தை அவற்றின் அடிப்படையில் நான் உருவாக்கவில்லை. அன்றைய வரலாற்றில் இவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்; மனிதர்களாக எப்படி இருந்தார்கள்; எவ்வாறு விவாதித்தார்கள் என்பதையே காண்பிக்க விரும்பினேன்'' என்கிறார் ராவுல் பெக். இது புரட்சியாளர்களின் வாழ்வு குறித்த ராவுல் பெக்கின் மூன்றாவது திரைப்படம். ஆப்ரிக்கா புரட்சியாளரான லுமும்பா மற்றும் ஆப்ரோ-அமெரிக்கப் புரட்சியாளரான ஜேம்ஸ் பால்ட்வின் பற்றிய திரைப்படங்களை அவர் இயக்கியுள்ளார். கார்ல் மார்க்ஸ் திரைப்படம் 2017 பிப். 9-19 பெர்லின் திரைவிழாவில் இப்படம் திரையிடப்பட்டது.

மேரி பார்ன்ஸ் நேரடி ஆய்வு உதவியும், வாழ்ந்து அனுபவம் பெற்ற தொழிலாளி வர்க்க வாழ்வும் இல்லையெனில் 'இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை' (The Condition of Working Class in England) நூலை ஏங்கல்சினால் எழுதியிருக்க முடியாது. அந்த நூலைப் பற்றி ஏங்கெல்சிடம் மார்க்ஸ் பேசும்போது அந்த நூலில் இரு தளங்கள் இருக்கிறது. ஒன்று, முதலாளித்துவச் சுரண்டல் தன்மை தொடர்பானது. 'முதலாவதை முதலாளியின் மகனாக நீ உனது வாழ்வு அனுபவத்திலிருந்து பெற்றிருக்க முடியும். இரண்டாவது எப்படி?' எனும்போது 'அது ஒரு காதல் கதை' என்கிறார் ஏங்கெல்ஸ்.

மார்க்சின் சிக்கலான, கோணல் மாணலான கையெழுத்தை வாசிக்க முடிந்தவர் மூவர். ஜென்னி, அடுத்து ஏங்கெல்ஸ், மூன்றாவதாக மார்க்சின் இளைய மகள் எலியனார். மார்க்சின் கட்டுரைகளையும் நூல்களையும் அவர் வாழ்ந்த நாள்வரை படியெடுத்து அதனை அச்சுக்கு அனுப்பியவர் ஜென்னி. 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் அசல் பிரதியின் இடையிடையே ஜென்னியின் சொந்த கையெழுத்து இருப்பதை தான் பார்த்ததாகச் சொல்கிறார் இயக்குனர் ராவுல் பெக்.

புரூதோன், பகுனின் உட்பட அராஜகவாதிகளுடன் மார்க்ஸ் நடத்திய விவாதங்களில் உடனிருந்தவர் ஜென்னி. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் பின் 'கம்யூனிஸ்ட் லீக்' ஆகப் பரிமாணம் பெற்ற 'லீக் ஆஃப் ஜஸ்டிஸ்' அமைப்பை மார்க்ஸ் ஏங்கெல்சுக்கு அறிமுகப்படுத்தியவர் மேரி பார்ன்ஸ். மார்க்ஸ் ஏங்கெல்ஸ் என இருவரது செயல்பாடுகளிலும் இரண்டறக் கலந்து செயல்பட்டவர்கள்

ஜென்னியும் மேரி பர்ன்சும். உடலும் உணர்வும் சிந்தையும் கருத்தும் இணைந்து செயல்பட்ட மகத்தான மனிதர்களாக இந்த நால்வரும் 'த யங் கார்ல் மார்க்ஸ்' படத்தில் உயிரோவியமாக வலம் வருகின்றனர்.

படத்தின் முதல் காட்சி 1843 ஆம் ஆண்டின் ஒரு நாளில் ஜெர்மனியில் 'ரெய்னிச் ஜூடுங் பத்திரிக்கையின் ஆசிரியர் குழுவில் நடக்கும் விவாதங்களையும், மரத்திலிருந்து உலர்ந்து விழுந்த சுள்ளிகளைச் சேகரிக்கும் வறிய மக்கள் பிரஷ்ய அரசின் குதிரைப் படையினரால் வேட்டையாடப்படும் காட்சிகளைக் காட்டுகிறது. மார்க்சின் வாழ்வில் அந்தச் சம்பவம், அதனை ஒட்டி ரெய்னிச் ஜூடுங் பத்திரிக்கையில் அவர் எழுதிய கட்டுரை திருப்புமுனையாக அமைந்தது. நிலம், உடைமை, பொருளாதாரம், சட்டம், உரிமை, போராட்டம் குறித்த பொருளாதாய ரீதியிலான மார்க்சின் ஆய்வு எழுத்துக்களின் முதல்படி இது எனலாம். அவர் வறிய மக்களை ஆதரித்து பிரஷ்ய மன்னனை விமர்சித்து எழுதிய கட்டுரைக்காக கைது செய்யப்படுகிறார். அதன் விளைவாக கைக்குழந்தையுடன் குடும்பத்துடன் மார்க்ஸ் பிரான்சுக்குக் குடிபெயர நேர்கிறது.

இரண்டாவது காட்சி மான்செஸ்டரில் ஏங்கெல்ஸ்சின் தந்தையும் ஏங்கெல்சும் பஞ்சாலையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட பெண்களுக்கிடையில் உரையாடல் தொடர்கிறது. பழுதுபட்ட இயந்திரத்தில் வேலைசெய்ததால் ஒரு பெண்ணின் கைவிரல்கள் துண்டுபட்டதால் இயந்திரச் சக்கரங்களை இணைக்கும் பெல்ட்டை பெண்கள் அறுத்து விடுகிறார்கள். "யார் அறுத்தது?" எனக் கேட்கிறார் ஏங்கெல்சின் தந்தை. 'விரல்கள் வெட்டுண்ட பெண்ணுக்கு என்ன வழி?' எனக் கேட்கிறார் தொழிலாளியான மேரி பர்ன்ஸ். அவர் வேலையிலிருந்து அகற்றப்படுகிறார். ஏங்கெல்ஸ், மேரிபர்ன்ஸைத் தொடர்ந்து தொழிற்சாலையை விட்டு வெளியேறுகிறார். தந்தைக்கும் ஏங்கெல்சுக்குமான மனமுறிவு, ஏங்கெல்ஸ்–மேரிபர்ன்ஸ் உறவு, பிறகு ஏங்கெல்சின் இங்கிலாந்தில் தொழிலாளிவர்க்கத்தின் நிலை குறித்த ஆய்வு என நிகழ்வுகளை சுவாரசியமாக காட்சிப்படுத்தியுள்ளார் இயக்குனர்.

மார்க்ஸுக்கு வயது 26. ஏங்கெல்சுக்கு 24 வயது. ஐரோப்பாவின் இருவேறு நகரங்களில் வாழ்ந்துவந்த தீவிரமான இரு இளைஞர்கள் தங்கள் கம்யூனிசக் கனவை

நோக்கி நகர்கிறார்கள். இந்த இருவரும் பாரிசில் அர்னால்டு ரூஜின் அலுவலகத்தில் சந்திக்கும் நிலையேற்படுகிறது. மார்க்ஸ் எழுதிய இரண்டு கட்டுரைகளுக்கு ரூஜ் இன்னும் பணம் தரவில்லை. மார்க்சுக்கு பணநெருக்கடி. வாடகைகூட தரமுடியாத நிலை. ஒரு பெண்குழந்தை. பணிப்பெண்ணுக்கு 2 மாத சம்பளம் பாக்கி. பணம் வேண்டும் என்று கேட்கத்தான் ரூஜிடம் வருகிறார் மார்க்ஸ். அவருக்கு முன்பே தன்வீட்டிற்கு வந்த ஏங்கெல்சை மார்க்சுக்கு அறிமுகப்படுத்துகிறார் ரூஜ்.

ஏங்கெல்சை மார்க்ஸ் ஏற்கனவே ஜெர்மனியில் ஒருமுறை சந்தித்திருக்கிறார். அவருக்கு ஏங்கெல்சின் பணக்காரத் திமிரும் அகந்தையும் பிடித்திருக்கவில்லை. ரூஜ் பணம் எடுக்க உள்ளறைக்குள் செல்கிற நேரத்தில் ஏற்கனவே நடந்த நிகழ்விற்காக ஏங்கெல்ஸ் மார்க்சிடம் வருத்தம்தெரிவிக்கிறார். அப்போது, எங்கல்சின் எழுத்துக்களை தான் படித்திருப்பதைக் குறிப்பிடும் மார்க்ஸ், நீ ஒரு மேதை என்கிறார். உனது ‘இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை’ தன்னிகரில்லா நூல் என்கிறார் மார்க்ஸ். இவ்வாறு உரையாடிக்கொண்டே, ரூஜ் அறையிலிருந்து வருவதற்கு முன்பாகவே அவர்கள் இருவரும் அங்கிருந்து அகன்று விடுகின்றனர். மார்க்சை அவரது வீட்டிற்கு பத்திரமாகக் கொண்டுசேர்க்கிறார் ஏங்கெல்ஸ். மார்க்சின் அறையிலேயே ஏங்கெல்ஸ் தூங்கிப் போகிறார். இப்போது ஜென்னி ஏங்கெல்சுக்கு அறிமுகமாகிறார். மேரி பெர்ன்ஸ் ஜென்னிக்கு அறிமுகமாகிறார்.

இருவரின் சொந்த வாழ்வை அரசியல் முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்கிறது. பிரான்சில் செல்வாக்கு பெற்ற புரூதோன் தலைமையில் தங்கள் கம்யூனிசக் கனவை புரட்சிகர ஸ்தாபனம் ஒன்றைக் கட்டமைத்து தத்துவார்த்தப் போரை முன்னெடுக்க முனைகின்றனர். மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் இருவரும் இரு வேறு நபர்களின் கருத்துக்களை எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது. ஒன்று, புரூதோன் மற்றும் பகுனின் போன்றவர்களின் அராஜகவாதம். மற்றொன்று, வெயிட்லிங் பேசிய கிறித்துவ சகோதரத்துவ சோசலிசம். இந்த அமைப்பினர் நடத்திய கூட்டங்களில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், மேரி பர்ன்ஸ் மற்றும் ஜென்னி கலந்து கொள்கின்றனர். மார்க்ஸ் கடுமையாக வாதிடும் காட்சிகள் சிறப்பாக படமாக்கப்பட்டுள்ளன.

ஜெர்மனியில் பிரஷ்ய மன்னரைக் கொலைசெய்யும் முயற்சி தோல்வியடைந்ததையடுத்து ஜெர்மனி தந்த அழுத்தத்தின் விளைவாக புரூதோன்,

மார்க்ஸ் உள்ளிட்ட புரட்சியாளர்கள் பிரான்சை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். மார்க்சும் ஜென்னியும் இங்கிலாந்து செல்கிறார்கள்.

'லீக் ஆஃப் ஜஸ்டிஸ்' அமைப்பின் கூட்டத்தில் ஏங்கெல்ஸ், மார்க்ஸ் எழுதிய 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யை முன்வைத்து உரையாற்றுகிறார். "இதுவரையிலான வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே" என்று முன்வைக்கிறார். 'முதலாளித்துவத்துடன் சகோதரத்துவம் பேண முடியாது' என்று கிறித்துவ சகோதரத்துவ சோசலிசம் பேசியவர்களுக்கு பேரடியை கொடுக்கிறார். மேலும், 'அவன்தான் நமது எதிரி' என்றும், 'வர்க்கப் போராட்டத்தில் இரத்தம் சிந்துதல் தவிர்க்கமுடியாதது' என்றும் வாதிடுகிறார்.

"கம்யூனிஸ்ட் அறிக்கை" அச்சிடப்படுவதோடு இப்படம் நிறைவுறுகிறது. (1848 பிப்ரவரி மாதம் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' வெளியானது)

இப்படத்தின் முடிவில் ரஷ்ய, சீன, கியூப, ஆப்ரிக்க புரட்சிகளின் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. சில தலைவர்களின் படங்களும் சில காணொளிகளும் காட்டப்படுகின்றன. அவ்வரிசையில் தோழர். லெனின் படம் விடுபட்டிருப்பது வருத்தமளிக்கிறது. அதை தவிர்த்து ஒட்டுமொத்தமாக பார்க்கையில் இந்தப் படம் ஒரு பொக்கிஷமே.

மேற்கோள்கள்

1. தி கார்டியன் இதழில் பீட்டர் பிராட் ஷா எழுதிய விமர்சனம்
2. படச்சுருள்இதழில்– யமுனா ராஜேந்திரன் எழுதிய விமர்சனம்
3. விக்கிப்பீடியா – ராவுல் பெக் பற்றிய தொகுப்பு

4. உழைக்கும் வர்க்கமும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகமும்

பேரா. ஹேமா

(இக்கட்டுரை கட்சியின் அன்றைய மத்தியக் குழு உறுப்பினர் தோழர் ராமதாஸ் ஆங்கில மார்க்சிஸ்ட், ஏப்ரல் – ஜூன், 1984 இதழில் எழுதிய 'Working Class and Bourgeois Parliamentary Democracy' என்ற கட்டுரையின் சில பகுதிகளை பயன்படுத்தியும் தழுவியும் எழுதப்பட்டது – ஆசிரியர்)

அவ்வப்பொழுது சங் பரிவாரை சேர்ந்தவர்களும் வேறு சிலரும் இந்தியாவில் தற்போது நிலவும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக முறையை மாற்றி குடியரசுத் தலைவர் ஆட்சி செய்யும் முறையை (Presidential form of government)) நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கருத்தைப் பரப்பி வருகின்றனர். இதன் பின்னே ஒளிந்திருப்பது அரசு அதிகாரங்கள் அனைத்தையும் தம் கைக்குள் வைத்திருக்கும் வகையில் ஒரு எதேச்சாதிகார அரசை அமைக்கவேண்டும் என்ற சங் பரிவார நோக்கம்தான்.

ஆட்சியில் இருப்பவர்கள் மட்டுமின்றி வேறு பலரும் இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பற்றிக் கேள்வி எழுப்புகின்றனர். இவர்கள் எதேச்சாதிகாரத்தை ஆதரிப்பவர்கள் அல்ல; ஆனால், இன்று நாடு சந்திக்கும் பல்வேறு அரசியல், சமூக, பொருளாதாரச் சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணம் நாடாளுமன்ற ஜனநாயகம்தான் என்று எண்ணுகின்றனர். ஆனால் மேற்கூறிய சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணம், ஆளும் வர்க்கங்கள் பின்பற்றி வரும், திவாலாகிப் போன முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிப் பாதைதான் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

“நக்சல்” இயக்கத்தினரோ, இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்கின்றனர். இடதுசாரி அதிதீவிரவாதிகளைப் பொருத்தவரை – பிரிட்டிஷாரிடமிருந்து அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் தரகு” முதலாளிகள் – என்றும், இப்போது நம் முன் உள்ள ஒரு முக்கியப் பணி, ஆயுதம் தாங்கிய

போராட்டத்தின் மூலம் இந்தத் தரகு முதலாளிகளை, அதிகாரத்திலிருந்துத் தூக்கி ஏறிய வேண்டியதேயாகும் என்றும் கருதுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் முதலாளித்துவ நாடாளுமன்றமோ மற்ற ஜனநாயக நிறுவனங்களோ பயனற்றவை. மேலும் சுதந்திரமாகச் செயல்படும், உழைக்கும் வர்க்கத்திற்கான கட்சியோ தொழிலாளிகள்-விவசாயிகள் போன்றவர்களைத் திரட்டி வெகுஜன ஸ்தாபனங்களை அமைப்பதோ தேவையற்றவை. மக்கள் மத்தியில் பணி செய்வதும் தேவையில்லை என்று எண்ணுகிறார்கள். இறுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான் தங்கள் முதல் எதிரி என்று கருதி அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களை கொலை செய்தார்கள். அவர்களுடைய இயக்கமே, பல்வேறு வகையில் துண்டாகச் சிதறியது.

முதலாளித்துவ நாடாளுமன்றத்தை விமரிசிக்கும் வேறு சிலர், ‘‘மார்க்சிஸ்ட் கட்சி தனது புரட்சிகரப் போக்கைக் கைவிட்டுவிட்டது; மற்ற நாடாளுமன்றக் கட்சிகளைப் போலவே செயல்படுகிறது’’ என்று கூறுகின்றனர். மக்களைப் புரட்சிக்காக அணி திரட்டுவதை விட்டு, நாடாளுமன்ற ஜனநாயக செயல்பாடுகளிலும், மாநில நிர்வாகங்களிலும் ஈடுபட்டு, அரசு நிர்வாகத்திலும் கவனம் செலுத்துகின்றனர். இதனால் முதலாளித்துவ ஜனநாயக அமைப்புதான் லாபமடைகிறது; மக்களுக்கு நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பின் மீது சில பிரமைகள் ஏற்படுகின்றன என்றும் கூறுகின்றனர்.

மேற்கூறிய விவாதங்கள் நடந்துகொண்டிருக்கையில், நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கே ஆளும் வர்க்கம் உலைவைக்க முயன்று வருகிறது. இந்தியாவில், பல பலவீனங்கள் இருந்தாலும், நிலைமைகள் தொடர்ந்து மோசமாகி வருகின்றன என்றாலும், முதலாளித்துவ ஜனநாயக அமைப்புகள் இந்த அமைப்புகள் இந்தியாவில் ஆழமாக வேர்விட்டு நிலை கொள்ளவில்லை என்றாலும், இன்றும் பலவீனமாகத்தான் உள்ளன என்றாலும் அவை இன்னும் இயங்கித்தான் வருகின்றன. நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புக்கள் தாக்குதலுக்கு உள்ளாகும்போது, உழைக்கும் வர்க்கம், இந்த அமைப்புகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். உழைக்கும் வர்க்கம், தன் கோரிக்கைகளை வைத்துப் போராடி உரிமைகளைப் பெறுவதற்கு இந்த அமைப்புகள் மேடையாக உள்ளன.

இவற்றில் செயல்படுவது முதலாளித்துவ ஜனநாயகத்தைத் தாண்டிப் போவது

என்ற தொழிலாளி வர்க்க போராட்ட நோக்கின் ஒரு பகுதியாகும். ஜனநாயக அமைப்புக்களைப் பாதுகாக்கும் முக்கியப் பணி கட்சிக்கு உண்டு. இது உழைக்கும் வர்க்கத்தின் கட்சி. இத்தகைய கடமை கட்சிக்கு இருக்கும்போது, முதலாளித்துவ ஜனநாயக அமைப்புகளையே முற்றுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்று வாதிடுவது தவறு. இந்த அமைப்புகளின் மூலம், இன்னும் அதிக மக்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற முடியும்; அதன் மூலம் ஆளும் கட்சியின் மக்கள் விரோதக் கொள்கைகளை அடையாளம் காட்ட முடியும்; ஆளும் கட்சியின் எதேச்சாதிகாரப் போக்கை மக்களுக்கு விளக்க முடியும். இதே நேரத்தில், மக்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக அணிதிரண்டுவர முற்படுகின்றனர். வகுப்புவாத சக்திகள் மக்களின் கோபத்தைத் திசை திருப்ப என்னென்ன இயலுமோ அவ்வளவையும் செய்து வருகின்றன. மக்களின் ஒற்றுமையைக் குலைத்து, மதம், சாதி போன்றவற்றின் அடிப்படையில் மக்களைக் கூறுபோடுகின்றன.

ஆளும் கட்சியே நாட்டின் சிக்கல்களுக்கெல்லாம் ஏதோ நாடாளுமன்ற ஜனநாயகமே காரணம் என்று கூறி, இந்தச் சிக்கல்களைக் களைய குடியரசுத் தலைவர் ஆட்சி முறையே சிறந்தது என்று கூறுகிறது. இவ்வாறு ஆட்சிமுறையை மாற்றி ஒரு ஏதேச்சாதிகார அரசை நிறுவ முயல்கிறது. இத்தகைய சூழ்நிலையில் மக்களின் அதிருப்தியைச் சரியான திசையில் திருப்பி அதன் மூலம் ஆளும் வர்க்கங்களுக்குச் சாதகமான கொள்கைகளுக்கும், எதேச்சாதிகாரத்திற்கும் எதிரான போராட்டங்களை வலுப்படுத்தும் பணி உழைக்கும் வர்க்கக் கட்சியைச் சேர்ந்தது. இத்தகைய பணிகளை நிறைவேற்ற நாடாளுமன்றமும், ஏனைய ஜனநாயக அமைப்புகளும் உதவும்.

மார்க்சிஸ்ட் கட்சியைப் பொருத்தவரையில், தேர்தல்கள் மூலமாக மட்டுமோ, கட்சியின் பிரதிநிதிகள், நாடாளுமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும், மாநில அரசுகளிலும் பங்கேற்றுப் பணிபுரிவதாலோ, உழைக்கும் வர்க்கம், அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிவிட முடியாது என்பதை நன்கு உணர்ந்தே செயல்படுகிறது. ஆனால் அரசியல் ரீதியில் சில உடனடி இலக்குகளை நாம் அடைய வேண்டியுள்ளது. இத்தகைய இலக்குகளில் சில: ஆளும் வர்க்கங்களின் முதன்மையான கட்சியைத் தனிமைப்படுத்துவது; மார்க்சிஸ்ட் கட்சியின் கொள்கைகளை முன்னெடுத்துச் செய்வது; உழைப்பாளி மக்களை முதலாளித்துவ கொள்கைப் பிடிப்பிலிருந்து

விடுவிப்பது; மக்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பது; பெருமுதலாளிகளின் தலைமையிலான இந்த முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அரசுகளுக்கு எதிரான போராட்டங்களை வலுப்படுத்துவது போன்றவை.

இந்த இலக்குகளுக்கான போராட்டங்கள் வெளியே நடக்கும்போதே மக்கள் மத்தியில், புரட்சிகர அரசியல் தத்துவார்த்த பணிகள் நடைபெறும் அதே நேரத்தில், மக்களைச் சுரண்டும் அரசையும் வர்க்கங்களையும் மக்களிடையே தோலுரித்துக்காட்டும் பணியைச் செய்ய நாடாளுமன்றத்தையும், சட்டமன்றங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. மார்க்சிய-லெனினியம் கற்றுக்கொடுத்த பாடங்களின் அடிப்படையில், முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்புகளைப் புரட்சிகரமான முறையில் கட்சி பயன்படுத்துகிறது. புரட்சிகள் நாம் அறைகூவல் விடுத்தவுடன் நடைபெறுவதில்லை.

புரட்சி நடைமுறையில் வருவதற்கு முதலில் மக்களின் மன நிலையில் புரட்சி ஏற்படவேண்டும். அதற்கு மக்களுக்குப் புரட்சி தேவை என்பதைக் கற்பிக்க வேண்டும். இந்த இலக்கை அடைய முதலாளித்துவ நாடாளுமன்ற, சட்டமன்றங்களை பயன்படுத்திக்கொள்ளலாம். நாடாளுமன்ற சட்ட மன்றப் பணிகளை இம்மன்றங்களுக்கு அப்பாற்பட்ட பணிகளோடு இணைத்துச் செயல்பட வேண்டும்;மக்களிடையே செய்யும் புரட்சிப் பணிக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுவது சரி. ஆனால் முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்திப் புரட்சியை முன்னெடுத்துச்செல்ல முயலும் பணிகளைக் கேலிசெய்வது தவறானது. நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புகளைப் பயன்படுத்துவது கம்யூனிஸ்டுகளின் கட்டாயமான கடமை என்று மார்க்சிய-லெனினியம் போதிக்கிறது .

மார்க்சியம் – லெனினியம் கற்பிப்பது என்ன?

1840-களில் மார்க்ஸ், எங்கல்ஸ் இருவரும், உழைக்கும் வர்க்கத்தினர் அன்றைய காலகட்டத்தில் ஜனநாயக உரிமைகளுக்காக நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்க வேண்டும் என்று கூறினர். நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்க வேண்டும்; எழுத்துரிமை வேண்டும்; நியாயமான முறையில் ஜூரி முறைப்படி வழக்குகள் நடத்தப்பட வேண்டுமென்று கோரி, மக்களைப் பிரதிநிதித்துப்படுத்தும் ஆட்சி

கூட்டம் கூடிப் பேச்சு உரிமை போன்ற ஜனநாயக உரிமைகளுக்காக முதலாளி வர்க்கம் போராடும்போது, உழைக்கும் வர்க்கம் அவர்களுக்கு உதவியாகப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றனர். இப்போராட்டங்களில் பங்கேற்கும்போது உழைக்கும் வர்க்கம் மறைமுகமாகத் தன்னுடைய வர்க்கத்தின் நலன்களுக்காகவும் போராடுகிறது என்றும் சுட்டிக்காட்டினர். ஜனநாயகப் போராட்டங்களுக்கும். சோசலிசத்திற்கும் இடையேயுள்ள நெருக்கமான தொடர்பை ஒரு முக்கியமான அம்சமாக மார்க்ஸ் எடுத்துக் கூறினார். இந்தக் கோட்பாடு, அன்றும் இன்றும் ஒரு புரட்சிகர உழைப்பாளர் கட்சியின் போராட்ட உத்தியாகத் திகழ்கிறது.

மார்க்ஸ்-எங்கெல்ஸ் வழிகாட்டுதல், ரஷ்யப் புரட்சியின் அனுபவம் இவற்றின் அடிப்படையில் லெனின் உழைக்கும் மக்களின் கட்சி நாடாளுமன்றத் தேர்தல்களில் பங்கேற்பதையும், நாடாளுமன்றத்தைப் போன்ற முதலாளித்துவ அமைப்புகளில் பங்கேற்பதையும் ஓர் அரசியல் கடமையாகவே குறிப்பிடுகிறார். முதலாளித்துவ ஜனநாயகத்தில் கிடைக்கும் உரிமைகளைப் பயன்படுத்தி, அதே அமைப்புகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்கிறார். முதலாளித்துவ குடியரசு என்பது வர்க்க ஆட்சியின் கடைசி அமைப்பு. மேலும் இந்த அமைப்பு, முதலாளிவர்க்கத்தை எதிர்த்துப் போராடும் உழைக்கும் மக்களுக்கு ஒரு வசதியான மேடையை அமைத்துத் தருகிறது என்ற காரணங்களுக்காகவே சமூக ஜனநாயகவாதிகள் முதலாளித்துவ குடியரசை அனுமதிப்போம் என்று கூற அஞ்சமாட்டார்கள் என்கிறார் லெனின்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது அளவு கடந்த நம்பிக்கை வைப்பதையும் லெனின் சாடினார். தொழிலாளர் புரட்சியும் அதனை விட்டு விலகிய கவுட்ஸ்கியும், அரசும் புரட்சியும் போன்ற நூல்களில் முதலாளித்துவ அரசின் வர்க்கத் தன்மையைத் தொழிலாளி வர்க்கம் மறந்திடச் செய்வோரையும் எதேச்சாதிகாரத்திற்கு எதிரான தொழிலாளி வர்க்க போராட்டத்தை குலைத்தவர்களையும் கடுமையாகச் சாடினார். மார்க்சிய-லெனினியவாதிகள் இந்த வழிகாட்டுதலை மனதிலிருத்திக்கொள்ள வேண்டும். நாடாளுமன்ற, ஜனநாயக அமைப்புக்களை ஒதுக்காமல், அவற்றை உழைக்கும் மக்களின் போராட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். அதே நேரத்தில், இந்த அரசுகளின் வர்க்கத் தன்மையைத் தோலுரித்துக்காட்ட வேண்டும். நாடாளுமன்றப் பணிகள் வர்க்கப் போராட்டத்திற்குத் துணைபோவதாக இருக்க வேண்டும். ஆனால் நாடாளுமன்றத்தை முற்றாகப் புறக்கணிப்பது தவறு என்றார்

லெனின்.

'அமெரிக்க மற்றும் ஐரோப்பியத் தொழிலாளர்களுக்கு எழுதும் கடிதம்'- என்ற கட்டுரையில் லெனின் முன்வைக்கும் கருத்து வருமாறு: "மிகுந்த ஜனநாயக பூர்வமாக நடத்தப்படும் நாடாளுமன்றமாக இருந்தாலும், அந்த நாடு சிறந்த ஜனநாயகக் குடியரசாக விளங்கியபோதும், அங்கும் கூட தனிச்சொத்தும் முதலாளித்துவமும் பாதுகாக்கப்படும். அத்தகைய நாடுகளில் ஒரு சிறிய குழுவான சுரண்டும் வர்க்கத்தினர் கோடிக்கணக்கன உழைப்பவர்களை அடக்கி ஒடுக்கும் இயந்திரம்தான் முதலாளித்துவ நாடாளுமன்றம். நமது போராட்டங்கள் இந்த முதலாளித்துவ அமைப்பின் வரையறைக்குள் நடத்தப்படும்வரை நாம் இந்த அமைப்பைப் பயன்படுத்த வேண்டும். அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பு உழைக்கும் வர்க்கம் முதலாளித்துவ ஜனநாயகத்தை, குறிப்பாக நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பை, மக்களுக்கு அரசியல் கல்வியைப் புகட்டவும் மக்களை அணி திரட்டவும் பயன்படுத்துவது அவசியம்.

முதல் உலகப் போருக்குப் பின்னர் ஜெர்மனியில் "இடதுசாரி" கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்புகள் காலாவதியாகிவிட்டதால், அவற்றில் பங்கேற்கப் போவதில்லை என முடிவு செய்தபோது, இது தவறு என்று கூறிய லெனின், முதலாளித்துவ ஜனநாயகம் வரலாற்றுபூர்வமாகக் காலாவதியாகி விட்டது என்பது பிரச்சார ரீதியில் உண்மைதான் என்றும் குறிப்பிட்டார். லெனின் மேலும் விளக்குகிறார்: நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றுப் பூர்வமாகக் காலவதியாகிவிட்டது என்பது சரியே. அதாவது அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் காலம் முடிந்து உழைக்கும் மக்களின் சகாப்தம் தொடங்கிவிட்டது என்கிறோம். இதைத் தவறு என்று கூற முடியாது. ஆனால் உலக வரலாற்றில் காலகட்டங்கள் என்பதைப் பலப்பல பத்தாண்டுகளாகத்தான் கணக்கெடுப்பார்கள். இதனால், அன்றாட யதார்த்த அரசியலைப் புரிந்துகொள்ள உலக வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் அளவைகளைப் பயன்படுத்தக் கூடாது.

கட்சி பலவீனமாக இருக்கும் நிலையில் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக நிறுவனங்களையும் பிற்போக்கான ஸ்தாபனங்களையும் முற்றுமாக

ஒழிக்க இயலாத நிலையில் உழைக்கும் மக்களின் கட்சி, முதலாளித்துவ நிறுவனங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியம். நம் நாட்டில் சிறிய பகுதி மக்கள் மட்டுமே மார்க்சிஸ்ட் கட்சிக்கு வாக்களிக்கிறார்கள். பெரும்பாலான மக்கள், சுமார் 90% பேர் முதலாளித்துவ- நிலவுடைமைக் கட்சிகளுக்குத்தான் வாக்களிக்கிறார்கள். இவ்வாறு ஓட்டளிப்பவர்களில் பெரும்பாலான உழைக்கும் மக்களும் அடங்குவர். இதனால் இந்தப் பெரும்பான்மையான மக்களை, முதலாளித்துவ நிலப்ரபுத்துவ அரசியலிலிருந்து காப்பாற்ற மார்க்சிஸ்ட் கட்சி முதலாளித்துவ நாடாளுமன்றத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. தேர்தல் களத்தைப் பயன்படுத்தி மக்களுக்குப் பயனுள்ள மாற்று அரசியலைப்பற்றி எடுத்துரைத்து, அவர்களை அணி திரட்ட வேண்டியுள்ளது. இந்தப் பணியை அலட்சியம் செய்வது ஒரு புரட்சிக்காக மக்களைத் தயார்படுத்தும் பணியில் அலட்சியம் காட்டுவதாகும்.

தற்போதைய இந்தியச் சூழலில், நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடுவது கட்சியின் மிக முக்கியக் கடமையாகும் பிரிட்டிஷ் காலத்தில் இந்தியாவில் பலகோடி மக்களுக்கு ஓட்டுரிமை இல்லை. அப்போது நடைபெற்ற தேர்தல்களில் மிகக் குறைவான எண்ணிக்கையிலான மக்களுக்கே ஓட்டுரிமை அளிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற நிலைமை வந்தது. மக்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. ஆனால் ஜனநாயக அமைப்புகளின் மீது ஆளும் வர்க்கங்கள் தொடர்ந்து தொடுத்துவரும் தாக்குதல்களால் மக்களுடைய உற்சாகம் ஓரளவு குறைந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலான மக்கள், தமது வாக்குரிமையை இன்னமும் மதிப்புமிக்கதாகக் கருதுகிறார்கள். இந்த மனோநிலையைக் கண்கொள்ளாமல் விடுவது மிகப் பெரிய தவறாகும். மக்களின் பின்தங்கிய அரசியல் உணர்வைத் தீவிரப்படுத்த கட்சி எடுக்கும் முயற்சிகள், மேற்கூறிய அலட்சியப் போக்கினால் பலவீனப்படும்.

வர்க்கப் போராட்டத்துக்கு துணையாக

மக்களின் அரசியல் கல்வி என்பது வர்க்கப் போராட்டத்தோடு இணைந்து வருவது. இவை இரண்டையும் பிரிக்க முடியாது புரட்சிக்கான போராட்டங்களை நடத்தும்போது கம்யூனிஸ்டுகள், மக்களுடைய உணர்வுகளை வளர்க்க வேண்டுமே

தவிர அவர்கள் பின்னால் நாம் போகும்படியான நிலை ஏற்படக்கூடாது என்பது சரியே. ஆனால் கம்யூனிஸ்டுகள் தங்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் உத்திகளைக் கையாளும்போதும், அதற்கான முழக்கங்களை முன்வைக்கும்போதும், அந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுடைய உணர்வு மட்டத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்வது அவசியம். நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பங்கேற்பதையும், வர்க்கப்போராட்டத்தில் பங்கேற்பதையும் ''இடது'' விமர்சகர்கள் போட்டுக் குழப்பிக் கொள்கிறார்கள். இவ்வாறு செய்வது மட்டுமின்றி, நாடாளுமன்றங்களில் பங்கேற்று, அங்கே செயல்படுவது என்ற போராட்ட முறையையே ஒதுக்குகிறார்கள். நாடாளுமன்றத்திலிருந்து நடத்தும் போராட்டத்தையும், வெறும் சீர்திருத்தங்களை மட்டுமே முன்வைக்கும் செயல்பாடுகளோடு சேர்த்துக் குழப்புகிறார்கள். நாடாளுமன்றத்தைப் புறக்கணிப்பது என்பது உழைக்கும் வர்க்கத்திற்குப் பயன்படக் கூடிய ஒரு முக்கியமான ஆயுதத்தை அவர்களுக்கும் கிடைக்கவிடாமல் தடுப்பதாகும். இதனால், மக்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பற்றிய பிரமைகளிலிருந்து விடுபட இயலாமல் போகும். அவர்களுடைய புரட்சி உணர்வுகளையும் வளர்த்தெடுக்க இயலாது. நமது விமர்சகர்களுக்கு, நாடாளுமன்றங்களைப் புரட்சிகரமாகப் பயன்படுத்துவது வர்க்கப் போராட்டத்திற்குத் துணையாக நிற்கும் என்பது புரியவில்லை.

இத்தகைய துணை மேடைகள் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது மார்க்ஸ் லெனின் இவர்களுடைய வழிகாட்டுதலிலிருந்தும் கட்சியின் அனுபவங்களிலிருந்தும் புரியும். எங்கெல்ஸ் பின்வருமாறு கூறுகிறார் ''தேர்தல் களத்தில் போராடுகையில், நம்மைவிட்டு ஒதுங்கி நிற்கும் மக்களோடு தொடர்புகொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. வேறுபல தொடர்பு சாதனங்களுக்குச் சற்றும் குறைந்ததல்ல இந்தத் தேர்தல் களம். மற்ற கட்சிகளை நாம் கடுமையாகச் சாடும்போது மக்கள் முன்பு அவர்கள் தங்கள் நிலைபாடுகளை விளக்கித் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கும். நாடாளுமன்றத்தில் நமது பிரதிநிதிகள் எதிராளிகளோடு பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. நாடாளுமன்றத்திற்கு வெளியிலிருக்கும் மக்கள் கூட்டத்திடையேயும், நாடாளுமன்றத்திற்குள்ளேயும் பேசும்போது, ஒரு பொதுக்கூட்டத்திலோ அல்லது செய்தித் தொடர்பாளர்களிடையேயோ பேசுவதைக் காட்டிலும் அதிக

சுதந்திரத்தோடும், அதிகார பூர்வமாகவும் பேசமுடிகிறது''

நமது கட்சியின் அனுபவம்

நமது கட்சியின் அனுபவம் என்ன? நாம் நாடாளுமன்றத் தேர்தல்களில், எங்கெல்லாம் நமக்கு ஆதரவு இருக்கிறதோ, அங்கெல்லாம் தேர்தலைச் சந்திக்கிறோம். முதலாளித்துவ நிலவுடைமைக் கட்சிகள் உட்பட மற்ற கட்சிகளோடு இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறோம். மிக முக்கியமான முதலாளித்துவ நிலவுடைமைக் கட்சியைத் தனிமைப்படுத்தவும், அந்தக் கட்சியை எந்த அளவுக்கு முடியுமோ, அந்த அளவுக்குக் கடுமையாகத் தோற்கடிக்கவும் முயலுகிறோம். தேர்தல் நேரங்களில் மிகத் தீவிரமான அரசியல் செயல்பாடுகளைக் காண்கிறோம். இவை மக்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய செயல்பாடுகளிலிருந்து ஒதுங்கியிருப்பது முதலாளித்துவ-நிலவுடைமைக் கட்சிகளுக்கு அரசியல் களத்தை முழுமையாக விட்டுக் கொடுப்பதைப் போலாகி விடும். முதலாளித்துவ கட்சிகளின் பிடியில் சிக்க வைப்பதாகவே முடியும்.

இத்தகைய தேர்தல்களில் பங்கேற்பதால், ஒரு உழைக்கும் மக்களின் கட்சி மிக அதிகமான மக்களைச் சென்றடைய முடிகிறது. தேர்தல் அரசியலில் பங்கேற்காமல் ஒதுங்கினால், இந்த அளவுக்கு மக்களைச் சந்திக்க இயலாது. இவ்வாறு தேர்தல்களில் பங்கேற்கும்போது மற்ற நேரங்களைவிட, அதிகமான மக்களிடையே கட்சி கருத்துக்களையும் மக்கள் ஜனநாயகத் திட்டங்களையும் பிரசாரம் செய்ய முடிகிறது. கோடிக்கணக்கான மக்களுக்கு இந்த அரசின் பிற்போக்குத்தனத்தை, வன்மையான வர்க்கத்தனத்தைத் தெளிவுபடுத்த முடிகிறது. இது ஒரு முதலாளித்துவ-நிலவுடைமை அரசு என்பதையும், இந்த அரசு உண்மையில் பெருமுதலாளிகள் தலைமை தாங்கும் அரசு என்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்ட முடிகிறது. நமது கட்சித் திட்டத்தையும் மற்ற கட்சிகளின் திட்டங்களோடு ஒப்பிட்டுக் காட்ட முடிகிறது. மற்ற ஏகாதிபத்திய நாடுகளில் முதலாளித்துவ அடிப்படையில் இயங்கும் சமூகங்களில் நிலவும் வேலையின்மை வறுமை, சுரண்டல், ராணுவமயம் – போன்ற தீமைகளைச் சுட்டிக்காட்ட முடிகிறது. மத்தியில் ஆளும் கட்சிகளுக்கு எதிராக வாக்களிக்கும்படி மக்களிடம் நேரடியகாக் கோரி, அந்தக் கட்சியை வலுவான தோற்கடிக்கச் செய்யலாம்.

இதன் விளைவாக வர்க்கப் போராட்டங்களில் மக்கள் ஈடுபடுவதற்கான நம்பிக்கையைப் பெறச் செய்யலாம். மாநிலச் சட்ட மன்றங்களிலும் மையத்தில் நாடாளுமன்றத்திலும் பங்கேற்கும்போது, இந்த அரசின் உண்மையான வர்க்கத் தன்மையையும் வெளிப்படுத்தலாம். இத்தகைய உத்திகள் கட்சியின் மீது மரியாதையை அதிகரித்துள்ளது. அதன் தாக்கத்தை விரிவுபடுத்தியுள்ளது; அதன் வலுவை அதிகரித்துள்ளது. இத்தகைய தேர்தல் வெற்றிகளால், கட்சி இன்னும் பெரிய அளவில் மக்கள் போராட்டங்களைத் தனியாகவும் மற்ற அமைப்புகளுடன் இணைந்தும் நடத்த முடிகிறது. நாடாளுமன்றத்திலும், அதைத் தாண்டியும் நடத்திய போராட்டங்களைத் தேர்தல் வெற்றிகளாக ஆக்க முடிந்திருக்கிறது. தேர்தல் வெற்றிகளின் மூலம் பிரம்மாண்ட அளவில், மக்கள் போராட்டங்களை வலுவாக நடத்த முடிகிறது. இத்தகைய செயல்பாடுகளால் மக்களுக்கு அரசியலைக் கற்பிக்க முடிகிறது. மக்களுக்கு நேரடியான அரசியல் அனுபவம் கிடைக்கிறது. இதனால் புரட்சிப் படையும் பெருகுகிறது.

தேர்தல் தேவையில்லையா?

தேர்தல்களே தேவையில்லை என்று கூறுபவர்கள் தாங்கள் என்னவோ புரட்சிகரமான உத்தியை வலியுறுத்துவதாக நினைக்கிறார்கள். ஆனால் இது உண்மையல்ல. அவர்களுடைய இந்த உத்தி, தேர்தலைப் போன்ற ஒரு பெரும் அரசியல் நிகழ்வுகளிலிருந்து உழைக்கும் மக்களை ஒதுக்கிவைக்கிறது. இதனால், இந்த அரசியல் களம் முழுமையாக சுரண்டல் வர்க்கக் கட்சிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். உழைப்பாளர்களின் கட்சி – இந்தத் முதலாளித்துவ உத்தியின் காரணமாக தங்கள் கொள்கைகளையும், திட்டங்களையும், ஆளும் வர்க்கக் கொள்கைகளைப் பற்றிய விமர்சனங்களையும் மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல முடியாமல் போகிறது.

ரஷ்யப் புரட்சியின்போது தேர்தல்களைப் புறக்கணித்த அனுபவம் போல்ஷ்விக்குகளுக்கு உண்டு. இதிலிருந்து அவர்கள் கற்ற பாடங்கள் முக்கியமானவை. இந்தப் படிப்பினைகள் கம்யூனிஸ்டுகள் அனைவருக்குமே பொருந்தும்.

லெனின் பின்வருமாறு கூறுகிறார்: “மிகவும் பிற்போக்கான ஒரு

நாடாளுமன்றத்தில் பங்கேற்க முடியாது என்று மிகப்பிடிவாதமாகக் கூறியதற்காக இடது போல்ஷ்விக்குகள் 1908-ல் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு பங்கேற்பது மிகவும் அவசியம் என்பதை அவர்கள் உணர மறுத்தனர். அவர்கள் 1905-ல் ஏற்பட்ட வெற்றிகரமான அனுபவத்தை மட்டுமே முக்கியமாகக் கருதினார்கள். 1905 போல்ஷ்விக்குகள் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்த நடவடிக்கை உழைக்கும் மக்களுக்கு ஒரு மிகச் சிறந்த அனுபவத்தை அளித்தது. சில சிறந்த விலைமதிப்பற்ற அரசியல் அனுபவத்தை அளித்தது. சில நேரங்களில் சட்டபூர்வமான, சட்டத்தை மீறிய மேலும் நாடாளுமன்றத்தில் நிகழ்த்தும் போராட்டங்கள், மன்றத்திற்கு வெளியே நிகழ்த்தும் போராட்டங்கள் இவற்றை ஒன்றிணைத்துப் போராடும்போது நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புகளைப் புறக்கணிப்பது பயனுள்ளதாயிருக்கும், சில நேரங்களில் அது அவசியமும் கூட. ஆனால் இந்த அனுபவத்தைக் கண்மூடித்தனமாக, விமர்சனபூர்வமாக அணுகாமல், "காப்பியடிப்பதுபோல் வேறொரு சந்தர்ப்பத்தில். வேறொரு நிலையில் செய்வது மிகவும் தவறு. 1906-ல் போல்ஷ்விக்குகள் "டூமா" (ரஷ்ய நாடாளுமன்றம்) வைப் புறக்கணித்தது தவறு. ஆனால் இது ஒரு சிறிய தவறு, எளிதில் திருத்திக்கொள்ளக்கூடியது. ஆனால் 19o7, 1908 – பின்னர் தொடர்ந்து பல ஆண்டுகள் புறக்கணித்தது மிகவும் பெரிய, சரி செய்யக் கடினமான தவறு…".

நாடாளுமன்ற அமைப்புகளில் கட்சியின் பணி

நாடாளுமன்ற அமைப்புகளில் கட்சி எவ்வாறு பணியாற்றுகிறது? நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் உள்ள கட்சிக் குழுக்கள், கட்சி அமைப்பின் ஒரு பகுதியாகும். கட்சியின் கட்டுப்பாட்டில் கட்சியின் ஒழுங்கு முறைகளின் வரையறைக்குள் இயங்குபவை. கட்சித் தலைமையுடன் நெருங்கிய தொடர்பு உடையவை. பார்லிமென்ட் உறுப்பினர்களான கம்யூனிஸ்டுகள் அரசு திட்டங்கள், சட்டங்கள், இவற்றின் வர்க்கத் தன்மையை வெளிப்படுத்தி, குறிப்பாக எளிய மக்களின் பொருளாதார நிலைமையை இவை எவ்வாறு பாதிக்கும் என்பதையும், மேலும் உழைக்கும் மக்கள் விவசாயம், பட்ஜெட் இவை மீதான அரசு நடவடிக்கைகள் ஏற்படுத்தும் பாதிப்பு போன்றவற்றை எடுத்துரைப்பது போன்ற பணிகள் முக்கியமானவை. மேற்கூறிய விஷயங்கள் பொதுவாழ்வில் மையமானவை.

அரசைப் பொறுத்தவரையிலும் மிகவும் முக்கியமானவை. இந்த விஷயங்கள் அனைத்திலும் கம்யூனிஸ்டுகள் கவனம் செலுத்தி எளிய மக்களின் நலன்களைப் பாதுகாக்கக் குரல் கொடுப்பார்கள்; மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும், ஜனநாயக உரிமைகளைப் பரவலாக்கவும், நாடாளுமன்றங்களுக்குள்ளேயே கட்சியின் போராட்டத்தைத் தொடர்வார்கள். எதேச்சாதிகாரத்தைத் தடுப்பது, மாநிலங்களின் சுய ஆட்சி, உழைக்கும் மக்களின் போராட்டங்களை அடக்கும் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலுக்கான நடவடிக்கைகள், பெண்களுக்குச் சமஉரிமை, வேலையின்மையை எதிர்ப்பது, உழைப்பவர் மீதான தாக்குதல்கள், ஊழல் எதிர்ப்பு, நிர்வாகமும் காவல்துறையும் இணைந்து நிலவுடைமையாளர்களுக்குச் சாதகமாகக் கிராமப்புறங்களில் செயல்படுவதை எதிர்த்தல் – போன்ற அனைத்துப் பிரச்சினைகளும் இதில் அடங்கும்.

உழைப்பாளரின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு சர்வதேசக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. கட்சி உறுப்பினர்கள், போருக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள்; ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் மக்களுக்காகக் குரலெழுப்புகின்றனர். இவ்வாறே பாலஸ்தீன மக்களின் உரிமைக்காகவும் இனப்படுகொலைகளுக்கு எதிராகவும் காலனியாதிக்கத்தை எதிர்த்தும் குரல் கொடுக்கிறார்கள். மக்கள் மத்தியில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப்பற்றிய பிரமைகளைக் களைய நாடாளுமன்றத்தையே பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வாறு நாடாளுமன்றம் ஒரு துணை மேடையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கட்சியின் முதன்மையான பணியாகிய புரட்சி செய்வது என்ற பணிக்குச் சிறந்த அடித்தளம் அமைக்கிறது.

நாடாளுமன்ற அமைப்புகளில் செய்யும் பணியில் ஒரு பகுதியாகத்தான் கட்சி பல மாநிலங்களில் அரசுகளில் பங்கேற்கிறது. அப்படியும் காங்கிரஸ் அல்லாத அரசுகள் எல்லாவற்றிலும். கட்சி பங்கேற்பதில்லை. இடதுசாரிகள் எங்கெல்லாம் பெருவாரியாக வலுப்பெற்றிருக்கிறார்களோ, அங்குதான் அரசுகளில் பங்கேற்கிறார்கள் அத்தகைய மாநிலங்களில் மார்க்சிஸ்ட் கட்சிதான் பெருவாரியாக வலுவான கட்சியாய் இருக்கிறது. இதனால்தான் 1967-ல் பீஹார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநில அரசுகளில் கட்சி பங்கேற்க மறுத்தது. மார்க்சிஸ்ட் கட்சி பிற

கட்சிகளின் ஒரு துணைகட்சியாக (வாலாக) செயல்படுவதை ஏற்கவில்லை.

1957-ல் மார்க்சிஸ்டுகள், தேர்ந்தெடுத்த ஒரு சில கட்சி சாராத தனிப்பட்ட உறுப்பினர்களின் ஆதரவோடு கேரளத்தில் அரசு அமைத்தது. 1967-ல் மார்க்சிஸ்டுகள் கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் மட்டுமே அரசு அமைப்பில் பங்கேற்றனர். அங்கு இடதுசாரிகள் வலுவாக இருந்ததே காரணம்.

மாநில அரசுகளில் பங்கேற்பு

நம்மை விமர்சிப்போரில் ஒருசாரார் இன்னொரு கருத்தையும் முன்வைக்கின்றனர். நமது அரசுகளின் ஆட்சியில் மக்களுக்கு ஒரு சில நிவாரணங்கள் கிடைக்கின்றன. அதனால் ஒரு சில அடிப்படை மாற்றங்கள் செய்தால்போதும்; இத்தகைய மாற்றங்களைப் பார்லிமென்ட் முறை மூலமே செய்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இடதுசாரி அரசுகளின் அனுபவம் முற்றிலும் மாறுபட்டது. இந்த அரசுகள் காங்கிரஸ் கட்சி ஆண்ட அரசுகளின் ஆட்சியிலிருந்து வேறுபட்டவை.

இடதுசாரி அரசுகள் ஆண்ட மாநிலங்களில்தான், அரசின் ஒடுக்குமுறைக் கருவிகளான காவல்துறை போன்றவை நிலவுடைமையாளர்களுக்குச் சாதகமாகவோ, விவசாயிகளுக்கும், குத்தகையாளர்களுக்கும், மற்றும் போராடும் தொழிலாளர்களுக்கும் எதிராகவோ, பயன்படுத்தப் படுவதில்லை. இந்த மாநிலங்களில்தான் அரசு ஊழியர்களுக்கு வேலைநிறுத்தம் செய்யும் உரிமை உட்பட, ஜனநாயக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாநிலங்களில் கிராமப்புற ஏழைகளுக்காகவும் பெரு நிலச்சுவன்தார்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவும், நிலச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குத்தகைதாரர்களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. தங்களுக்கு இருக்கும் குறைந்த நிதியை வைத்துக்கொண்டே இயற்கைப்பேரிடர்கள் தாக்கும் நேரங்களில், மக்களுக்கு அதிகபட்ச நிவாரணத்தை அளிக்கின்றன. பிற கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் மேற்கூறிய நிவாரணங்களுக்காக, நமது தலைமையில் மக்கள் போராடுகிறார்கள்.

கடுமையான சுமைகளிலிருந்து ஓரளவு விடுபடுவதற்காக மக்கள் நிவாரணம் கேட்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் இடதுசாரி அரசுகள் மக்களின்

பொருளாதாரச் சிக்கல்களுக்கு ஓரளவாவது நிவாரணம் அளிக்க வேண்டியது அவசியம். இந்தக் குறைந்தபட்ச நிவாரணம் அடிப்படைச் சிக்கல்களை தீர்க்காது. மக்கள் விரைவிலேயே, இந்தச் சூழலை அடியோடு மாற்றினால்தான் தங்களுடைய நிலையில் அடிப்படையான மாற்றங்கள் நிகழும். அடிப்படை மாற்றத்திற்கு இடதுசாரி அரசுகள் துணை நிற்கும் என்ற புரிதலை ஏற்படுத்தவேண்டியுள்ளது.

மார்க்சிஸ்ட் கட்சி இந்த இடதுசாரிகள் ஆளும் அரசுகளிடமிருந்து மிக அதிகமாக மக்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது என்று பல முறை கூறியுள்ளனர். உண்மையான அரசியல் அதிகாரம் முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களிடம்தான் உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளனர். இடது முன்னணி அமைச்சரவைகள், மக்களை அணிதிரட்டவும் , போராடவும் பயனுள்ள கருவியாகச் செயல்படலாம். ஆனால் அடிப்படைப் பிரச்சினைகளை அவர்களால் தீர்க்க முடியாது. மக்களே இதை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்கிறார்கள். மேற்கு வங்க அரசு நிறைவேற்றியுள்ள கிராமப்புற ஏழை மக்களுக்கு நலன் பயக்கக்கூடிய சட்டங்களுக்கு ஒப்புதல் தராமல் மத்திய அரசு முடக்கியுள்ளது. இதன் மூலம் உண்மையான அதிகாரம் எங்கே இருக்கிறது என்பதை மக்களே அறிந்துகொள்கின்றனர். இதைப்போலவே மைய அரசு நிதி ஆதாரங்களைத் தன் பிடியிலேயே வைத்திருப்பதையும், மாநில அரசுகள் மக்களுக்குத் தர விழையும் ஒருசில நிவாரணங்களுக்குக்கூடப் போதிய நிதி அளிப்பதில்லை. அதிகார வரம்புக்குள் இருக்கும் சில அதிகாரங்களில் ஒன்றான சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளிலும் கூட மத்திய அரசு தலையிடுவதையும் பார்க்கிறார்கள். இத்தகைய நடவடிக்கைகளைக் கவனிப்பதே ஒரு அரசியல் கல்வி. இவற்றின் மூலம் உண்மையான அதிகாரம் எங்கே இருக்கிறது என்று அறிகிறார்கள்.

பார்லிமெண்ட் அமைப்புகளையும், மக்களிடையே செய்யும் பணிகளையும் முறையாக இணைத்துச் செயல்பட்டால், கட்சி வளர இயலும்; மக்கள் ஜனநாயக முன்னணியை கட்டுவதில் முன்னேற இயலும் என்பதே மேற்கு வங்கம், திரிபுரா மற்றும் கேரள அனுபவங்கள் நமக்கு கற்றுத் தரும் பாடம்.

கட்சி பலவீனமாக இருக்கும் மாநிலங்களில், கட்சி ஆட்சியில் இருக்கும் மாநிலங்களில் எத்தகைய நல்ல ஆட்சியை நிறுவியுள்ளனர்; கட்சியின்

சாதனைகள் போன்றவற்றை மக்களிடம் எடுத்துச் சொல்லவும், கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கவும், தற்போதைய அரசின் வர்க்கத் தன்மையை விளக்கவும் நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பங்கேற்பதன் மூலம் செய்ய முடிகிறது.

நாடாளுமன்ற ஜனநாயக நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சி இடது முன்னணி அரசுகளில் பங்கேற்பது; தேர்தலில் போட்டியிட்டு தன் பிரதிநிதிகளை அனுப்புவது; சுதந்திரமான செயல்பாடுகளை விட்டுக் கொடுக்காமலேயே மற்ற கட்சிகளோடு இணைந்து தேர்தல் கூட்டணி அமைப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது சரியான உத்தி என்பதே அனுபவம். இதன் பொருள் இவ்வாறு செயல்படும்பொழுது தவறுகள் நிகழாது என்பதல்ல.

நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு ஆளும் வர்க்கங்களிடமிருந்துதான் ஆபத்து வரும் என்பதே வரலாற்று அனுபவம். நாடாளுமன்ற அமைப்புகளில் செயல்படுவதும், அவை ஆளும் வர்க்கங்களால் தாக்கப்படும்பொழுது அம்பலப்படுத்துவதும் நமது பணியாகும்.

5. தனித்துவம் மிக்க நவம்பர் புரட்சி

கே. பாலகிருஷ்ணன்

நவம்பர் புரட்சி நடந்து ஒரு நூறாண்டு கடந்து அடுத்த ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாள் நவம்பர் 7, 2018.

உலகத்தில் பல ஆட்சிமாற்றங்கள், ராணுவப் புரட்சிகள், மக்கள் புரட்சிகள் அளவற்று நடந்திருந்த போதிலும் இவற்றில் இருந்து அடிப்படையிலேயே வேறுபட்ட தன்மை கொண்டது ரஷ்ய நாட்டில் 1917 நவம்பரில் நடந்த நவம்பர் புரட்சியாகும். மனித குலத்தில் நீடித்து நிலைத்து வந்த சுரண்டல் முறைக்கு முடிவு கட்டி, சுரண்டல் ஆட்சிமுறையை சுட்டெரித்து தொழிலாளி மற்றும் உழைப்பாளி மக்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய நாள்தான் நவம்பர் புரட்சி தினமாகும்.

மனித குல வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மாற்றத்தை ரஷ்ய நாட்டு வரலாற்றில் மட்டுமல்ல; ஒட்டுமொத்த உலக வரலாற்றில் நடந்த புதுமையான நிகழ்வு இது.

முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றி ஆய்வு செய்த மார்க்சும் எங்கெல்சும் முதலாளித்துவ அமைப்பை வீழ்த்தி சோஷலிசத்தை நிறுவும் பாட்டாளி வர்க்கப் புரட்சி முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்த ஐரோப்பிய நாடுகளில்தான் நடைபெறும் என எதிர்பார்த்தார்கள். 1882-ம் ஆண்டு காட்ஸ்கிக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தில் கூட, இந்தியா, எகிப்து, அல்ஜீரியா போன்ற நாடுகளில் புரட்சி வந்தால் நல்லதுதான். ஆனால் அது சோஷலிசப் புரட்சியாக அமைவதற்கான வாய்ப்புகள் குறைவே என எழுதினார். அதாவது சோஷலிசப் புரட்சி என்பது ஐரோப்பிய நாடுகளிலேயே வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலேயே சாத்தியம் என அவர் கருதினார்.

ஆனால் 1917 நவம்பர் 7-ம் நாள் ரஷ்ய நாட்டில் சோஷலிசப் புரட்சி நடைபெற்றது. ரஷ்யா ஒரு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடல்ல. அப்போது உலக அரங்கில் ரஷ்யா ஒரு பின்தங்கிய நாடாகவே இருந்தது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அடுத்த பெரிய நாடாக ரஷ்யா இருந்தபோதிலும்

அதன் தனிநபர் வருமானம் 1913-ல் 102 ரூபிள். அதே சமயம் இங்கிலாந்து 463, பிரான்ஸ் 355, ஜெர்மனி 262 ரூபிள்களாகும். ரஷ்யாவின் பொருளாதாரம் விவசாயத்தை நம்பி இருந்தது. அதன் தேசிய வருமானத்தில் 51.3 சதவீதம் வேளாண் வருவாய். தொழில் வருமானம் 28.6 சதவீதம். மொத்த மக்கள் தொகையில் 80 சதவீத மக்கள் விவசாயத்தைச் சார்ந்தவர்கள். ஆலைத் தொழிலாளர்கள் மொத்த மக்கள் தொகையில் 2 சதவீதம் மட்டுமே. மக்கள் தொகையில் நகர்ப்புறங்களில் வாழ்ந்தவர்கள் 5 சதவீதத்தினர் மட்டுமே. வேளாண் துறையில் அதிகமான நிலங்கள் நிலப்பிரபுக்களின் கட்டுப்பாட்டில் குத்தகை விவசாயிகள் சாகுபடியில் இருந்தன.

மார்க்சிய கண்ணோட்டத்தில் மிகவும் பின்தங்கிய, நிலப்பிரபுத்துவ- ஜார் மன்னர்களின் கீழ் ரஷ்யா இருந்தது. இந்நாட்டில் உலகின் முதன் முதலான சோஷலிசப் புரட்சி நடந்தது என்பதுதான் சோவியத் நவம்பர் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவம் ஆகும். இது எப்படி நடந்தது? இதற்கான வியூகங்கள் எப்படி அமைக்கப்பட்டன?

முதலாளித்துவ வளர்ச்சி பின்தங்கிய ரஷ்ய நாட்டில் சோசலிச புரட்சியை நடத்துவதற்கான சரியான போர்த்தந்திரத்தை உருவாக்கி அதை வெற்றிகரமாக நடத்தியதுதான் உலக புரட்சிகர இயக்கத்திற்கு லெனின் வழங்கிய மகத்தான பங்களிப்பாகும். நவம்பர் புரட்சியைத் தொடர்ந்த அடுத்த அரை நூற்றாண்டில் மிகவும் பின் தங்கிய நாடுகளான மக்கள் சீனம், கியூபா, கொரியா, வியட்நாம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சியின் மூலம் சோஷலிசம் அரசுகள் அமைக்கப்பட்டன. 1970-ம் ஆண்டு வாக்கில் உலக சோஷலிச முகாமில் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வாழும் அளவிற்கு வலுவான முகாமாக சோஷலிசம் முகாம் அமைந்திருந்தது. சோவியத் நாட்டில் நடைபெற்ற நவம்பர் புரட்சியின் முன்னுதாரணம் இல்லாமல் இருந்திருந்தால் இந்நாடுகளில் சோஷலிச புரட்சிகள் வெற்றி பெற்றிருக்குமா என்பது கேள்விக் குறிதான்.

கார்ல் மார்க்ஸ் தனது காலத்தில் முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியைப் பற்றி பல்வேறு பரிமாணங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு அதன் உள்ளடக்கம், வளர்ச்சி போன்ற அனைத்தையும் உலகுக்குப் படம் பிடித்துக் காட்டினார். அதனைத் தொடர்ந்து மார்க்சியம் ஒரு சமூக விஞ்ஞானம் என்ற அடிப்படையில் முதலாளித்துவ

வளர்ச்சி குறித்து ஆய்வு நடத்திய லெனின் அவரது காலத்தில் முதலாளித்துவத்தின் உச்சகட்டமான ஏகாதிபத்திய கட்டத்தை அடைந்துள்ளது என்பதை விளக்கினார். ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்த உலக முதலாளித்துவ சங்கிலித் தொடரில் பலவீனமான கண்ணி உடைபட வாய்ப்புள்ளது என்ற முடிவுக்கும் லெனின் வந்தார். இந்த அடிப்படையில் 19-ம் நூற்றாண்டின் பொருளாதார நெருக்கடி, முதல் உலக யுத்த முடிவில் ரஷ்யா சந்தித்திருந்த உச்சகட்ட நெருக்கடிகள் ஆகியவைகளால் பலவீனமான கண்ணியாக இருந்த ரஷ்யாவில் புரட்சி வெற்றி பெற முடியும் என்று கருதினார்.

ஐரோப்பிய நாடுகளில் 17-ம் நூற்றாண்டில் நடந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகள் மூலம் நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்தி முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. எனவே, எல்லா நாடுகளிலும் நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்தி முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்கித்தான் புரட்சி நடத்திட வேண்டும் என்ற கருத்தோட்டமே நிலவியது.

இதற்கு மாறாக, முதலாளித்துவம் வளர்ச்சியடையாத பின் தங்கிய நாடுகளில் முதலாளித்துவம் தலைமை தாங்கி புரட்சி நடத்தும் வரை காத்திருக்க வேண்டியதில்லை என்ற முடிவுக்கு லெனின் வந்தார். மேலும், இத்தகைய பின் தங்கிய நாடுகளில் உள்ள முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவ அமைப்பை எதிர்த்து புரட்சியை நடத்தும் அளவிற்கு வலுப்பெறவில்லை. எனவே இந்நாடுகளில் நிலப்பிரபுத்துவ அமைப்பை எதிர்த்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்கி நடத்துவதன் மூலம் வெற்றிபெற முடியும் என்ற முடிவுக்கும் லெனின் வந்தார். முதலாளித்துவ ஜனநாயக புரட்சி தொடர்பாக லெனின் உருவாக்கிய இப்போர்த்தந்திரம் இதற்கு முன் எப்போதும் உருவாக்கப்படாத முற்றிலும் புதிய போர்த்தந்திரமாகும். இப்பிரச்சனை குறித்து சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் (சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி) எதிரும் புதிருமான விவாதங்கள் நடந்து கட்சி போல்ஷ்விக், மென்ஷ்விக் என இரண்டு பிரிவாக கருத்துப் போராட்டம் நடைபெற்றது. இரண்டு பிரிவுகளும் தனித்தனியாக மாநாடுகளை நடத்தி தங்களது அணுகுமுறைகளை தீர்மானித்தன.

“ஜனநாயகப் புரட்சியில் சமூக -ஜனநாயக வாதிகளின் இரண்டு

போர்த்தந்திரங்கள்" என்ற புகழ் மிக்க கட்டுரையில் இரண்டு போர்த் தந்திரங்களைப் பற்றி லெனின் விரிவாக எழுதியுள்ளார். ரஷ்யாவில் 1905-ம் ஆண்டு நடைபெறும் முதலாளித்துவ ஜனநாயகப் புர்ட்சி என்றாலும் அப்புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தீர்க்கமான பங்களிப்பை ஆற்ற வேண்டும் எனவும் அப்புரட்சிக்கு தலைமை தாங்க வேண்டும் எனவும் இவற்றை நிறைவேற்றுவதன் மூலம் ரஷ்யாவில் சோஷலிசப் புரட்சிக்கு வித்திட முடியும் என அழுத்தமான முடிவுகளுக்கு லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி வந்தது. ஆனால் இதற்கு நேர்மாறாக, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளி வர்க்கம் சிரத்தை காட்டக் கூடாது எனவும் இப்புரட்சிக்கு முதலாளித்துவ வர்க்கம்தான் தலைமை தாங்க வேண்டும் எனவும் மென்ஷ்விக் பிரிவு கூறியது. இப்புரட்சியின் மீது ஒருமித்த அணுகுமுறை இல்லாதது உள்பட பல காரணங்களால் 1905-ல் நடந்த இப்புரட்சி தோல்வியில் முடிந்தது.

குறிப்பாக ஜார் ஆட்சிக்கு எதிராக தொழிலாளர்-விவசாயிகள் நிலையான கூட்டணி வலுவாக ஏற்படவில்லை. நிலச்சுவான்தார்களை எதிர்த்து விவசாயிகள் கலகம் செய்து வந்தனர். ஆனால் நிலச்சுவான்தார்களுடன் கைகோர்த்துக் கொண்டிருந்த ஜார் அரசனை வீழ்த்தாத வரையில் நிலச்சுவான்தார்களை வீழ்த்த முடியாது என்பதை அவர்களால் உணரமுடியவில்லை. மேலும் விவசாயிகளின் மகன்களே அதிகமாக ராணுவத்தில் இருந்தனர். விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இவர்கள் ஜாருக்கு உதவியாக இருந்தனர். தொழிலாளி வர்க்க முன்னணிப் படையாக இருந்த சமூக ஜனநாயக கட்சி போல்ஷ்விக் – மென்ஷ்விக் என இரு கூறுகளாக பிளவுபட்டுக் கிடந்தது. மேலும் ஜார் மன்னன் புரட்சியை ஒடுக்குவதற்கு ரஷ்யாவில் மூலதனம் இட்டிருந்த ஐரோப்பிய முதலாளிகள் ஜார் மன்னனுக்கு ஆதரவாக உதவினர். மேலும் ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்றால் ஐரோப்பிய நாடுகளுக்கும் அது பரவும் என்ற அச்சமும் அவர்களை புரட்சியை ஒடுக்க உதவிக்கரம் நீட்டக் காரணமாக இருந்தது. இக்காரணங்களால் ரஷ்யாவில் முதற்கட்ட புரட்சி தோல்வியில் முடிந்தது.

முதல் புரட்சி தோல்வியினைத் தொடர்ந்து போல்ஷ்விக்குகள் அடுத்த கட்டப் புரட்சிக்கு விரிவான தயாரிப்புப் பணிகலில் ஈடுபட்டு வந்தனர். தொழிலாளர்களை ஒருங்கிணைப்பது, விவசாயிகள் பிரச்சனைகளில் நிலச்சுவான்தார்கள் எதிர்ப்புப்

போராட்டங்களில் முனைப்பு காட்டப்பட்டன. 1914-ம் ஆண்டு தொடங்கிய முதல் உலக யுத்தத்தில் ரஷ்யா ஈடுபட்டது. ரஷ்யா மீது ஜெர்மனி தாக்குதல் தொடுத்தது. உலக நாடுகளை கூறுபோடுவதற்காக நடந்த யுத்தத்தை போல்ஷ்விக் எதிர்த்தது. யுத்தம் மூண்ட விநாடி முதலே தேசப் பாதுகாப்புக்காக யுத்தம் ஆரம்பிக்கப்படவில்லை; மாறாக அந்நியப் பிரதேசங்கலை கைப்பற்றுவதற்காகவே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது என எதிர்த்தது. ஜார் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிலச்சுவான்தார்களை எதிர்த்து முதலாளிகளை எதிர்த்து, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உறுதியான போராட்டத்தை போல்ஷ்விக் கட்சி நடத்தியது.

யுத்தத்தை எதிர்த்து போல்ஷ்விக் கட்சி உறுதியான போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த வேளையில் இன்னொரு முக்கியமான நிகழ்வும் நடந்தது, ரஷ்ய நாட்டிலும் வேறு பல நாடுகளிலும் உள்நாட்டில் உள்ள மக்களை யுத்தத்திற்கு ஆதரவாக திரட்ட ஆட்சியாளர்கள் திட்டமிட்டு வேலை செய்தார்கள். இச்சதிக்கு உள்நாட்டு மக்களின் ஒரு பகுதியினர் மட்டமின்றி அந்தந்த நாடுகளிலிருந்த சோசலிஸ்டுகளும் தங்கள் அரசுக்கு ஆதவளிக்கும் நிலையினை மேற்கொண்டார்கள். அந்தந்த நாட்டு ஏழை ராணுவ வீரர்களால் அடுத்த நாட்டு ராணுவ வீரர்கள் சுட்டு அழிக்கப்படுமா பற்றி கொஞ்சமும் அவ்வியக்க தலைவர்கள் கவலைப்படாத சந்தர்ப்பவாத நிலையினை மேற்கொண்டார்கள், இதனால் உலகம் முழுவதும் இருந்த சோசலிஸ்டுகள் கம்யூனிஸ்டுகளுக்கு வழிகாட்டுவதற்காக 1889ம் ஆண்டு பிரடரிக் ஏங்கெல்ஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட ‘இரண்டாவது அகிலம்’ என்ற சர்வதேச அமைப்பும் பெரும் பாதிப்புக்குள்ளானது. இதில் இடம் பெற்றிருந்த அந்தந்த நாட்டு சோசலிஸ்ட் தலைவர்கள் பாட்டாளி வர்க்க சர்வதேசிய முழக்கத்திற்கு மாறாக அந்தந்த நாட்டு தேசிய வெறிக் கொள்கை இறையானார்கள். பாட்டாளி வர்க்கத்துக்கு துரோகம் செய்து அந்தந்த நாட்டு முதலாளி வர்க்கத்துக்கு காவடி தூக்கும் நிலைமைக்கு உள்ளானர், இதன் விளைவாய் “இரண்டாவது அகிலம்” கலைந்து போனது.

இத்தகைய சூழலில் லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி மட்டுமே யுத்தம் குறித்த உறுதியான நிலை எடுத்து உள்நாட்டில் உண்மையான சமாதான நிலைக்கு பாட்டாளி வர்க்க புரட்சி வெற்றி பெற வேண்டுமெனவும், ஏகாதிபத்திய முதலாளித்துவ ஆட்சியை அடியோடு சாய்ப்போம் என போர் முழக்கப்பட்டது.

யுத்த முடிவின் ஜார் மன்னனுக்கு தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்டது. உள்நாட்டில் பொருளாதார சீர்குலைவு தீவிரமடைந்தது. உணவுப் பொருட்கள் பஞ்சம், தொழிற்சாலைக்கு மூலப் பொருட்கள் பற்றாக்குறை பல ஆயிரம் ஆலைகள் மூடல், பல்லாயிரம் தொழிலாளர் வேலையிழப்பு என நிலைமை அனைத்து துறையிலும் மோசமடைந்தது. சகிக்க முடியாத இந்த நிலைமைகளிலிருந்து மீள்வதற்கு ஜார் மன்னனது ஆட்சியை அடியோடு வீழ்த்துவதை தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்தார்கள்.

ஜார் மன்னனை எதிர்த்த போராட்டங்கள் தீவிரமடைந்தன. நிலைமையை சரியாக கணித்திருந்த போல்ஷ்விக்குகள் விரைந்து களமிறங்கினார்கள். 1917 பிப்ரவரி 23 (மார்ச் 8 அன்று) போல்ஷ்விக் கட்சி லட்சக்கணக்கான பெண்களை திரட்டி போராட்டத்தில் இறங்கியது. பட்டினி பசியை எதிர்த்தும் அதற்கு காரணமான ஜார் மன்னனை எதிர்த்து பெண்கள் தொழிலாளர்கள் வீடுகளை விட்டு புறப்பட்டு வீதிகள் எங்கும் பேரணியாக சென்றார்கள். இந்த அரசியல் போராட்டம் ஆயுதம் தாங்கி எழுச்சியாக புறப்பட்டது. ராவ உடைதணிருந்த விவசாயிகள் வீட்டு பிள்ளைகள் இம்மக்களோடு சேர்ந்து போராட்டத்தில் இரண்டற கலந்தார்கள். இவர்களது துப்பாகிகள் முதன் முறையாக ஜார் மன்னனுக்கு எதிராக வெடித்தன. 1917ல் நடந்த இரண்டாவது புரட்சி வெற்றி பெற்றது.

புரட்சி வெற்றி பெற்ற பின்னணியில் ஏற்பட்ட இடைக்கால அரசு புரட்சிக்கு விரோதமாக திரைமறைவு தில்லு முல்லுகளில் ஈடுபட்டார்கள். இதனை அம்பலப்படுத்தியும் புதிய கொள்கை திட்டத்தை லெனின் வெளியிட்டார். அது “ஏப்ரல் கொள்கை” என பிரகடனப்படுத்தியது. இந்த முறை “ஏப்ரல் கொள்கை” முதலாளித்துவ புரட்சி கட்டத்துக்கு மாறுதலடைந்து சோசலிசப் புரட்சி கட்டத்துக்கு முன்னேறி செல்வதற்கு கட்சிக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் மிகவும் தெளிவான புரட்சிகரமான பாதையை காட்டியது.

“புரட்சியின் முதல் கட்டத்தில் பட்டாளிகளிடம் அமைப்பு பலம் போதிய அளவு இல்லை. அதனால் அரசியல் அதிகாரத்தை புரட்சியின் முதல் கட்டம் முதலாளி வர்க்கத்திடம் ஒப்படைத்தது. புரட்சியின் இரண்டாவது கட்டம் பட்டாளிகளும் விவசாய வர்க்கத்தில் மிக மிக ஏழையாக கீழ்படிகளில்

உள்ளவர்களிடம் அரசியல் அதிகாரம் ஒப்படைக்க வேண்டும்"என புரட்சியின் இரண்டாவது கட்டத்தின் நோக்கத்தினை லெனின் விளக்கினார். மேலும் தற்காலிக இடைக்கால அரசுக்கு எந்த ஆதரவும் கொடுக்க கூடாது. தேசம் முழுவதும் இடைக்கால சர்க்காருக்கு மாற்றாக மேலிருந்து கீழ் வரை தொழிலாளர்களையும் விவசாய கூலிகளின் பிரதிநிதிகளையும், விவசாய பிரதிநிதிகளையும் கொண்ட சோவியத்துகளை அமைக்க வேண்டும் என கட்டளையிட்டார்.

புரட்சியின் இரண்டாம் கட்டத்தை நோக்கிய பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு நவம்பர் 7ம் தேதி புரட்சி வெற்றி பெற்றது.

விவசாயிகளும் சோஷலிசப் புரட்சியும்

இதற்கு முன்பு பல ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளில் விவசாயிகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமையவில்லை. 1789-ல் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியில் விவசாயிகள் போராட்டங்கள் நடந்தபோதிலும் அவர்களுக்கான தனித்த பங்களிப்பு ஏதும் இல்லை. இப்புரட்சியில் முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவ அமைப்பை அடித்து நொறுக்கி விவசாயிகளுக்கு நிலத்தைப் பகிர்ந்தளித்தது. இதர வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் முதலாளித்துவ ஜனநாயகப்புரட்சியின் போது இதுவே நடந்தது.

கார்ல் மார்க்ஸ் காலத்தில் 1871-ல் நடந்த பாரீஸ் கம்யூன் எழுச்சி ஏற்பட்டு தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் முதன்முறையாக ஆட்சி அமைக்கப்பட்டது. ஆனால் குறுகிய காலத்திலேயே இப்புரட்சி முறியடிக்கப்பட்டது. இப்புரட்சியை முறியடிக்க பிரெஞ்சு குடியரசுத் தலைவர் தலைமையிலான பிரெஞ்சு ஆட்சியாளர்கள் விவசாயிகளை தங்களுக்கு ஆதரவாகத் திரட்டி போராட்டம் நடத்தியதும் முக்கிய காரணமாகும். அவர்களது பிரச்சாரத்தில் தற்போது முதலாளிகள் சொத்துரிமையின் மீது தாக்குதல் தொடுக்கும் தொழிலாளி வர்க்கம் அடுத்த கட்டத்தில் விவசாயிகளின் சொத்துரிமை மீதும் தாக்குதல் நடத்துவார்கள் என்பது மையமாக இருந்தது.

இவ்வடிப்படையில் பிரஞ்சு ஆட்சியாளர்கள் விவசாயிகள் ஆதரவோடு பாரீஸ் கம்யூன் மீது கொடூரமான தாக்குதலை நடத்தி அதை வீழ்த்தினார்கள்.

இப்படிப்பினைகளை கணக்கில் கொண்டே ரஷ்ய நாட்டில் நடைபெறவுள்ள

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் பாத்திரத்தை நிறைவேற்ற உறுதியாக போராடக் கூடிய வர்க்கம் பாட்டாளி வர்க்கம் தான். அதனுடைய புரட்சி போராட்டத்தில் விவசாய மக்கள் சேர்ந்தால் தான் ஜனநாயகத்திற்கான வெற்றிகரமாக போராடும் வீரனாக அதனால் இருக்க முடியும் என திட்டவட்டமாக லெனின் கூறினார். அந்த வகையில் தொழிலாளி வர்க்கத்தின் இயற்கையான கூட்டாளியாக விவசாயிகள் வர்க்கம் திகழும் என்றார்.

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி வரலாற்றில் லெனின் கையாண்ட போர் தந்திரம் புதியதோர் பாதையாகும். இதுகாறும் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகளில் முதலாளித்துவ வர்க்கமே கதாநாயக பாத்திரத்தை வகிக்கும் தொழிலாளி வர்க்கமும் – விவசாயிகள் வர்க்கமும் – துணை கருவிகளாகவும் பார்வையாளர்களாகவும் இருந்தனர். வரலாற்றில் முதன் முறையாக முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிலும் அதனை தொடர்ந்து சோசலிச புரட்சியிலும் தொழிலாளி வர்க்கத்தையும், விவசாயிகள் வர்க்கத்தையும் கதாநாயகர்கள் பாத்திரம் வகிக்க செய்த போர் தந்திரம் நவம்பர் புரட்சிக்கு லெனின் வகுத்தளித்த போர் தந்திரமாகும்.

அனைத்துக்கும் மேலாக வரலாறு நெடுகிலும் புறக்கணிக்கப்பட்டவர்களான விவசாய வர்க்கம் புரட்சியில் முக்கிய பங்காளியாக நிர்மானித்தது விவசாயி வர்க்கத்தின் புரட்சி கர போர்க்குணத்துக்கு வழங்கப்பட்ட வரலாற்று ரீதியான அங்கீகாரமாகும்.

லெனின் வகுத்தளித்த இந்த தனித்துவமான போர்த் தந்திரமே சோவியத் நாட்டின் சோசலிச புரட்சியின் தனித்துவமான போர்த் தந்திரம் என்பதற்கு விளக்கங்கள் தேவையில்லை. 1917 நவம்பர் 8ம் நாள் புரட்சி வெற்றி பெற்ற அடுத்த நாள் சோவியத் அரசு சமாதானத்தைப் பற்றிய சட்டத்தை முதலில் நிறைவேற்றியது. இதன் மூலம் யுத்தத்தை நிறுத்தி சமான உடன்படிக்கை செய்து கொள்ள யுத்தம் புரிந்த நாடுகளை கேட்டுக் கொண்டது. அன்று இரவே நிலம் தொடர்பான சட்டத்தையும் நிறைவேற்றியது. நிலப்பிரபுக்கு சொந்தமான நில உரிமை நஷ்ட ஈடு ஏதுமின்றி இன்றோடு ஒழிக்கப்பட்டது என அச்சட்டம் பிரகடனப்படுத்தியது. மேலும் நிலச்சுவான்தாரர்கள், ஜார் அரசனின் குடும்பத்தை தேர்ந்தவர்கள் மற்றும் மாதா கோவில்கள், மடங்கள், முதலாளித்துவக்கு சொந்தமான

நிலங்கள் அனைத்தும் பாட்டாளிகள் விவசாயிகள் எல்லோரும் தங்கள் இஷ்டப்படி உபயோகப்படுத்தப்பட்டதுக்கு அளிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின் படி 40 கோடி ஏக்கருக்கு மேல் விவசாய வர்க்கம் பெற்றது. இச்சங்கத்தின் படி ஆண்டுக்கு 50 கோடி தங்கள் ரூபிள் இதுவரை நிலச்சுவான்தாரர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த குத்தகை இனி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. சுரங்க மூலப் பொருள்கள் காடுகளும் நீர் நிலைகளும் பொதுமக்கள் சொத்துக்களாகின.

சோவியத் நாட்டில் உருவாக்கப்பட்ட தொழிலாளி, விவசாயி கூட்டணிதான் சோசலிச புரட்சிக்கு அடிப்படையாக அமைந்தது மட்டுமன்றி புரட்சி வெற்றிக்குப் பின்னர் தொழிலாளர் விவசாயிகளது தோளில் ஏற்றப்பட்டு வந்த சுரண்டல் நுகத்தடிகள் நொறுக்கப்பட்டன என்பதை சோவியத் புரட்சியின் படிப்பினையாகும்.

6. கியூபாவிற்கான புதிய அரசியலமைப்பு சட்டம்

கியூபாவின் சோசலிச அமைப்பு மிகவும் உயர்வானது. இக்கட்டுரையில் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உயர்ந்த ஜனநாயகப் பண்புடன் மக்கள் கருத்தறிந்து கொண்டுவந்துள்ளார்கள் என்பது விளக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த புதிய சட்டம் மக்களின் அனைத்துப் பிரிவினருக்கான, சமத்துவத்தை பாதுகாக்கும் சட்டமாகவும் இருப்பது விளக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவத்திற்கு மாற்று தேவை. அது சோசலிசமே என்பதை இக்கட்டுரை மீண்டும் தெளிவுபடுத்துகிறது. சோவியத் ரஷ்ய புரட்சி உலகப் புரட்சிகளின் முன்னோடியாகும். நவம்பர் புரட்சி மாதத்தில், கியூப நவீன மாற்றங்களை அறிந்துகொள்வோம்.

கியூபாவிற்கான புதிய அரசியலமைப்பு சட்ட நகல் தீர்மானம், கியூப நாட்டின் தேசிய மக்கள் அதிகார பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தற்போது மக்களின் முன்பு விவாதத்திற்காகவும், மக்கள் கருத்துகளை பெறுவதற்காகவும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த பணிக்கென்று ஆகஸ்ட் 13 முதல் நவம்பர் 15 வரை ஒரு லட்சத்து முப்பத்து ஐயாயிரம் (1,35,000) கூட்டங்களை நடத்த கியூப அரசு முடிவு செய்தது. மக்கள் கூடும் இடங்கள், பணியிடங்கள், பள்ளிகள், சமுதாயக் கூடங்கள் என்று நாடு தழுவிய அளவில் கூட்டங்களை நடத்தத் தீர்மானித்தது, நடத்தியது. இந்த கூட்டங்களை நடத்துவதற்கென்று இரு நபர்கள் கொண்ட 7600 குழுக்கள் பயிற்சியளிக்கப்பட்டு உருவாக்கப்பட்டன. அதாவது கிட்டத்தட்ட 15000 பேர் இந்த கூட்டங்களை நடத்துவதற்கும், மக்களின் கருத்துக்களை கேட்டு பதிவு செய்வதற்கும் பயிற்சியளிக்கப்பட்டனர். பத்து லட்சத்திற்கும் அதிகமான அரசியலமைப்பு நகல் தீர்மானம் அச்சடிக்கப்பட்டு மக்கள் மத்தியில் சுற்றுக்கு விடப்பட்டது.

படிப்படியான தயாரிப்பு பணிகள்

இந்த தயாரிப்புகளின் ஒரு பகுதியாக, இரண்டு நாள் தேசிய அளவிலான கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இந்த கருத்தரங்கத்தில் கியூப கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாகாண பிரதிநிதிகள், இளம் கம்யூனிஸ்ட் லீகின் பிரதிநிதிகள்,

வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்ட வல்லுநர் சங்க பிரதிநிதிகள், புரட்சிகர ஆயுதப்படை அமைச்சகப் பிரதிநிதிகள், உள்துறை பிரதிநிதிகள் கொள்கை விரிவாக்க அமலாக்க ஆணையத்தின் பிரதிநிதிகள், தேசிய தேர்தல் கமிஷனின் பிரதிநிதிகள், சமூக பொருளாதார ஆய்வு மைய பிரதிநிதிகள் அயலுறவு துறை பிரதிநிதிகள் என 280-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

புதிய அரசியலமைப்பு சட்டத்திற்கான நகல் தீர்மானத்தின் ஒட்டு மொத்த முன்மொழிவும், கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு கடந்த மே 13, 2013 அன்று, இதற்கென பிரத்தியேகமாக நியமித்த குழுவினால் தயார் செய்யப்பட்டது. இந்த குழுவிற்கு அப்போது கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளராக இருந்த ரௌல் காஸ்ட்ரோ ரூஸ் தலைமை தாங்கி வழிநடத்தினார். புதிய நகல் தீர்மானத்தின் சட்ட விதிமுறை அடிப்படை அம்சங்கள் 2014, ஜுன் 29ல் அங்கீகரிக்கப்பட்டன.

புதிய அரசியலமைப்பு சட்டத்தினை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து ரௌல் காஸ்ட்ரோ கூறும்போது

பின்வருமாறு விளக்குகிறார். ”நாம் நமது புரட்சிகர வழிமுறையில் அடிநாதமான மார்க்சிய – லெனினிய சித்தாந்தத்தையோ, மார்ட்டியின் பாரம்பறியத் தொடர்ச்சியையோ கைவிடாமல், பழைய மனநிலைகளையும் மனத்தடைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தாய்நாட்டின் தற்போதைய நிலையை கணக்கிலெடுத்துக்கொண்டு, எதிர்கால நிலைமை குறித்த தொலைநோக்குப் பார்வையுடன், இந்த புதிய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க வேண்டியுள்ளது” என்றார் அவர்.

புதிய அரசியலமைப்பு முன்மொழிவிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

• பின்வரும் குறிப்புகளை ஆழ்ந்து ஆராய்ந்து, வழிகாட்டல் நெறிமுறைகளாகக் கொண்டு புதிய முன்மொழிவினை உருவாக்கியுள்ளனர்.

• வரலாற்றுப் புகழ்மிக்க, புரட்சி வீரர் தோழர் பிடல் காஸ்ட்ரோ ரூஸ் அரசியல் சிந்தனைகள்.

• இராணுவ படைத்தலைவர் ரௌல் காஸ்ட்ரோ ரூஸ் உரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்.

• கியூப நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி மாதிரியின் கருத்துரு.

• கியூப நாட்டின் வர்ச்சிக்கான, தேசத்தின் முக்கியமான கேந்திரமான துறைகளின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான 2030 தேசிய கனவு திட்டம்.

• கட்சியின் புரட்சிகர சமூக பொருளாதார கொள்கைகள் – வழிகாட்டல்கள்.

• முதல் கட்சி காங்கிரசின் கட்சி வேலைத்திட்டம் மற்றும் இலக்குகள்

• இவை தவிர பல நாடுகளின் அரசியலமைப்பு சட்டங்கள் – குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசியலமைப்பு சட்டங்கள் – அதிலும் குறிப்பாக வெனிசுலா, பொலிவியா, ஈக்வடார் போன்ற நாடுகளின் அரசியலமைப்பு சட்டங்கள், அதே போல தங்களது சொந்த நாடுகளின் தன்மைக்கேற்ப சோசலிச சமூகத்தை உருவாக்க முனைந்து கொண்டிருக்கும் வியட்நாம் மற்றும் சீன நாடுகளின் அரசியலமைப்பு சட்டங்கள் மற்றும் பிற நாடுகளின் சட்டங்கள்

என அனைத்தும் ஆழ்ந்து ஆராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டு இந்த புதிய அரசியலமைப்பு சட்டத்திற்கான முன்மொழிவு உருவாக்கப்பட்டுள்ளது.

தயாரிப்பு பணிகள் குறித்து :

இப்படிப்பட்ட இந்த தயாரிப்பு பணிகள் குறித்து அரசு செயலாளர் ஹொமேரோ அக்கொஸ்டா விவரிக்கும்போது, ”முதலாவதாக எங்களது அரசியலமைப்பு சட்ட வரைவு வரலாற்றினை மிக முக்கியமாக ஆய்வு செய்தோம். 1940-ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டம், 1959-ம் ஆண்டு அடிப்படை அரசியல் சட்டங்கள், தற்போதைய கியூப குடியரசின் அரசியலமைப்பு சட்டம் என அனைத்தையும் ஆராய்ந்தோம். இந்த ஜுன் 2-ம் தேதி ஒரு தனிச்சிறப்பு அமர்வில், கியூபக் குடியரசின் மக்கள் அதிகார பாராளுமன்றம் இப்படிப்பட்ட ஒரு புதிய அரசியலமைப்பு சட்டத்தின் நகல் தீர்மானத்தினை உருவாக்குவதற்கென ஒரு ஆணையத்தை நியமித்தது. அந்த ஆணையம் இக்காலக்கட்டம் முழுவதும் கடுமையாக உழைத்தது. அனைத்தையும் ஆராய்ந்து ஜுலை 2,3 தேதிகளில் கட்சியின் மத்திய

கமிட்டியின் 7-வது தன்னுடைய முதல் நகல் தீர்மானத்தை முன்மொழிந்தது.” என்கிறார்.

அதன்பிறகு, இந்த நகல் தீர்மானம் கியூப நாட்டின் மக்கள் அதிகார பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளின் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு, அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தற்போது கியூப மக்களின் விவாதத்திற்கென விடப்பட்டுள்ளது.

நகல் தீர்மானத்தை மேம்பட்டதாகக் காட்டும் முதன்மையான அம்சங்களும், ஷரத்துகளும்

ஒரு முகவுரை, 224 சட்ட ஷரத்துகள், (தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தில உள்ளதை விட அதிகமாக 87 ஷரத்துகள்), 11 தலைப்புகள், 24 அத்தியாயங்கள், மற்றும் 16 பிரிவுகளை உள்ளடக்கியதாக புதிய முன்மொழிவு உள்ளது. 11 சட்ட ஷரத்துகள் தற்போது உள்ளது போலவே அப்படியே வைக்கப்பட்டுள்ளன. 113 சட்ட ஷரத்துகள் திருத்தப்பட்டுள்ளன. 13 சட்ட ஷரத்துகள் நீக்கப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவின் உள்ளடக்கமானது, ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் தன்மையாலும், திட்டவட்டமான ஒழுங்குமுறையுடன் அமைந்துள்ளதாலும், காரணகாரியத் தொடர்புடையதுமாக மறு ஒழுங்கமைவு செய்யப்பட்டுள்ளதாலும், மேம்படுத்தப்பட்டதாக உள்ளது. கியூப நாட்டின் தற்போதைய சமூக, அரசியல், பொருளாதார உண்மை நிலையினை சரியான விதத்தில் விளக்கும் வகையிலான சொற்பதங்களுடன், தனிச் சிறப்பு மிக்க மொழிவளத்துடன், தேவைக்கேற்றதொரு நெகிழ்வுத்தன்மையுடன்,, வருங்காலத்திற்கு உகந்ததாய், பாதுகாப்பினை உத்திரவாதப்படுத்துவதாய், கியூப நாட்டின் உண்மை நிலையுடன் பொருத்தப்பாடுடையதாய் அமைந்த வார்த்தைகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய முன்மொழிவானது கியூபாவின் அரசியல், சமூக, பொருளாதார அமைப்பில் உள்ள சோசலிச குணமாம்சத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. அதே போல, கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி பாத்திரத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது. அடிப்படை உற்பத்தி வழிமுறைகள் அனைத்தும் ஒட்டுமொத்த நாட்டு மக்களின் உடைமை என்ற சோஷலிச

உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்கு தேவையான அத்தியாவசிய கொள்கைகளை தன்னுடைய ஷரத்துகளில் உள்ளடக்கி உள்ளது. அதற்கேற்ற வகையில் இந்த முன்மொழிவின் பொருளாதார கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. சந்தையின் பங்கு பாத்திரம், அரசுடைமை அல்லாத புதிய சொத்து வடிவங்கள் மற்றும் தனியார் சொத்துகள் போன்றவையும் கணக்கில் கொள்ளப்பட்டு, புதிய பொருளாதார திட்டமிடல்கள் செய்யப்பட்டுள்ளன. தன்னுடைய பிரத்தியேக பாணியில், கியூப அரசு கையெழுத்திட்டுள்ள சர்வதேச பத்திரங்களின் ஷரத்துகளுக்கு ஏற்ற வகையில், பல்வேறு பரவலான உரிமைகளை உள்ளடக்கி, அவை சிறப்பு கவனத்தை பெறும் வகையில் புதிய அரசியலமைப்பு சட்ட ஷரத்துகள் வடிவமைக்கப்படுள்ளன.

பாதுகாப்பிற்கான உரிமையும், அதற்கு தேவையான நடைமுறையும், சாமானியர்களும் பங்கேற்கும் வகையில் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு மறுவடிவம் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி என்பதாலோ, ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர் என்பதற்காகவோ, பாலினம் சார்ந்தோ பாகுபாட்டுடன் கியூப குடிமக்கள் நடத்தப்படக்கூடாது என்பதற்காக, ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் வகையிலான ஷரத்துகள் இணைக்கப்பட்டு, சமத்துவ உரிமை மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

அரசு அதிகாரிகள், ஊழியர்கள், இயக்குநர்கள் போன்றவர்களோ அல்லது அரசு அமைப்புகளோ-நிறுவனங்களோ தங்களுடைய முறையில்லாத நடவடிக்கைகளாலோ அல்லது செயல்படாத தன்மையாலோ தனிநபர்களுக்கு பாதிப்புகளை, நஷ்டங்களை ஏற்படுத்தும் பட்சத்தில், அவர்கள் தாங்கள் இழந்த உரிமைகளை திரும்பப் பெறுவதற்காக அல்லது நஷ்டஈடு பெறுவதற்காக நீதிமன்றங்களை அணுகி மனு தாக்கல் செய்து திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

திருமணத்தை பொறுத்தவரையில், தற்போது ''ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஒப்பந்தம்'' என்றிருப்பதை மாற்றி, திருமணம் என்பது ''இரு நபர்களுக்கு இடையிலான ஒப்பந்தம்'' என்று வரையறை செய்யப்பட்டு திருத்தப்பட்டுள்ளது.

அரசு அமைப்புகளுக்கிடையே ஒரு போதுமான சமநிலை இருக்கும் வகையில் புதிய அரசியலமைப்பின் சட்டவிதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. கியூபக் குடியரசு தலைவர் கியூப அரசின் (state) தலைமைப் பொறுப்பிலும், பிரதமர் கியூப அரசாங்கத்தின் (government) பொறுப்பாளராகவும் இருப்பார் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அதே நேரம், இருவரும் கியூப மக்கள் அதிகார பாராளுமன்ற பிரதிநிதிகளாகவும் இருக்க வேண்டும் என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

கியூப பாராளுமன்றத்தின் நிரந்தர அங்கமாக அரசவைக்குழு இருக்கும். இந்த அரசவைக்குழு பாராளுமன்றத்துடன் நெருக்கமான தொடர்புடையதாக இருக்கும். குறிப்பாக இரண்டு அமைப்புகளின் தலைவரும், துணைத்தலைவரும், செயலாளரும் ஒரே தனிநபர்களாக இருப்பர் என்பதால் அதிக தொடர்புடைய அமைப்புகளாக அவை இருக்கும். இதன் மூலமாக மக்கள் அதிகார பாராளுமன்றத்திற்கும், தேசத் தலைமைக்குமான இடைவெளி குறையும். மேலும் மக்களின் பிரநிதிகளில் ஒருவரே தேசத் தலைமைக்கும் வருவதால் மக்கள் அதிகார பாராளுமன்றத்திற்கு கட்டுப்பட்டவராகவும் அவர் இருப்பார்.

அரசு அமைப்புகளில் இன்னொரு முக்கியமான புதுமையான அம்சமாக, தேசிய தேர்தல் கவுன்சில் என்பது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கவுன்சில் இந்த பணிக்கென்றே பிரதியேகமாக இயங்கும். அதே போல கணக்கு தணிக்கையாளர் குறித்த ஷரத்தும் அரசியலமைப்பு சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், மாகாண குழுக்கள் என்பது நீக்கப்பட்டு, மாகாண அளவில் ஒரு ஆளுநர் மற்றும் கவுன்சிலுடன் கூடிய மாகாண அரசு அமைக்கப்படுகிறது. தேச நலனுக்கு உகந்த வகையில், தன்னாட்சி உரிமையுடன் பெரும் பங்காற்றக்கூடிய நிலையினை கியூப நகராட்சிகள் இந்த புதிய முன்மொழிவின் மூலம் பெறுகின்றன.

நகராட்சி நிர்வாகக்குழு என்பது நகராட்சியின் நிர்வாகத்தை கவனிக்கும் என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள தலைவர் (president or chief) என்ற சொல்லாடல் மாற்றப்பட்டு, கண்காணிப்பாளர் அல்லது மேற்பார்வையாளர் (superintendent) என்ற சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது. அவர்

நகராட்சி நிர்வாகக்குழுவின் தலைமைப் பொறுப்பில் இருப்பார் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

தேர்தலைப் பொறுத்தவரையில், 16 வயது பூர்த்தியடைந்த அனைத்து கியூப பிரஜைக்கும், (சட்டத்தில் விதிவிலக்காக சொல்லப்பட்டவர்கள் தவிர), வாக்குரிமை உண்டு என்பது மாற்றப்படாமல் அப்படியே வைக்கப்பட்டுள்ளது.

இராணுவம் மற்றும் தேச பாதுகாப்பு என்ற தலைப்பு இணைக்கப்பட்டுள்ளது. இதில் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் முக்கிய நோக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது. சட்டவிதிகளுக்குட்பட்டு, அமைதிகாலங்களில் சில கடமைகளை செய்வதற்கான அங்கீகாரம், பேரழிவு காலங்களில் சில கடமைகளை செய்வதற்கான அங்கீகாரம், இயற்கைக்கு மாறான பிற நிலைகளில் இந்த அமைப்பினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் போன்ற நோக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய நகல் தீர்மானத்தின் திருத்தத்தை செய்வதற்கென்று சில நபர்கள் அடையாளம் காணப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்டனர். அதே நேரம் இந்த ஷரத்துகள் விவாதத்திற்கு விடப்பட்டுள்ள இந்த இடைப்பட்ட காலத்தில் திருத்த முடியாதவைகளாகவும் இருக்கும் என்பதும் கவனிக்கத்தக்கது. இந்த புதிய நகல் தீர்மான திருத்தத்திற்கென்று தீர்மானிக்கப்பட்டுள்ள, மற்றும் அது நடைமுறை அமலுக்கு வர வேண்டிய தினத்தில், தேவையான மாறுதல்களுடன் நிறைவான அம்சங்கள் மற்றும் திருத்தப்பட்ட ஷரத்துகளுடன் புதிய அரசியலமைப்பு சட்ட விதிகள் நடைமுறைக்கு வரும்.

அரசியல் சார்ந்த அடிப்படை ஷரத்துகள்

இந்த தலைப்பு புதியது. பொருளாதார அடிப்படைகளிலிருந்து அரசியல் அடிப்படைகளை வேறுபடுத்திக் காட்டுவது. அரசியலமைப்புச் சட்டம்தான் உயர்ந்த பட்ச அதிகாரத்தை உடையது என்பதையும், நாட்டின் ஆட்சி அதிகாரத்திற்கான சட்ட விதிமுறைகள் என்பதையும் மீண்டும் உறுதிசெய்துள்ளது. சோஷலிச ஒழுங்கமைப்பை மேலும் வலுவூட்டும் வகையில், சட்டப்படி கியூப அரசு ஒரு சோஷலிச அரசு என்பது மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கியூப கம்யூனிஸ்ட் கட்சி நாட்டிலும், சமூகத்திலும் தொடர்ந்து தனது தலைமை பாத்திரத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. அதனுடைய ஜனநாயக குணாம்சமும், மக்களுடன் அந்த கட்சிக்குள்ள நெருக்கமான நிரந்தரமான உறவும் மீண்டும் அழுத்தமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. சட்ட வரையறைகளின்படி உருவாக்கப்பட்டுள்ள சங்கங்கள் மற்றும் அமைப்புகளை அரசு அங்கீகரிப்பதுடன், அவை செயல்படுவதற்கான பாதுகாப்பையும் அளிக்கும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அரசிற்கும் தேவாலயத்திற்குமான உறவு குறித்த விதிமுறைகள் தற்போது நடைமுறையில் உள்ள சாராம்சத்துடனே தொடர்கின்றன.

அரசியலமைப்பின் உச்சபட்ச அதிகாரத்தைப் பொறுத்த வரையில், அரசியலமைப்பு சட்ட விதிகளை உறுதியாக பின்பற்ற வேண்டியது அரசு மற்றும் கியூப மக்களின் கடமையாகும். அரசு அமைப்புகள், இயக்குநர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் செயல்பாடுகள் அனைத்தும் அரசியலமைப்பு விதிகளுக்குட்பட்டு இருக்க வேண்டும். குறிப்பாக சோஷலிச அரசு என்பதை உத்திரவாதப்படுத்தும் வகையில் இவர்களது செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளும், அவற்றின் ஊழியர்களும் அரசியலமைப்பு விதிகளுக்குட்பட்டு மக்களுக்கு உரிய மரியாதை அளிக்கவும், சேவைகளை செய்யவும் வேண்டும். மக்களுடன் நெருக்கமான பிணைப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பனவெல்லாம் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அரசு நிறைவேற்ற வேண்டிய அத்தியாவசியமான பொறுப்புகளில் கீழ்க்கண்ட அம்சங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

தேசத்தின் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும்.

1.தேச பாதுகாப்பினை எப்போதும் உறுதி செய்ய வேண்டும்.

2.தனி நபர் முன்னேற்றம் மற்றும் கூட்டு முன்னேற்றத்தினை

உத்திரவாதப்படுத்தும் வகையிலான நீடித்த வளர்ச்சியை உத்தரவாதப்படுத்த வேண்டும். சமூக நீதி மற்றும் உயர்ந்தபட்ச சமத்துவத்தை எட்டுவதற்காக பாடுபட வேண்டும். புரட்சியின் மூலம் நாம் எட்டிய சாதனைகளை பாதுகாப்பது மட்டுமல்லாமல் மேலும் விரிவுபடுத்தவும் முன்னேறவும் வேண்டும்.

3. சோஷலிச சமூக அமைப்பின் உள்ளார்ந்த இயல்பில் உள்ள ஒழுக்கங்களையும், சித்தாந்தத்தையும் மேலும் பலப்படுத்த வேண்டும்.

4. தேசத்தின் பூர்வீகமான, வரலாற்றுரீதியான, இயற்கை இயல்புடன் கூடிய கலாச்சாரங்களை பாதுகாக்க வேண்டும்.

போன்றவை முக்கியமாக இணைக்கப்பட்டுள்ள புதிய அம்சங்களாகும். அயலுறவு கொள்கைகளை பொறுத்தவரையில் ஏற்கனவே உள்ள அம்சங்கள் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன. இருந்தும் ஒரு சில அம்சங்களும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

அயலுறவு கொள்கைகளைப் பொறுத்தவரையில், அதன் சட்டவிதிமுறைகள் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளன. சில ஷரத்துகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில:-

சர்வதேச சட்டத்தை மதிக்க வேண்டும், பல துருவ நாடுகள் என்ற நிலை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஏகாதிபத்தியம், பாசிசம், காலனியாதிக்கம் அல்லது நவீன காலனியாதிக்கம் மற்றும் இது போன்ற பெயர்களில் எது வந்தாலும், அதற்கு கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டும். மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும். இனவெறி மற்றும் வேற்றுமை பாகுபாடுகளை ஏற்கக் கூடாது. ஆயுதப் பரவலையும், அணு ஆயுதங்களை பயன்படுத்துவது மற்றும் அணு ஆயுதப் பரவல் என்பதையும் நிராகரிக்க வேண்டும். சர்வதேச மனித இன நம்மைக்கான சட்டத்தை மீறி மக்களை பூண்டோடு அழிக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றை எதிர்க்க வேண்டும், நிராகரிக்க வேண்டும். அனைத்துவிதமான தீவிரவாதத்தையும் எதிர்ப்பதுடன் ஏற்க மறுத்து கண்டனம் தெரிவிக்க வேண்டும். குறிப்பாக தீவிரவாத அரசினை – அரசு தீவிரவாதத்தினை எதிர்க்க வேண்டும். சுற்றுச்சூழலை பேணிப் பாதுகாக்க வேண்டும். பருவ நிலை மாற்றத்திற்கெதிரான போராட்டத்தை நடத்த

வேண்டும் என்பது போன்ற அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அடிப்படைகள்

புதிய அம்சமாக சந்தை என்பது கணக்கில் கொள்ளப்பட்டு அதனை ஒழுங்குபடுத்துவதற்கான ஷரத்துகள் இணைக்கப்பட்டுள்ளன. சமூக நலனை பாதுகாக்கும் வகையில், சந்தையால் உருவாகும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உருவாகாமல் இருக்கும் வகையில் பொருளாதார திட்டமிடல்கள் செய்யப்பட்டுள்ளன.

சொத்துக்களின் பல்வேறு வகைகள் வரையறுக்கப்பட்டு அவை பட்டியலிடப்பட்டுள்ளன. தனிநபர்களுக்கு அல்லது கூட்டுறவு அமைப்புகளுக்கு சொந்தமில்லாத நிலங்கள், நிலத்தடி மண், சுரங்கங்கள், கியூபக் குடியரசிற்குட்பட்ட (உயிர்வாழ் மற்றும் உயிரற்ற) இயற்கை வளங்கள், காடுகள், நீர்வளங்கள், மற்றும் தகவல் தொடர்பு வழிகள் போன்ற ஒட்டு மொத்த மக்களின் சோஷலிச சொத்துக்கள் – அதாவது மக்களின் சார்பான அரசுடைமை சொத்துகள், கூட்டுறவு அமைப்புகளின் சொத்துகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வடிவங்களிலான சொத்துடமைகளின் கலவை, அரசியல், வெகுஜன மற்றும் சோஷலிச அமைப்புகளின் சொத்துகள், தனியார் சொத்துகள் மற்றும் உற்பத்திசாரா அதே நேரம் தனிநபர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான தனி நபர் உடைமையிலான சொத்துகள் என அனைத்தும் பட்டியலிடப்பட்டு, அவை அனைத்தும் கியூப பொருளாதாரத்தில் இடம் பெறுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இவை அனைத்துமே சோஷலிச தன்மையுடன் வளர்த்தெடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய நலன்கள், மாகாண நல்கன்கள் மற்றும் கியூப குடிமக்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் பொருளாதார செயல்பாடுகளும், சமூக பொருளாதார அபிவிருத்திக்கான திட்டமிடல்களும் இருக்க வேண்டும் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ற வகையில் அரசின் பொருளாதார நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள் உருவாக்கப்படும் என்று மீண்டும் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. ஏழாவது கட்சி காங்கிரசில் கூறப்பட்டுள்ளது போல, அரசின் பொருளாதார திட்டமிடல்களில்,

வழிகாட்டல்களில், கண்காணிப்பு அமைப்புகளில், ஒழுங்குமுறை அமைப்புகளில் என அனைத்திலும் தொழிலாளர்களின் பங்கு இருக்கும் என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேச இறையாண்மைக்கும், தேச வளங்களுக்கும் பங்கம் விளைவிக்காத வகையில் அந்நிய முதலீடுகள் அங்கீகரிக்கப்படும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

நியாயமான விலை கொடுத்து ஒரு நிலத்தை அரசு வாங்க முனைந்தால் அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதும், அதனை தடுக்காத வகையில் சட்ட திட்டங்களுக்குட்பட்டு தனிநபர்கள் நிலத்தை வாங்கவும் விற்கவும் செய்யலாம் என்ற ஒரு சிறப்பு ஷரத்து இணைக்கப்பட்டுள்ளது.

வாடகைக்கு விடுவதோ, குத்தகைக்கு விடுவதோ, நிலத்தை பிரிப்பதோ, அடமானம் வைப்பதோ அல்லது தனியார்கள் ஆதாயம் பெறும் வகையில் உரிமை மாற்றம் செய்வதோ போன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த தடைகள் அப்படியே தொடர்கின்றன.

குடியுரிமை

இதிலுள்ள அடிப்படை மாற்றம் என்னவென்றால், இரட்டை குடியுரிமை என்பதை நாம் அங்கீகரிக்கவில்லை என்பதை மாற்றி, ''பயனுள்ள சக்திமிக்க குடியுரிமை' என்ற கொள்கையின் அடிப்படையில், ''கியூப குடிமக்கள் கியூப நாட்டிற்குள், அங்குள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருப்பர் என்றும் ஒரு அந்நிய குடியுரிமையை உபயோகப்படுத்த முடியாது'' என்றும் மாற்றப்பட்டுள்ளது.

உரிமைகள், பொறுப்புகள் மற்றும் உத்தரவாதங்கள்

இந்த தலைப்பின் கீர் அரசியலமைப்பு சட்டம் முழுவதும் விரவிக் கிடக்கும் கியூப குடிமக்களின் உரிமைகளும், பொறுப்புகளும், அவர்களது உரிமைகளை மேலும் வலுவூட்டும் உத்தரவாதங்களும் ஒன்றாக தொகுக்கப்பட்டு, அவற்றை பாதுகாக்க கியூப அரசு செய்ய வேண்டிய கடமைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல மனித உரிமை கருத்தரங்கங்களில், கியூபா ஒத்துக்கொண்டு கையொப்பமிட்ட உடன்படிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகள் இந்த

தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

தனிநபர் உரிமைகள் என்பது, தேசிய சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள நல்லொழுக்க விதிகளுக்கும், கூட்டுப்பாதுகாப்பிற்கும், பிறருடைய உரிமைகளுக்கும் உட்பட்டதான எல்லைகளுடன் இருக்கும்.

பொது சுகாதாரம் மற்றும் மருத்துவம் என்ற ஷரத்துகளின் கீழ் அனைத்து பிரஜைகளுக்கும் இலவச மருத்துவம் என்பது உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. அதே போல அவர்கள் நோய்வாய்ப்படும்போது நோயிலிருந்து குணமாகும் வரை அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும் என்பதும் பொது மக்களை நோயிலிருந்து பாதுகாக்கும் வகையிலான சில சிறப்பு சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்பதும் மீண்டும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி குறித்த ஷரத்துகளில், இளநிலை பட்டப்படிப்பு(*under graduate*)க்கு முந்தைய நிலை வரையிலான பள்ளிக் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பதும், அது மதச்சார்பற்ற கல்வியாக இருக்க வேண்டும் என்பதும், கல்வி என்பது அனைவரது உரிமை என்பதும், கல்வியை அளிப்பதென்பது குடும்பங்கள் , அரசு மற்றும் சமுதாயத்தின் கடமை மற்றும் பொறுப்பு என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீதித்துறை சம்பந்தப்பட்ட பல ஷரத்துகளும், நீதி வழங்கல் பெறுதல் தொடர்பான பல புதிய உரிமைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நாம் கவனிக்கத்தக்க பல அம்சங்கள் உள்ளன. குறிப்பாக (*habeas corpus – to prevent arbitrary detentions*) மனிதாபிமானமற்ற முறையில் காவலில் வைத்திருப்பது, சிறையில் விசாரணையின்றி அடைக்கப்படுவதை தடுக்கும் வகையிலான ஷரத்துகள் இணைக்கப்பட்டுள்ளன. அதே போல கைது செய்யப்பட்டுள்ள அல்லது சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தும் ஷரத்துகளும் இணைக்கப்பட்டுள்ளன. பொது, ஆவணங்களில் உள்ள தனிநபர் புள்ளி விவரங்களை தெரிந்து கொள்வதற்கான உரிமையும் இணைக்கப்பட்டுள்ளது. அதேபோல, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன், அந்த தனி நபர்கள் கியூப சமூகத்திற்குள் மறுபடியும் சேர்க்கப்பட வேண்டும் என்ற ஷரத்தும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமக்களுக்கும் தேசத்தின் கலாச்சார கட்டமைப்பை உருவாக்கவும், பங்கு கொள்ளவும், கலாரசனையுடன் வாழவுமான உரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

தனிநபர்கள் செய்யும் வேலையின் அளவு, வேலையில் உள்ள சிக்கலின் தன்மை, தேவைப்படும் திறன், அந்த வேலையின் தரம், மற்றும் அந்த வேலையின் பயன்கள் என்பவற்றை பொறுத்து தனிநபர்கள் தங்களுடைய ஒப்பீட்டுத் தொகையை பெறுவதற்கான உரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

தரமான பொருட்களையும் சேவைகளையும் பெறுவதற்கான உரிமையும், அவை குறித்த தகவல்களை பெறும் உரிமையும், பொருத்தமான வகையில் பெறும் உரிமையும் இணைக்கப்பட்டுளளது.

இறுதியாக, குடிமை மற்றும் அரசியல் உரிமைகளும், அவர்களுது கடமைகளும் மேற்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஒருவது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள நீதிமன்றங்களை அணுகி கோருவதற்கும் நீதியை பெறுவதற்குமான வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கல்வியில், புரட்சிகர மதிப்புகள், ஒழுக்கவியல் விழுமங்கள், குடிமை மதிப்புகளின் முக்கியத்துவத்தை புதிய தலைமுறைகளுக்கு உறுதி செய்யும் வகையிலான கலாச்சார விஞ்ஞானப்பூர்வ கொள்கைகளை உருவாக்குவதில், தேசத்தின் பூர்வீக வரலாற்று வளங்கள் மற்றும் கலைகளுக்கு அரசு அளிக்கும் பாதுகாப்பு முறைகளில் இணைக்கப்பட வேண்டிய வழிமுறைகள் என்று அனைத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதற்கான சட்ட ஷரத்துகள் தொடர்கின்றன.

அரசின் கட்டமைப்பு

அரசின் உயர்மட்ட அமைப்புகள மற்றும் பிற அமைப்புகள் குறித்து இந்த தலைப்பு பேசுகிறது.

அத்தியாயம் 1

மக்கள் அதிகார பாராளுமன்றம் போன்றன அரசு அமைப்புகளின்

ஸ்தாபனம் மற்றம் செயல்பாட்டு முறைகள் குறித்து இந்த தலைப்பு விளக்குகிறது. இந்த அமைப்புகளுக்கான உறுப்பினர்களை தேர்வு செய்யும் முறை மற்றும் அவர்களுடைய செயல்பாடுகள் குறித்த வழிகாட்டல்கள் பற்றி விளக்குகிறது. சோஷலிச ஜனநாயகம் என்பது மீண்டும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

அத்தியாயம் 2

கியூபாவின் மக்கள் அதிகார பாராளுமன்றம் மற்றும் அரசவைக்குழு பற்றிய அத்தியாயம் இது. அரசின் உச்பட்ட அதிகாரம் பெற்ற அமைப்பு என்ற அந்தஸ்துடன் மக்கள் அதிகார பாராளுமன்றம் தற்போதும் தொடர்கிறது. இதற்கு மட்டுமே அரசியலமைப்பு விதிகள் மற்றும் சட்டங்களை இயற்றும் உரிமை உள்ளது. அதனுடைய தலைமைக்கு தலைவர், துணைத்தலைவர், மற்றும் செயலாளர் பொறுப்பாவார்கள். இதற்கு தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு விதிகளில் உள்ள அதிகாரங்களுடன் புதிதாக சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசியமைப்பு சட்டவிதிகளின் உட்பொருளை விளக்குவது, அவ்வப்போது எழும் நிலைமைகளுக்கு ஏற்ப இந்த அரசியலமைப்பு விதிகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்பை அளிப்பது, தேவைப்பட்டால் வரிகளை போடவும், நீக்கவுமான உரிமை, இந்த அமைப்பிற்குட்பட்ட வரம்பு உள்ளீட்டெல்லையுடன் கூடிய அதிகாரம், நிர்வாக படி நிலைகளில் அந்தந்த ஆட்சி வரம்புக்குட்பட்ட பிரதேச சட்டதிட்டங்களை வரையறுத்துக் கொடுப்பதற்கான அதிகாரம், நகராட்சிகளுக்கும், மாவட்டங்களுக்கும் மற்றும் பிற எல்லை வகுக்கப்பட்ட பகுதிகளுக்குமான சிறப்பு ஒழுங்குமுறை அமைப்புகளை உருவாக்குவதற்கான அதிகாரம் போன்றவை இணைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் அடிப்படை அமைப்புகளுக்கும் அரசாங்கத்தின் அடிப்படை அமைப்புகளுக்கும் உரிய பொறுப்பாளர் மற்றும் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது இந்த மக்கள் அதிகார பாராளுமன்றத்தின் பொறுப்பாகும். இதைத் தாண்டி கியூபக் குடியரசின் தலைவர் மற்றும் துணைத்தலைவர், தேசிய தேர்தல் கவுன்சிலின் உறுப்பினர்களை தேர்வு செய்வதும், பிரதம மந்திரி மற்றும் மாகாண ஆளுநர்களை நியமிப்பதும் இந்த மக்கள் அதிகார பாராளுமன்றத்தின் பொறுப்பாகும். ஏற்கனவே குறிப்பிட்டபடி அரசவைக்குழுவின் தலைமைப் பொறுப்பும், பாராளுமன்ற

தலைமைப் பொறுப்பும் ஒரே தனி நபர்களின் கீழ் இருக்கும். இதனுடைய நோக்கம் இந்த இரண்டு அமைப்புகளுக்கும் இடையே இன்னும் நெருக்கமான தொடர்பினை பயனுள்ள வகையில் ஏற்படுத்துவது என்பதாகும். தலைவர், துணைத்தலைவர், செயலாளர் தவிர்த்த பிற உறுப்பினர்களை அரசவை தேர்ந்தெடுக்கும். அதே நேரம் அரசவைக்குழு உறுப்பினர்கள் மந்திரி சபையிலோ அல்லது நீதித்துறை, தேர்தல் ஆணையம் அல்லது அரசாங்க கட்டுப்பாட்டு அமைப்புகளின் தலைமைப் பொறுப்புகளில் இருக்கக்கூடாது என்பதன் மூலம் ஒரு போதுமான அதிகார சமநிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அரசவைக்குழுவின் தற்போதைய அதிகாரங்கள் அப்படியே தொடர்கின்றன. அரசவைககுழுவினால் இயற்றப்படும் அரசாணைகளும், போடப்படும் ஒப்பந்தங்களும் மக்கள் அதிகார பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்குப் பிறகே அமலுக்கு வரும்.

அத்தியாயம் 3

கியூபக் குடியரசின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் பற்றி இந்த அத்தியாயம் பேசுகிறது. கியூபக் குடியரசின் தலைவர் கியூப நாட்டின் தலைவராக இருப்பார். இவர் மக்கள் அதிகார பாராளுமன்ற பிரநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார். இவரது ஆட்சிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

இந்த நபர் இரண்டு அடுத்தடுத்த ஆட்சிக்காலத்திற்கு பதவியில் தொடரலாம். அதன்பிறகு தொடர முடியாது. கியூபக் குடியரசு தலைவர் பிரதிநிதிகளின் அறுதி பெரும்பான்மை வாக்குகுளை பெற வேண்டும். வயது 35 பூர்த்தியாகியிருக்க வேண்டும். கியூபக் குடியுரிமை மற்றும் பிற அரசியல் உரிமைகளை பெற்றவராக இருக்க வேண்டும். பிறப்பால் கியூப குடிமகனாகவும், வேறு எந்த குடியுரிமையும் இல்லாதவராகவும் இருக்க வேண்டும். மேலும், அப்படி தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தன்னுடைய முதலாவது ஆட்சிக்காலத்தில் 60 வயது தாண்டியவராக இருத்தல் கூடாது.

இதே முறையில் தான் கியூபக் குடியரசின் துணைத்தலைவரும் அதே ஆட்சிக்காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவார். குடியரசு தலைவர்

நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவருக்கு பதிலாக அவரிடத்தில் இவர் செயல்படுவார். ஒரு வேளை குடியரசுத்தலைவர் பதவி காலியாகும்பட்சத்தில் அதற்கான மக்கள் அதிகார பாராளுமன்றம் பதில் நபரை மாற்றாக தேர்ந்தெடுக்கும். கியூபக் குடியரசின் தலைவரும், உதவித்தலைவரும் இல்லாத நிலையில், மக்கள் அதிகார பாராளுமன்றம் மாற்று நபர்களை பதிலாக தேர்ந்தெடுக்கும். அதற்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் அதிகார பாராளுமன்ற தலைவர் தற்காலிகமாக கியூபக் குடியரசின் தலைவராக செயல்படுவார்.

அத்தியாயம் 4

கியூப அரசாங்கம் பற்றிய அத்தியாயம் இது. மந்திரிகள் சபையின் அந்தஸ்து முன்பிருந்தபடியே அரசாங்கத்தின் உச்சபட்ச நிர்வாகக் குழுவாக இருக்கும். பிரதம மந்திரி இந்த சபையின் தலைமைப் பொறுப்பேற்று வழிநடத்துவார். துணை பிரதம மந்திரிகள் மற்றும் பிற மந்திரிகள், செயலாளர் மற்றும் பிற உறப்பினர்கள் சட்டப்படி தீர்மானிக்கப்படுவர். முறைப்படி கூடும் கூட்டங்களுக்கு மத்தியில் இடைப்பட்ட காலத்தில் மந்திரி சபையின் செயற்குழு கூடி தங்களுடைய அதிகார வரம்புகளுக்குட்பட்ட விஷயங்களில் முடிவுகளை எடுக்கும்.

இந்த மந்திரிகள் சபையின் அதிகாரம் முன்பு குறிப்பிட்ட அமைப்புகளைப்போலவே பழைய மாதிரியே தொடர்கின்றன. புதிய அரசியலமைப்பு சட்ட விதிகளின் படி, கியூபக் குடியரசு தலைவரின் முன்மொழிவின்படி, பாராளுமன்றம் பிரதம மந்திரியை 5 ஆண்டுகளுக்கு நியமனம் செய்யும். இவரும் பிரதிநிதிகளின் அறுதி பெரும்பான்மை வாக்குகளை பெற வேண்டும்.

அத்தியாயம் 5

சட்டங்கள் குறித்த அத்தியாயம் இது. ஏற்கனவே நடைமுறையில் சட்டங்கள் தொடர்பான விவகாரங்களில் உள்ளவர்களுடன், தற்போது கியூபக் குடியரசின் தலைவர், அரசு கணக்கு தணிக்கையாளர், தேசிய தேர்தல் குழு ஆகியோர் அவ்வவற்றின் அதிகாரம் படைத்த விவகாரங்களில் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த தலைப்பின் கீழ் தான் சட்டவிதிகள் அறிவிக்கப்படுவது மற்றும்

அமலுக்கு வரும் தேதி போன்ற விவகாரங்கள் வருகின்றன.

அத்தியாயம் 6

நீதிமன்றங்கள் பற்றியது. நீதியை வழங்குவதில் நீதிபதிகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் இருக்க வேண்டிய செயல்முறை சுதந்திரத்தின் அவசியத்தை மேலும் வலியுறுத்துகிறது. மக்கள் உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட கால இடைவெளியில் தன்னுடைய வேலை அறிக்கையினை மக்கள் அதிகார பாராளுமன்றத்திற்கு அளிக்க வேண்டும். இந்த உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் அதாவது குற்றவியல் நடுவர்கள்ம், பிற நீதிபதிகளும் தேசிய பாராளுமன்றத்தாலோ அல்லது அரசவைக்குழுவினாலோ தேர்ந்தெடுக்கப்படுவர். பிற நீதிபதிகளின் தேர்வு என்பது விதிகளுக்குட்பட்டு தீர்மானிக்கப்படும்.

அத்தியாயம் 7

கியூபக் குடியரசின் அட்டர்னி ஜெனரல், அலுவலகம் பற்றிய அத்தியாயம் இது. இதனுடைய அடிப்படை நோக்கங்களில் உள்ள குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள்—அரசியலமைப்பு சட்டவிதிகள், சட்டங்கள் மற்றும் பிற பொதுவான சட்ட வழிகளுக்குட்பட்டு குற்றவியல் விசாரணைகளுக்கு முன்னுரிமை அளித்து விசாரித்து அரசு சார்பாக எடுக்க வேண்டிய பொது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதேபோல இன்னொரு புதிய அம்சம் என்னவென்றால், அட்டர்னி ஜெனரல் குடியரசு தலைவரின் நேரடி கண்காணிப்புக்குட்பட்டவர் என்பதாகும்.

அத்தியாயம் 8

கியூபக் குடியரசின் அரசு தணிக்கையாளர், அலுவலகம் பற்றிய அத்தியாயம் இது. உயர்தரமான நிர்வாக இயங்குமுறையை உத்தரவாதப்படுத்துவது என்பது தான் இந்த அலுவலகத்தின் முக்கிய பொறுப்பு. அதே போல சரியான முறையில், வெளிப்படையான முறையில் பொது நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை உத்திரவாதப்படுத்த வேண்டும் என்பதும் முக்கிய நோக்கமாகும். இவரும் கியூபக் குடியரசுத் தலைவரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இருப்பார்.

அரசின் பிரதேச அமைப்புகள்

நாட்டின் அரசயில் நிர்வாக பிரிவுகள் சார்ந்தவற்றில் தற்போதைய சட்டவிதிமுறைகளுடன் புதிதாக சில ஷரத்துகள் இணைக்கப்பட்டுள்ளன. துணை நிர்வாக ஆட்சிமுறைகள் மற்றும் நகராட்சி அல்லது பிற பிரதேச அமைப்புகளுக்கான, மாவட்ட நிர்வாக அமைப்புகளுக்கான சிறப்பு ஒழுங்குமுறை அமைப்புகள் போன்றவற்றை உருவாக்குவது குறித்த ஷரத்துகள் இணைக்கப்பட்டுள்ளன. தேசிய ஸ்தாபத்தைப் பொறுத்த வரையில் நகராட்சி என்பது தான் அதனுடைய ஆரம்ப, அடிப்படை அரசியல் அலகு ஆகும். அதனுடைய சுய அதிகாரம் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அதனுடைய அமைப்புகளுக்கான நிர்வாகிகளை தேர்ந்தெடுததுக் கொள்ளும் உரிமையும், அதனிடம் உள் வளங்களை பயன்படுத்துவது குறித்து முடிவெடுக்கும் உரிமையும், அரசியலமைப்பு விதிமுறைகள் மற்றும் பிற சட்டங்களுக்குட்பட்டு அதிகார தகுதிகளை பயன்படுத்துவது போன்றவையும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதில் உள்ள முக்கியமான மாற்றம் என்னவென்றால், மாகாண குழுக்கள் என்பது நீக்கப்பட்டு, ஒரு ஆளுநர் தலைமையிலான ஒரு கவுன்சில் அமைக்கப்பட்ட அதன் தலைமையிலான ஒரு மாகாண அரசு அமைக்கப்படும் என்பதாகும்.

இந்த மாகாண அரசினை உருவாக்குவதற்கான அடிப்படை நோக்கம் என்னவென்றால், அந்த பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் சமூக பொருளாதார முன்னற்றத்திற்கு பாடுபடுவது, நகராட்சி மற்றும் மத்திய அரசாங்கங்களுக்கிடையே ஒரு ஒருங்கிணைப்பை உத்திரவாதப்படுத்துவது, வழிகாட்டுவது, கண்காணிப்பது, பயிற்சி அளிப்பது போன்ற தேவைப்படும் அனைத்தையும் செய்வது என்பதாகும்.

மேலும், இந்த மாகாண அரசு அந்த மாகாணம் மற்றும் அதற்குட்பட்ட நகராட்சிகளின் நலன்களை பாதுகாக்க வேண்டிய வகையில் அரசியலமைப்பு சட்டவிதிகள் மற்றும் பிற சட்டங்களுக்குட்பட்டு செய்ய வேண்டும்.

இந்த மாகாணக்குழு என்பது ஆளுநரின் தலைமையில் இயங்கும். இதில் மக்கள் அதிகார நகராட்சி குழுக்களின் தலைவர்கள் உறுப்பினர்களாக இருப்ப. இவர்களோடு கூட நகராட்சி நிர்வாகக் குழுக்களின் மேற்பார்வையாளர்களும், சட்டத்தால் தீர்மானிக்கப்படும் பிறரும் உறுப்பினர்களாக இருப்பார்கள். மாகாணத்தில் உச்சபட்ச நிர்வாகத் தலைமைப் பொறுப்பில் ஆளுநர்

இருப்பார். இவர்க மக்கள் அதிகார பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுவார். இவரது ஆட்சிக்காலம் 5 வருடங்கள். மந்திரி சபை இயற்றும் கொள்கைகளுக்கேற்ப மாகாணத்தில் நிர்வாகக் கட்டமைப்பில் தேவையானவற்றை செய்து மாகாண நிர்வாகத்தை நடத்த வேண்டியது இவரது பொறுப்பாகும்.

இந்த முன்மொழிவின் படி ஒரு துணை ஆளுநரும் மந்திரி சபையால் நியமிக்கப்படுவார். இவருடைய ஆட்சிக்காலமும் 5 ஆண்டுகள் தான்.

5 ஆண்டுகளுக்கொரு முறை நகராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று இந்த முன்மொழிவில் வரையறுக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதி மக்களின் உரிமைகளை உத்திரவாதப்படுத்துவதும், அவர்களின் பங்களிப்பை உறுதிசெய்வதும், அவர்களது உரிமைகளுக்ககான கோரிக்கைகளை அனுமதித்து அவற்றை பூர்த்தி செய்து கொடுப்பதை உறுதிப்படுத்துவதும் இந்த நாகராட்சி சபைகளின் பொறுப்பாகும்.

நகராட்சி நிர்வாகக் குழுக்களை பொறுத்தவரையில், அதனுடைய உறுப்பினர்கள் நகராட்சி சபைகளால் நியமிக்கப்படுவர். இந்த நிர்வாகக் குழுக்கள் நகராட்சி சபைகளின் துணை அமைப்புகளாக இயங்கும். இந்த மட்டத்திலான நிர்வாகம் இந்த அமைப்பினால் கவனிக்கப்படும். இங்கு குறிப்பிடத்தகுந்த மற்றொரு மாற்றம் என்பது இந்த நிர்வாக குழுவினை அதனுடைய மேற்பார்வையாளர் வழி நடத்துவார்.

தேர்தல் அமைப்பு

வாக்களிப்பது என்பது அனைத்து பிரஜைகளின் உரிமை மற்றும் பொறுப்பாகும். அவரவர் விருப்பப்படி சுதந்திரமாக வாக்களிக்கலாம், நேரடியாக வாக்களிக்கலாம், வாக்களிப்பதில் அனைவருக்கும் சம உரிமை உண்டு, இரகசிய வாக்களிப்பாகவும் இருக்கும் என்பன மீண்டும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. வாக்களிப்பதற்கான வயது வரம்பு 16 என்பது அப்படியே தொடர்கிறது.

தேசிய தேர்தல் குழு அரசின் நிரந்தர அமைப்பாக இருக்கும். இந்த

அமைப்பு தேர்தல் பணிக்கென்றே பிரத்தியேகமாக உருவாக்கப்படுகிறது. தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வது, அனைவரையும் ஓட்டுப் போட வைப்பது, தேர்தலை முறையாக கண்காணிப்பது மக்கள் மத்தியில் கருத்துகளை கேட்பது, பொது முக்கியத்துவம் வாய்ந்த சில விஷயங்களில் மக்கள் வாக்கினை பதிவு செய்வது, பொது வாக்கெடுப்பிற்கு அழைப்பு விடுப்பது, தேர்தல் சம்பந்தமான விவகாரங்களில் வரும் புகார்களுக்கு தீர்வு அளிப்பது போன்றவை இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களாகும்.

இந்த அமைப்பு சுய அதிகாரம் பெற்ற அமைப்பாக இருக்கும். மக்கள் அதிகார பாராளுமன்றத்திற்கு மட்டுமே பதிலளிக்கக் கூடியது. தேர்தல் நடந்து முடிந்தவுடன் இந்த குழு தேர்தல் முடிவுகளை நாட்டிற்கு அறிவிக்கும்.

தேசிய இராணுவம் மற்றும் பாதுகாப்பு

தேசிய இராணுவ குழு அரசின் உச்சபட்ச அமைப்பாகும் அமைதிக்காலங்களில் இராணுவத்திற்கான ஆள் சேர்ப்பு, பயிற்சி அளித்தல், வழிகாட்டல்கள் அளித்தல் போன்றவை இதனுடைய பொறுப்பாகும். மேலும், இராணுவம் மற்றும் தேச பாதுகாப்பு குறித்த விவகாரங்களில் வகுக்கப்பட்டுள்ள சட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுவதை பொறுப்புடையது.

சில பிரத்தியேக மற்றும் பேரழிவு காலங்களில், இந்த குழு நாட்டிற்கு சில வழிகாட்டல்களை கொடுப்பதுடன், அரசாங்க மற்றும் அரசு அமைப்புகளின் மீது அதிகாரம் செலுத்தவல்லது. தேசிய சபையின் அரசியலமைப்பு அதிகாரத்திற்கு இந்த விதி பொருந்தாது.

இந்த அமைப்பின் தலைவராக கியூபக் குடியரசு தலைவர் இருப்பார். அவர் ஒரு துணை தலைவரை நியமிப்பார். பிற உறுப்பினர்கள் சட்டப்படி தீர்மானிக்கப்படுவர்.

இது நாட்டின் ஆயுதப் படைகள் என்பது புரட்சிகர ஆயுதப் படைகளாக இருக்கும் என்று நிர்மாணம் செய்துள்ளது. உள்துறை அமைச்சகமானது தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்காக இராணுவம் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் காவல்துறை உள்ளிட்ட பிற கட்டமைப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம் என்று நிர்மாணித்துள்ளது.

அரசியலமைப்பு சீர்திருத்தம்

மக்கள் அதிகார பாராளுமன்றத்தில் பெயர் பட்டியலின்படி வாய்மொழி வாக்கெடுப்பு நடத்தி, அதன் பிரதிநிதிகளின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளை பெற்று மட்டுமே, அரசியலமைப்பு சட்டவிதிகள் திருத்தப்படும் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சட்ட விதிகளை திருத்துவதற்கான முன்மொழிவினை கொடுக்கும் அதிகாரம் படைத்தவர்கள் –

கியூபக் குடியரசு தலைவர், அரசவை, மந்திரிகள் சபை, (மூன்றில் இரண்டு பங்கு பிரதிநிதிகள் கையெழுத்திட்டு முன்மொழிவினை அளிக்கும்பட்சத்தில்) தேசிய பாராளுமன்ற பிரதிநிதிகள், தேசிய தேர்தல் கவுன்சிலின் முன்பு குறைந்தபட்சம் 50000 தகுதி பெற்ற வாக்காளர்கள் கையெழுத்திட்டு மக்கள் அதிகார பாராளுமன்றத்திற்கு விண்ணப்பிக்கும்போது.

இப்படிப்பட்ட முன்மொழிவு எங்கு முன்வைக்கப்பட்டாலும், நாட்டின் வாக்களிக்க தகுதி பெற்ற வாக்காளர்களின் பெரும்பான்மை வாக்கினை, இந்த நோக்கத்திற்காகவே நடத்தப்படும் பொது வாக்கெடுப்பில் பெற்றால் மட்டுமே, முன்மொழியப்பட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்படும்.

"நாட்டின் சோஷலிசக் கொள்கை மற்றும் அரசியல், சமூக, பொருளாதார கட்டமைப்புகள் மாற்றத்தக்கவை அல்ல. மேலும் அந்நிய சக்திகளின் மிரட்டலுக்கு உட்பட்டோ, பலவந்தப்படுத்தலுக்கு உட்பட்டோ, நிர்பந்தங்களின் மூலமாகவோ இதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது" என்று இந்த புதிய நகல் தீர்மானத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கணியம் அறக்கட்டளை

தொலை நோக்கு – *Vision*

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

பணி இலக்கு – *Mission*

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

எமது பணிகள்

கணியம் மின்னிதழ்*kaniyam.com)*

கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.

• கட்டற்ற தமிழ் நூல்கள் *(FreeTamilEbooks.com)* இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் *epub, mobi, A4 PDF, 6 inch PDF* வடிவங்களில் வெளியிடுகிறோம்.

• தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்

• தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

• விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்

*OpenStreetMap.org*ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation

Account Number : 606 1010 100 502 79

Union Bank Of India

West Tambaram, Chennai

IFSC – UBIN0560618

Account Type : Current Account